80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய், அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை. | திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.) | மிகு அநுபவம்.

கமலம்-9.	சென்னை பவ௵ மார்கழி௴ 1௳	இதழ்-105.
Vol. 9.	1934௵ டிசம்பர்௴ 15௳	No. 105.



“மாதவனைப்போற்றி மாவினையை யகற்று” லக்ஷ்மீபதியாகிய ஸ்ரீ ஹரியைப் பிரார்த்தித்தால் ஸகல பாபங்களும் பஞ்சுபோல் பறந்து போம். தேவர்கட்கு நேர்ந்த விபத்தைத் தீர்த்தருளிய தேவாதி தேவனே ஸர்வலோக சரண்யன். யானையாகிய கஜேந்திரன் முதலை வாயினின்று விடுபட்டதற்குக் காரணம் ஸ்ரீயப்பதியின் கிருபைதான். வானரமாகிய ஹனுமார் பூஜ்யரானதற்குக் காரணம் இரகுநாதரின் பாதஸேவையே. பக்ஷியாகிய கருடன் பதம் பெற்றது திருமாலின் திருவருளேதான் இப்படியே, உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜீவ ஜெந்துவையும் இரக்ஷிப்பதற்கென்று பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் பகவான் நம்மையும் ஆதரிக்குமாறு நாம் அவருடைய கமலத் திருவடிகளை ஸதா காலமும் தியானம் செய்யக்கடவோம்.

ஃ

“பாலும் பழமும்” இவ்விரண்டும் இனியவை. உத்தமர்களான இரண்டு நண்பர்கள் ஒன்றுகூடியது போலவும், பிரேமமயமான ஸதிபதிகளின் சந்திப்பு போலவும் பாலும் பழமும் ஒன்று கூடுகையில் சுவை அதிகரித்து

☞ பத்திரிகையைத் திறந்ததும் முதல் பக்கத்தில் பகவானுடைய நினைவை யுண்டாக்கி, ஞானபக்தி வைராக்கியங்களைப்பற்றிப் போதிக்கும் பத்திரிகை தமிழ் நாட்டில் “அமிர்த குணபோதினி” ஒன்றேதான்.

விடுகின்றன. பாலையும் பழத்தையும் விரும்பாதவர் உளரோ? ஹிந்து சாஸ்திர ரீதியாக ஏழுவித ஸமுத்திரங்களிருக்கின்றன. அவற்றில் மகா விஷ்ணு பாற்கடலை இருப்பிடமாகக் கொள்வானேன்? இரக்ஷக கர்த்தாவாகிய அவர் ஜீவகோடிகளாகிய தம்முடைய குழந்தைகளின் பசியை யாற்றுவதற்காகவே பாற்கடலில் பள்ளிகொண்டார். குழந்தைகள் தாயின் காலைச் சுற்றுவதும், அவளுடைய இடுப்பில் தாவுவதற்காகத் தரையில் நின்று எழும்பி எழும்பிக் குதிப்பதும், எட்டாவிட்டால் அழுதழுது புலம்புவதும் பாலுக்கன்றோ? அதுபோல், பக்தர்களாகிய நாம் பரந்தாமனைப் போற்றுவது (கருணையாகிய) பாலுக்குத்தானென்று வாஸுதேவன் பாற்கடலிற் பள்ளிகொண்டார் போலும்.

ஃ

"மண்மகளும் பொன்மகளும்" இவ்விருவரும் உபய நாச்சியார்களெனப்படுவர். இவ்விருவரும் ஸ்ரீ ஹரியை விட்டுப் பிரியாமலிருப்பதால் அவரை ஆசிரயிக்கும் பக்தர்களுக்குவேண்டிய தனமும் நிலமும் கிடைக்கின்றன. இராக்ஷஸனும், சத்துரு பக்ஷத்திலிருந்து வந்தவனுமாகிய விபீஷணனே ஸ்ரீ ஹரியை நேசித்து இலங்கையையும் அதிலுள்ள மகதைசுவரியங்களையும் பெற்றானெனின், மற்றப் பக்தர்கள் அவரைத் தியானித்து ஸகல ஐசுவரியங்களையும் அடையத் தடையென்ன? ஆதலின், இறக்கு மளவும் ஸ்ரீ ஹரியை மறவாதிருக்கக் கடவோம்.

ஃ

"அதிர்ப்தி எப்போது ஜெனிக்கிறது?" நோயுள்ளவர்களும், துர்ப்பலர்களும், ஸகிப்பு இல்லாத ஸ்திரீகளும், வெறிகொண்டவர்களும் கோபத்தையடைகின்றனர். கோபம் கொடிது. கோபமுண்டாவதற்கு முக்கிய காரணம் அஸந்துஷ்டியே. மனோத்ஸாகமுள்ளவர்கள் கோபம் கொள்ளார். அஸந்துஷ்டியென்பது அதிருப்தியாலுண்டாகும் குணம். அதிர்ப்தி எப்போது ஜெனிக்கிறது? நாம் கோரும் விஷயம் நமக்குக் கிடைக்காதபோதுதான். ஆகவே, ஒரு விஷயத்தையும் அபேக்ஷியாமலிருந்தால் அதிருப்தி யுண்டாகாது. அஸந்துஷ்டி ஜனிக்காது. கோபம் பிறக்காது. பாபம் ஸித்திக்காது. இதை யறிந்துதான் பெரியோர்கள் அபேக்ஷை அபிமானம் முதலியவற்றைத் தங்கள் மனதிலிருந்து சிறிது சிறிதாகத் துரத்திவிடுகிறார்கள். எந்தப் பொருளிலும் (அதிக) விருப்பம் இல்லாதிருப்பது நன்மை.

ஃ

"மரணத்திற்கு நாலண்டையும் மார்க்கம்" எதுவோ ஒரு சொற்ப காரணத்தால் மாந்தரின் ஆவி ஒரு க்ஷண காலத்திற் பிரிந்து விடுகின்றது. குளத்தில் இறங்குகையில் சற்றே தவறினாலும் தடுமாற்றம் உண்டானாலும் ஜலத்தில் மூழ்கி இறக்கவைக்கின்றது. ஒரு சிறுநோய், ஒரு சிறு புண், ஒரு முள் குத்திக் காயம் இவற்றாலும் மரணம் நெருங்கி விடுகின்றது. ஒரு

மற்ற ஜாதியார்கள் தாங்கள் தங்கள் தேசங்களில் எப்படி வாழ்ந்து வருகிறார்களோ, அப்படியே தன் தேசத்தாரும் தங்களுடைய தேசத்தில் வாழவேண்டு மென்பது தன் விருப்பம் என்று ஸ்ரீ கோகலே கூறியுள்ளார்.

கிராமத்தில் ஒரு ஸ்திரீ கிளியை வளர்த்தாள். கிளி ஒருநாள் கூட்டிலிருந்து கீழே இறங்கிப் பாத்திரங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டது. கிளியைக் காணாமல் அம்மாது வீடெல்லாம் தேடுகையில் இது ஒரு மூலையிலிருந்து கீச்சு கீச்சென்றது. அவள் அதன் குரலைக் கேட்டதும் அதைப் பிடிப்பதற்காகக் கையை நீட்டினாள். கையை வெடுக்கென்று கடித்தது. அது அதன் வழக்கமென்று மற்றொரு முறை கையை நீட்டவே முன்னிலும் அதிகமாய்க் கடித்து நோவுண்டாக்கிற்று. அவள் ஸந்தேகங்கொண்டு பார்க்கையில் கிளியல்ல, ஸர்ப்பமாயிருந்தது. சில நிமிஷத்துக்குள் அந்த ஸ்திரீ மரணமடைந்தாள். கிளியினிடத்து வைத்த ஆசையே மரணத்துக்குக் காரணமாயிற்று. ஆதலின், எந்த நிமிஷத்தில் மரணமோவென்று அஞ்சி, நமக்கு இப்போது பகவானின் அருளால் கிடைத்துள்ள சொற்ப காலத்திலேயே பகவத் பக்தி செய்து அவரது கிருபைக்குப் பாத்திரராகக் கடவோம்.

ஃ

"ஏகாக்கிர சித்தம்" என்பது ஈசுவர உபாஸனையால் வரக்கூடியதென்று ஆசாரியர் கூறுகிறார். சித்தமானது பல இடங்களிலும் செல்லாமல் ஒன்றையே பற்றியிருக்கும் தன்மையை யடைவதற்கு நாம் பகவானையுபவாஸிக்க வேண்டும் அவருடைய அருளில்லாமல் அவ்வித சக்தியை யடைய முடியாது. கீதையில் வாயுவை நிறுத்துவது எத்தனை பிரயாஸமோ, அத்தனை பிரயாஸம் மனதை நிறுத்துவதிலுண்டாகுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஞானவாஸிஷ்டத்தில் மேருவைப் பெயர்த்தாலும் பெயர்க்கலாம், நெருப்பை விழுங்கினாலும் விழுங்கலாம், ஸமுத்திரத்தைக் குடித்தாலும் குடிக்கலாம், மனதை நிறுத்த முடியாதென்று சொல்லப்படுகிறது. ஆதலின், ஈசுவர உபாஸனையாலன்றி எகாக்கிர சித்தம் வருவதருமை.

ஃ

"விவேகிகளும் அவிவேகிகளும்" விவேகியின் தப்பிதம் அவனுக்கு மட்டும் தெரியும்; உலகத்தாருக்குத் தெரியாது. அவிவேகியின் தவறோ அவன் அறியான்; உலகத்தார் அந்தத் தவறை யறிந்து தூற்றுவர். விவேகி, அவிவேகி—இருவகையோரும் துன்பம் அனுபவிக்க நேரினும், விவேகி தான் அதற்குக் காரணமல்லவென்றும் முன் வினையே யென்றும் எண்ணிப் பகவானை நம்பித் தைரியமாயிருப்பான். அவிவேகியோ பயந்து சாவன். இதற்கொரு உபமானம் உண்டு. ஒரு ஊரை நாடிச்செல்லும் இருவரில், ஏற்கெனவே அவ்வூரைப் பார்த்திருப்பவன் இரவில் தங்குமிடம் இன்னதென்று தாராளமாய் அறிந்து தைரியமாயும் உத்ஸாகமாயும் நடப்பான். அவ்வூரைக் கண்டறியாதவனோ இரவில் எங்கு உண்போம், எங்கு உறங்குவோம் என்ற கவலையோடும் வழிநடந்து செல்வான். இருவரும் இரவில் ஒரு ஊரில் தங்கவேண்டியவர்களே. ஆயினும், ஒருவனுக்குத் துக்கமும்

புகைப்போக்கியைத் திறந்துவைப்பது புகைப் போக்கியின் க்ஷேமத்திற்காகவல்ல. ஆனால், அதைத் திறந்துவைப்பதால் காப்பாற்றப்படும் அந்த யந்திரத்தின் க்ஷேமத்துக்காகவேதான். அவ்விதமே, சிலரது நேசம் நட்பை வளர்ப்பதற்காகவல்ல; தங்களின் காரியத்தை நிறைவேற்றிக் [illegible] தற்காகவேயாம்.

மற்றொருவனுக்கு ஏக்கமும் உண்டாவதுபோல், பிராப்த கருமத்தை யனுப விக்கும் ஞானிக்கு தைர்யமும், அஞ்ஞானிக்கு ஏக்கமும் உண்டாகின்றன.

ஃ

"ஜென்மபுத்தி மாறாது" ஞான முண்டானாலும் அவனவனுடைய பிரகிருதி (சுபாவம்) போகாது என்பது கீதையின் வாக்கு. இதற்கு உதாரணங்கள் பல கொடுக்கலாம். எவ்வளவோ கற்றறிந்தும் சிலர் மிகக் கேவலமான சிற்றின்பப் பிரியர்களாய் மதுபானிகளாய் இருக்கின்றனர். இது பூர்வகுணத்தின் தன்மை. சிலர் எத்துணைச் செல்வர்களாக உயரினும் இழிதன்மையான சிந்தையும் லோபகுணமுமே மிகுந்துள்ளார். இது சென்ற ஜென்மத்தின் புத்தி. அபத்தியம் செய்தால் ஜ்வரம் வருமென்று தெரிந்தும் சிலர் மீறிச் செய்கின்றனர். திருடினால் தண்டனை கிடைக்குமென்று தெரிந்தும் திருடுகின்றனர். அன்னியனுடைய ஸ்திரீயிடம் இஷ்டம் பண்ணுவது அபாயகரமென்று அறிந்தும் துணிகின்றனர். இதற்குக் காரணம் அஞ்ஞானமல்ல, முன்ஜென்ம வாஸனையின் தோஷமேயாம். இவ்விதமே போன ஜென்மத்தில் ஞான பக்குவம் எய்தினோர், இந்த ஜென்மத்தில் சில காலம் சாமான்யர்கள்போல் திரிந்து, அந்தக் காலபக்குவம் ஒத்துக்கொண்டதும் திடீரென்று அனைத்தையும் துறந்து ஞானிகளாய்ப் புது உருவினராகி விடுகின்றனர். பிறகு அவர்கள் மாறுவதேயில்லை.

ஃ

"வறுத்த விதை, வறுக்காத விதை" ஞானிக்கு உண்டாகும் ஆசையை வறுத்த விதைக்கும், அஞ்ஞானிக்கு ஜனிக்கும் ஆசையை வறுக்காத விதைக்கும் ஆசாரியர் உவமையிடுகிறார். வறுத்த விதையானது மறுபடி முளைக்கும் சக்தியைப் பெற்றிலது. அதுபோல் ஞானிக்கு போகம் வரினும் (இல்லற சுகங்கள் வாய்ப்பினும்) அனுபவித்த பின்னர் அடங்கிப் போம். மறுபடியும் அதில் மனம் பிரவர்த்திக்காது. வறுக்காத விதை முளைக்கும் தன்மை யுடையதுபோல், அஞ்ஞானிக்கு உண்டாகும் ஆசை அனுபவித்த மாத்திரத்தில் அடங்காமல் மேன்மேலும் பெருகும். இதற்குச் சுலபமான உதாரணம் கொடுக்கலாம். புத்திசாலிகளான பிள்ளைகட்குப் படிப்பில் மனம் செல்லுமேயன்றி, நாடகம் பார்ப்பதில் செல்லாது. ஒரு வேளை சென்றாலும் ஒருநாள் போய்ப் பார்த்தவுடன், (விசுவாமித்திரருக்கு மேனகையினிடத்திருந்த மோகம் தீர்ந்ததுபோல்) ஆசை அடங்கிப்போம். மறுபடியும் நாடகத்துக்குப் போய்ப் படிப்பைக் கெடுத்துக்கொள்ளார். மூடர்களான மாணாக்கர்கள் ஒருதரம் நாடகம் கண்டால் மறுபடி பார்க்காமவிரார். அவர்களுடைய படிப்பும் நாசமடையும். பக்குவவிகளை வறுத்த விதைக்கும், திருந்தாத அபக்குவவிகளை வறுக்காத விதைக்கும் சமமாகச் சொல்லலாம்.

ஃ

'இயற்கையான ஆநந்தம்" ஒவ்வொருவருடைய அந்தக்கரணத்திலும் ஸ்வபாவமாக ஒருவித ஆநந்தமுண்டு. இதை அகங்காரம் மறைத்து

உலகத்திலுள்ள ஜாதியாருக்குள்ளே ராஜதந்திர விஷயத்தில் சக்தியே முதல் பிரயோகமாயிருக்கிறது. நியாயம் என்பது முதலில் நிற்பதில்லை.

விடுகிறது. விளக்கைத் திரைகள் மறைத்து இருளை யுண்டாக்குவதுபோல், அகங்காரமானது ஸ்வபாவமான ஆநந்தத்தை மறைத்துத் துக்கத்தைத் தோற்று விக்கிறது. நித்திரையின்போது சுகம் துக்கம் தோன்றுகிறதில்லை. சுகத்தையும் துக்கத்தையும் அலக்ஷியம் செய்வது உதாஸீனம் எனப்படும். இவ்விதம் உதாஸீனம் செய்வோர் ஸ்வபாவ ஆநந்தத்தை யுணரும் தன்மையராய் பகவானை நெருங்குவதற்கு அருகராய் ஜ்வலிப்பர்.

ஃ

"நேற்று நிகழ்ந்ததை இன்று நினைப்பின் அது ஒரு சொர்ப்பனமே." உலகமே ஸ்வப்பனமயம். நித்திரையிலுண்டாகும் சொற்பனத்திலே ஒருவன் பிச்சை யெடுக்கிறான்; மற்றொருவன் அரசாளுகிறான். இவ்விருவரில் அரச பதவி கண்டவனின் சுகம் சிறந்ததே. ஆயினும், எதுவரை அவனுடைய நிலைமை உயர்ந்திருக்கும்? விழிப்பு வருமளவுமே. விழித்துக்கொண்டதும் இருவரும் ஒரே நிலைமையை யடைகின்றனர். சொற்பனத்தில் பிக்ஷை எடுத்தவன் விழித்துக் கொண்டவுடன் துக்கத்தினின்று விடுபடுகிறான். சொற்பனத்தில் அரசாண்டவன் விழிப்பு வந்தவுடன் இராஜ சுகத்தைத் துறக்கிறான். இருவரும் பொய்யான துக்க சுகங்களை யனுபவித்தோ மென்று வெட்கமடைந்து வெளியே சொல்லாமல் மௌனமாயிருந்து விடுகிறார்கள். அவர்களுடைய கஷ்டமும் சுகமும் தொலைகின்றன. அது போல், விழிப்பு நிலையில் படும் சுகமும் துக்கமும் இறந்தபின் இல்லை; அல்லது, ஞானத்தை யடைந்த க்ஷணம் நீங்கிப்போம். இந்த ஞானத்தை யடைந்தவர்கள் முன்பு தாங்கள் அனுபவித்த சுக துக்கங்களை நினைத்துச் சிரிப்பர்.

ஃ

"சிறந்ததைத் தேடிப் பெறுதல்" ஒரு பெரிய நகரில் உப்பாறும், காவிரியாறும் ஓடினால், புத்திசாலிகள் எந்த ஆற்றில் முழுகுவர்? சுத்த தீர்த்தம் நிறைந்த காவிரியிலேதான். ஆனால், உப்பாற்றை விரும்புவோர் இரா‍ரோ? இருப்பர்தான். சோம்பலை மேற்கொண்டவர்களும், சுத்த மின்னதென்றறியாதவர்களும், கீழ் மக்களும் உப்பு ஜலத்தில் நீராடி அந்த ஜலத்தையே பானம் பண்ணுவர். இப்படியே, ஒவ்வொரு வஸ்துவின் தன்மையையும் பரீக்ஷித்து சிறந்ததைக் கொள்வது விவேகிகளின் கடமையாயும், விசாரியாமல் தாழ்ந்ததைக்கொள்வது அவிவேகிகளின் காரியமாயுமிருக்கின்றது. சமீபத்திலிருந்து கிடைப்பதான இவ்வுலக சுகமாகிய உப்பாற்றிலேயே திருப்திகொண்டு விடுவோர் அவிவேகிகளாவர். இவ்வுலக இன்பத்தைவிட எது சிறந்ததென ஆராய்ந்து, பிறவிப் பிணியைப் போக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் பகவத் பக்தியிலீடுபடுவோர் விவேகிகளாயும் ஞானிகளாயும் ஜ்வலித்துப் பகவானுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமாவார்கள். அவ்விதம் நாம் சற்பாத்திரர்களாவதற்கான வழியைத் தெரிந்து கொண்டு பகவத் பக்தர்களாய் உய்யக்கடவோம்.

குழந்தையினிடத்தில் அதிக பக்ஷமாய் வளர்க்கும் தாயார், ஒரு பக்ஷமில்லாத மாற்றாந்தாயைக் காட்டிலும், (நாளாவட்டத்தில் அக்குழந்தையின் பருவ நிலையில் அதற்கேற்படும் கெட்ட குணங்களால்) கெட்ட தாயெனப் பேரெடுக்கிறாள்.

அமிர்தகுணபோதினி

பவ௵ மார்கழி௴ 1௨

ஸ்ரீமான் பச்சையப்ப முதலியாரின் பரோபகார வாழ்க்கை.

மகா தர்மிஷ்டரான அவரது அரும்பெருங் குணங்கள்.

(1754—1794.)

ஆற்காட்டு நவாப்புடன் ஆங்கிலேயர் சிநேகக் கட்டுப்பாடு செய்துகொண்டு, சென்னப்பட்டணத்தில் தங்களின் சேனைகளை இருத்தி, எவ்வித துரைத்தன ஆளுகையும் நடத்தாமல், வியாபாரக் கூட்டத்தாராக மட்டுமே இருந்து வந்த காலத்தில், நமது பச்சையப்ப முதலியாரின் சரித்திரம் ஆரம்பமாகின்றது. அப்பொழுது பிரான்சுக்காரரும் வர்த்தகம் செய்யும் கருத்தை நாடினவர்களாய் வந்திருந்தார்கள். பச்சையப்ப முதலியார் துபாசியாக இருந்தே பெருஞ் செல்வம் திரட்டியவராதலின், அவர் காலத்தில் துபாஷிகளின் சம்பாத்தியம் எவ்வாறிருந்ததென்பதை இங்கு விவரித்தால்தான் அவரது சரித்திரம் செவ்வையாக விளங்கும். இந்தியாவில் அதிபதிகளாயிருந்த ஆற்காட்டு நவாபு, ஐதர், நிஜாம், இவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையும் சச்சரவுமாயிருந்தனர். இவ்விதம் பகைக்கும் சுதேச அதிகாரிகளில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சமயத்தில் ஆங்கிலேயரும், பிரான்சியரும் சகாயமாயிருந்து, கொஞ்சங் கொஞ்சமாய் நாடுகளைத் தங்களுக்கு உரிமையாக்கிக்கொண்டு சென்ற விஷயங்களை இந்துதேச சரித்திரத்தில் காணலாம். இவ்வாறு அரசாட்சி மாறிக்கொண்டிருக்கையில், கிழக்கிந்தியா வர்த்தகக் கூட்டத்தாராகிய இங்கிலீஷ் கம்பெனியாரும், நவாபும் ஒன்றுயிருக்கும்போதும், வேறு பிரிந்திருக்கும்போதும், கடிதங்கள் எழுத

எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டபோதிலும், யாருடைய விரோதம் வந்தபோதிலும், தமது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் தெய்வத்துக்கு உண்மையாக நடப்பவரை எதிர்க்க முடியாது.

வும், பதில் விஷயங்களைத் தெரிவிக்கவும், அனுகூலமாயும், ராச்சிய நடவடிக்கைகளில் ஒவ்வொருவருடைய அபிப்பிராயங்களையும் கண்டறிந்தவர்களாயுமிருந்த இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களுக்கு அக்காலத்தில் உண்டாயிருந்த வருமானத்தைக் கணக்கிட முடியாது. இந்த இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களுக்கு எல்லா விஷயங்களிலும் சாதகமாக நின்று, அவர்களுக்கு லாபம் கிடைக்கும் வேலைகளில் முக்கிய உதவியாயிருந்தவர்களுக்கே துபாசிகள் என்று பெயர். இந்தத் துபாசிகளின் சம்பாத்தியமோ அளவற்றதாயிருந்தது. அவர்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் அபரிமிதமான தனம் கிடைத்துக்கொண்டிருக்கும். இந்த துபாசிகள் இங்கிலீஷ் பாஷையைச் செம்மையாய்க் கற்றுக்கொண்டவர்களல்லர். சிலருக்கு எழுத்துத் தெரியும்; சிலருக்கு அதுவும் தெரியாது. ஆனல், எல்லோருக்கும் மிதமாய்ப் பேசத் தெரிந்திருந்தது. இவர்கள் வெளியில் புறப்படும்போது, பச்சைக்கல் முருகு, பெரிய கடுக்கன், தோடா, மோதிரம், ரத்தினமாலை முதலான ஆபரணங்கள் பூண்டு, தலையில் பாகையும், நெடு அங்கியும், அதன்மேல் சரிகை நடுக்கட்டும் கட்டி, கையில், சிவப்புப் பட்டுத்துண்டு பிடித்துச், சால்வை போர்த்துக்கொண்டு, பல்லக்கிலாவது பெரிய வண்டிகளிலாவது சவாரி செய்து வந்தார்கள்.

ஃ

இவ்வாறன காலத்தில், காஞ்சீபுரத்தில் அகமுடையார் குலத்தில் விசுவநாத முதலியாருக்கும் அவரது மனைவி பூச்சியம்மாள் என்னும் குணவதிக்குமாக, இங்கிலீஷ் 1754-ம் வருஷத்துக்குச் சரியான பவ வருஷத்தில் பச்சையப்ப முதலியார் பிறந்தார். இவர் தாயின் கர்ப்பத்திலிருக்கையிலேயே பிதா காலஞ்சென்று விட்டனர். சுப்பம்மாள், அச்சம்மாள் என்ற இரு பெண்கள் இவருக்கு முன்பு பிறந்திருந்தனர். புருஷதிக்கின்றி அநாதையான பூச்சியம்மாள் தன் இரு குமார்த்திகளுடன் காஞ்சீபுரத்துக்கடுத்த பெரிய பாளயம் சென்று, தங்கள் குடும்பத்தாருக்கு இஷ்டராய், ஆற்காட்டு சுபேதாருடைய காரியங்களை நிர்வகித்து வந்த ரெட்டிராயர் என்கிற மாத்துவப் பிராமணரின் ஆதரவையில் இருந்து வருவதானர். அப்போதுதான் முதலியார் சிவந்த உருவமும், நீண்ட புருவமும், அகன்ற கண்களுமுடையவராய் அழகிற் சிறந்து விளங்கினர். உலகத்தில் சுக துக்கங்கள் தனித்தனி நேரிடத் தொடங்கினல், ஒன்றின் பின்னென்ருய் அடுத்தடுத்து உண்டாவது அனுபவ சித்த

அநுபவத்திற்கு மிஞ்சிய ஞானமும் அதினினும் மேமபாடான படிப்பினையும் வேறெதுவுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே உத்தம நேசன். இவ்வாறே மற்ற எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருப்பது அநுபவமே.

மாகையால், முதலியாருக்கு ஐந்து பருவமாய்த் தெலுங்கு பாஷை அப்பியசித்துக் கொண்டிருக்கையில், இவர்களுக்கு ஓர் பற்றுக் கோடாயிருந்த ரெட்டிராயர் காலஞ்சென்று விட்டார். இதன் பின்னர் பூச்சியம்மாள் பட்டணம் சென்றால் பெரிய மனிதர்களது உதவி கிடைக்குமென்று அவ்வூரிலிருந்த ராமு ரெட்டியாரின் மனைவி வெங்கடம்மாளும் மற்றுமுள்ளவர்களும் சொன்னதைக் கேட்டு, தன் குமாரனோடும், மங்கைப் பருவமடைந்த இருபுத்திரி களோடும் சென்னப்பட்டணம் வந்து ஒற்றைவாடையில் சாமி மேஸ்திரி தெரு என்ற சிறு சந்தின் வடபுற மேலண்டைக் கோடியி லோர் வீட்டிற் குடியிருக்கலானார். அங்கு தனக்கு உதவி செய்யக் கூடிய பெரிய மனிதர்கள் எவரென்று விசாரிக்கையில், இவர்கள் குடியிருந்த வீட்டிற்குச் சமீபத்திலேயே யிருந்த ஒருவர், தனது யஜமான் போனி நாராயணப்பிள்ளை என்பவர் சகல நற்குணங்களும் பொருந்தியவரானதால், அவரது துணை தக்கதாகுமென்று நவின் றார். அவ்வண்ணமே பூச்சியம்மாள் நாராயணப் பிள்ளையை நேரிற் கண்டு, தன் பரிதாப நிலைமையைத் தெரிவிக்க, அவரும் அந்த அம்மாளின் இஷ்டப்படியே நடக்க இசைந்து, தனக்கு உடன் பிறந்தாளென்னும் முறைமை கொண்டாடி, பூச்சியம்மாள் கொடுத்த பொருளை விர்த்தியாக்கி, பச்சையப்பனுக்கு வித்தியாப்பியாசஞ் செய்து வந்தார். "அகதிக்கு ஆண்டவனே துணை."

ஃ

போனி நாராயணப்பிள்ளை யென்பவர், செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலூகா நெய்தவாயில் கிராமத்தில் யாதவகுலத்தில் பிறந்தவர். சென்னப்பட்டணத்தில் இந்தியாவின் சரக்குகளை ஐரோப்பாவின் பல இடங்களுக்கு அனுப்புவது, அவ்விடத்துச் சரக்குகளை இங்கே வரவழைப்பது முதலான வர்த்தகத் தொழில் செய்து வந்த மேஸ்தர் போனி என்பவருக்கும், அவருக்குப் பின் அவரது பாரியைக்கும் துபாசியாயிருந்தபடியால், இவரை இது காரணமாக போனி என்கிற அடைமொழி கொடுத்துக் கூப்பிடு கிறது வழக்கம். இவர் இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்குச் சிநேகி தராயிருந்ததால், சுதேசிகளநேகருக்குத் தகுந்த வேலைகள் செய் வித்துக் கொடுத்து மேம்பாடுள்ளவராயும் இருந்தார். பிறகு செங் கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த மெதவாயல் என்னும் கிராமத்தை ஆற்காட்டு நவாபுவினிடத்தில் சுரோத்திரியமாகப் பெற்று, அந்தக்

முடிவுற்ற விஷயமென்று கணவன் நினைக்கிறான். மனைவியோ அது முடிவடையாத விஷயமென்று நினைக்கிறாள். தன்னைக் கணவன் கெஞ்ச வேண்டிய நேரம் வரும்பொழுது முடிவுற்ற விஷயமென்று கணவன் நினைத் ததை மறுபடியும் கிளப்பித் தனக்கு அநுகூலமாக அவ்விஷயத்தை முடித்துக் கொள்கிறாள்.

கிராமத்தின் வரும்படியை அங்கே கட்டின தர்ம சத்திரத்துக்கு உபயோகமாகும்படி செய்து வந்தார். பச்சையப்பரின் அபிவிர்த்திக்கு இவரே முதற்காரணமாதலின், இவரது வரலாற்றையும் தெரிந்திருக்கவேண்டியது அவசியமே.

ஃ

பூச்சியம்மாள் தனது இரு குமார்த்திகளுக்கும் தக்க இடத்தில் மணம் செய்வித்தனரேனும், அவ்விருவரும் சீக்கிரத்தில் மாங்கலிய மிழந்து, தமக்குக் கிடைத்த சொத்துக்களுடன் தாயினிடமே வந்து சேர்ந்தனர். மூத்த குமார்த்தி சுப்பம்மாளுக்கு ஐயாளம்மாள் என்றொரு புத்திரியும், இளைய குமார்த்தி அச்சம்மாளுக்கு முத்தையன் என்றொரு புத்திரனும் இருந்து வந்தனர்.

ஃ

பச்சையப்பர் பாலியத்திலேயே புத்திகூர்மையும், யுக்தியுமுடையவராய், வியாபார தந்திரங்களை யெல்லாம் செம்மையாய் அறிந்துகொண்டு, "முயற்சி திருவினையாக்கும்" என்பதை யுணர்ந்து, வெளிதேசத்தச் சரக்குகளை மொத்தமாய் வரவழைக்கும் பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து, வேண்டியவளவுக்குக் கைவிலைக்கு வாங்கி விற்கும் சிறு வியாபாரிகளிடத்தில் தரவுகார வேலையிலமர்ந்து, சாமான்களை வாங்க வரும் ஐரோப்பியர்களுக்குச் சுதேச பாஷை தெரியாதாகையால், அவர்களுக்கு வேண்டிய வஸ்து இன்னதென்றும், அதின் விலை முதலானவை இன்னதென்றும் இங்கிலீஷில் தெரியப்படச் சொல்லி, வேண்டியவைகளை வாங்கிக் கொடுத்து, இருதிறத்தாரும் தனித்தனி இஷ்டத்துடன் கொடுக்கும் பொருளைப் பெற்று, இரப்போர்களுக்கும் வித்வான்களுக்கும் தன்னாற் கூடியவளவு பொருளுதவி செய்து, தெய்வ பக்தியுடைவராய்ச் சந்நிதிகளில் கைங்கரியங்களுக்குச் சிறிது தனம் செலவழித்து, மிதந்ததைக் குடும்பத்துக்கு உதவியாகத் தன் தாயாரிடத்தில் கொடுத்துக்கொண்டு வந்தார். ஆயினும், இந்தத் தொழிலில் வருமானம் நிலையில்லாதிருந்ததால் இதைவிட்டு, ஒரு ராணுவ உத்தியோகஸ்தரிடம் தன் தாயாருக்குத் தெரிவிக்காமலே சென்று வேலையில் அமர்ந்தார். இதையறிந்த நாராயணபிள்ளை பச்சையப்பரை அவ்வேலையினின்றும்

நாம் புதியது என்று சொல்லும்படியான ஒவ்வொன்றும் தொன்று தொட்டு நிற்கும் வஸ்துக்களுக்கு சம்பந்தப் பட்டவையேயாம். பழய வஸ்துவோடு சம்பந்தமில்லாத புதிய வஸ்து ஒன்றுமில்லை. புதியது பழயது என்று சொல்வது ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்மியத்தைக் காண்பிப்பதற்காகவேயாம். 1887-ம் வருஷத்தில் எது புதியதாக இருந்ததோ, அது 1907-ம் ருஷத்தில் பழயதாகி விடுகிறது. இவ்வளவேதான் வித்தியாஸம்.

விலக்கி அழைத்துவந்து, தென்தேசத்தில் இங்கிலீஷ்காரரது அதிகாரம் நடத்திவந்த நிக்கலஸ் துரையிடத்தில் துபாசி வேலை செய்வித்துக் கொடுத்தார். பச்சையப்பர் அவ்வேலையிலிருந்துகொண்டு தாம் தேடிவரும் திரவியத்தைப் பிதாவுக்குச் சமமான நாராயணப் பிள்ளையிடத்தில் மிகுந்த வணக்கத்தோடு கொடுத்து, அவர் கட்டளைப்படி தன்னுடைய தமக்கையின் குமார்த்தியான ஐயானம்மாளை விவாகம் செய்துகொண்டு சுகமாக இருந்தார்.

ஃ

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுவரர் கோவிலில் சிவகாமியம்மை, ஸ்ரீபலி நாயகர் என்னும் இரண்டு விக்கிரகங்களைச் சிரேஷ்டமான சிற்பிகளைக்கொண்டு வார்ப்பித்து, 1773-ம் வருஷம் மார்ச்சுமீ 27-ம் தேதி கும்பாபிஷேகம் செய்வித்து, பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தில் ஸ்வாமி திருக்கல்யாணம் பிரதி வருஷமும் நடத்த அநுகூலமான மண்டபங் கட்டுவிக்கத் தீர்மானித்து, அதே தினத்தில் நல்ல முகூர்த்த காலத்தில் கடைகால் கோலி அத்திருப்பணியை முற்றுவித்தார். பச்சையப்பருக்குத் தெய்வ கைங்கரியத்திலிருந்த ஆவல் இதனால் இனிது புலனாகும்.

ஃ

இவ்வாறு, 'அப்பன்' என்றழைத்தவர்களெல்லாம் 'ஐயா' என்றழைக்கும்படி, பச்சையப்ப முதலியார் ஜகத் பிரசித்தராய்த் துபாசி வேலையை மிகுந்த சாமர்த்தியத்தோடும் கவனத்தோடும் நிர்வகித்து வருகையில், 1776-ம் வருஷத்திலும், அதற்குப் பின்னும், செங்கற்பட்டு ஜில்லாவைச் சார்ந்த பூவிருந்தவல்லி, திருப்பாசூர் முதலிய இடங்களில் இங்கிலீஷ் வர்த்தகக் கூட்டத்தாருக்கு மேல்வாரமாகக் கிடைக்கும் தானியங்களை ஏற்பாட்டின்படி பணமாய்ச் செலுத்துவதாக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, தர்மராய முதலியார், புங்கத்தூர்ச் செங்கல்வராய முதலியார் என்கிற இருவரைத் தமக்குச் சகாயமாக வைத்துக்கொண்டு, இங்கிலீஷ் வியாபாரிகளுக்கும், நவாப் துரைத்தனத்தைச் சார்ந்தவர்களுக்கும், நடுவாய், அநேக இனும், மாதச் சம்பளம் செலுத்துதல், ஒருவருக்குப் பணம் சேர்ப்பித்தல், கடன் பத்திரங்களுக்கு வட்டி கொடுத்தல், முதலான வியாபாரங்களை இருதிறத்தாரும் மிகவும் புகழும்படி நடத்தி, விசேஷ லாபத்தை யடைந்தார். துபாசிகளின் செல்வாக்

ஒருவரின் செல்வ நிலையை மற்றொருவர் சுறண்டுவதென்றால் அவ்விருவருக்கும் ஒற்றுமை ஏற்படுவது கஷ்டந்தான். தன் கணவனின் சொத்துகளில் பாதியைக் கொள்ளை கொள்வதற்கு மூத்தாள் குமாரன் இருக்கிறானே யென்று ஆத்திரப்படும் மாற்றாந்தாய் மூத்தாள் குமாரிடனிடம் எப்படி அன்பாயிருக்க முடியும்?

கைப்பற்றி மேலே கூறியிருப்பதை இங்கு நினைவிற் கொள்ளத் தக்கது.

ஃ

பின்பு, இங்கிலீஷ் கம்பெனியாருடைய உத்தியோகத்தில் முதன்மை பெற்றிருந்த ஜோஸப் ஸலிவன் துரையிடத்தில் துபாசியானார். ஸலிவன் துரை மிக்க சமர்த்தர். 1783-ம் வருஷம் இங்கிலீஷ்காரர் கோயம்புத்தூரைப் பிடித்தபோது டிப்புவின் தேசங்களைக் கைப்பற்றத் தகுந்த உபாயங்களைக் கூறிப் புகழடைந்தவர். இவருக்கு முதன்மையான துணையாக முதலியார் நின்று மிகுந்த கீர்த்தி பெற்றார். பிறகு முதலியார் தஞ்சாவூரில் இருக்கும்போது, அவ்விடத்திய இங்கிலீஷ்காரருக்குப் பிரதிவருஷமும் கொடுக்கவேண்டிய பணத்தை ஒரேவிதமாய்க் கொடுக்க சரிப்படாமல், சிலவேளை அத்தேசத்து நாணயங்களாகவும், சிலவேளை பூவராகன்களாகவும், சிலவேளை உண்டிகளாகவும் கொடுக்க நேரிட்டதில் அவற்றை மாற்று வட்டத்துக்காக நூற்றுக்குப் பத்து அல்லது இருபது விழுக்காடு லாபம் தள்ளி வாங்கிக்கொண்டு அவற்றைப் பட்டணத்துக்கு உண்டிகளாகவும் பூவராகன்களாகவும் அனுப்பிக்கொண்டு வந்தார். மேலும், சில சமஸ்தானதிபதிகளாயிருந்த பிரபுக்களுக்கும் பாளையக்காரருக்கும் வேண்டிய காரியங்களை அநுகூலஞ் செய்வித்துத் தமது பேராலும், நாராயணப்பிள்ளை பேராலும் கொடுக்கல் வாங்கல் முதலான நடவடிக்கைகள் நடத்தினர். இவைகளில் கிடைத்த அளவிறந்த திரவியத்தைத் தபால் மூலமாய் உண்டிகளாகவும், சில சமயங்களில் அவ்விடத்துக் கொல்லர்கள் மேலெடுப்பித்தும் நாராயணப் பிள்ளையவர்களிடத்தில் சேரும்படி அனுப்பிக்கொண்டும், தஞ்சாவூரில் தமக்கிருந்த பெரிய மெத்தை வீட்டில் வாசமாயிருந்தார்.

ஃ

முதலியாருக்கு இதுகாறும் மக்கட் பேறில்லாததால், வேதாரணியத்தில் பழனியாய் எனும் பெண்ணை இரண்டாவதாக மணந்து ஒரு குமார்த்தியைப் பெற்றார். இரு மனைவியர்க்கும் ஒற்றுமையில்லாததால். இருவரையும் தனித்தனியாக வசிக்கச் செய்தார். முதலியார் தேவாரம் திருவாசகம் முதலியவற்றில் விசேஷித்த வாஞ்சை யுடையவராய் தம்பிரான்களுடனிருந்து பெரிய புராணம் முதலிய காலக்ஷேபங்களைச் செய்து வந்தார். இரவுகளில் பதிகங்களை யாழில் அமைத்து வாசிப்பார். ஸ்தலங்களில் திருப்பணிகள்

1908-ம் வருஷத்தில் சென்னையில் ஸ்ரீ விபினசந்திரபாலர் செய்த பிரஸங்கத்தில் பி. ஏ. பரீக்ஷை கொடுத்தவர்கள் மாதம் 15, 20-ரூபாய் சம்பாதிப்பதாகக் கூறினர். அவர் பேசி 26-வருடங்களாய் விட்டன. புது மாறுதல் ஒன்றும் காணவில்லை.

நிறைவேற்றுவதும், தீர்த்த ஸ்தலயாத்திரை போகுமவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்வதுமான ஸத்கைங்கரியங்கள் செய்து வந்தார்.

ஃ

1788-ம் வருஷத்தில் தஞ்சாவூரின் அரசரான அமரசிங்கு மகாராஜா இங்கிலீஷ்காரருக்குச் செலுத்தவேண்டிய பணம் பாக்கியிருந்ததால், அதை வசூலிக்க உவில்லியம் பீட்டிரி துரையையனுப்பியபோது முதலியாரையுங்கூட அனுப்பினார்கள். அப்போது முதலியாரிடத்தில் ராஜா லக்ஷம் வராகன் கடன் வாங்கி இங்கிலீஷ் கம்பெனியாருக்குக் கட்டினர். பிறகு ராஜா பணம் செலுத்துவதற்குத் தக்க சில புது ஏற்பாடுகள் செய்வித்துவிட்டு பீட்டிரி துரை சென்னைக்கு வந்து விட்டபின், முதலியார் அங்கிருந்து கொண்டு கொடுக்கல் வாங்கல் நடத்தி வந்தார். அப்பொழுது சில ஐரோப்பியர்கள் துபாசிகள் ராஜாவுக்குக் கடன்கள் தந்து விசேஷித்த செல்வாக்கு அடைவதால் அவர்களைச் சென்னைக்குப்போய் விடும்படி செய்யவேண்டுமென்று சென்னைத் துரைத்தனத்தாருக்கு எழுதித் தூண்டவும், அவ்விதமே 1791-ம் வருஷம் துபாசிகள் சென்னை வந்து, சேரும்படி கண்டிதமான உத்திரவு பிறந்தது. முதலியாரும் இந்த உத்திரவின்படி சென்னை வந்து, தான் 50000-வராகன் வரையில் ராஜாவுக்குக் கடன் கொடுத்திருக்கையில் தம்மைத் திரும்பி சென்னைக்கு வரும்படி செய்தது நியாயமல்லவென்று முறையிட்டுக்கொள்ள, துரைத்தனத்தாரும் அதை ஏற்றுக்கொண்டு தஞ்சாவூருக்குச் செல்ல அனுமதித்தனர். 1792-ம் வருஷத்தில் பாரிசவாயு கண்டு அதன் நிவர்த்திக்காகத் தஞ்சாவூர் சென்றார். பிறகு சென்னை வந்து ஜோஸப் ஸலிவன் துரையின் குமாரரிடம் துபாசியானர். இந்த சமயம் தில்லைத்திருப்பதியில் நடன சபா பதிக்குத் திருத்தேர் செய்வித்து, பிரமோற்சவம் செய்ய ஆரம்பித்து, 1791-ம்ஹு ஜூன்மீ 28-ம்தேதி துவசாரோகணம் செய்வித்து, ஆனித்திருமஞ்சன உற்சவங்களை நிறைவேற்றினர்.

ஃ

மறுபடி தஞ்சாவூருக்குப் போகையில், முதலியார் போனி நாராயணப்பிள்ளை குமாரரான ஐயா பிள்ளையை ஸலிவன் துரை குமாரருக்குத் துபாசியாக ஏற்படுத்தினர். முதலியாருக்கு அங்கு

இரவில் அதிக மழையாயிருக்கையில், ஏதாவது ஒரு வாடகை வண்டியில் ஏறிச் செல்வதே உத்தமம். வண்டிக்கு வாடகை தரப் பின்னடைந்து, மழை நின்று போகுமென நினைத்துப் புறப்பட்டுவிட, இடையில் மழையும் மின்னலும் கனத்துவீச, அதில் சிக்கிக்கொண்டு தாங்கள் வண்டியில் ஏறத் தவறியதற்கு வருந்தியவர்களுமுண்டு.

மதுமேக ரோகமும், பேதியும் கண்டு சரீரம் மெலிந்து, மூளை மூல உபாதியும் அதிகரித்ததால், 1794-ம்௵ மார்ச்சு௴ 9-ம் தேதி சிகிச்சைக்காகக் கும்பகோணத்திற்குச் சென்றார். அங்கே சத்திரம் கட்டும் வேலையைத் தொடங்கினர். கச்சித்திருப்பதி முதல் இராமேசுவரம் வரையிலுமுள்ள சைவ வைஷ்ணவ ஸ்தலங்களில் தமது கட்டளைகள் என்றும் அழிவில்லாதபடி நடக்க 1794-ம்௵ மார்ச்சு௴ 22-ம்தேதி மரண சாசனம் எழுதிவைத்து, 24-ம் தேதி கும்பகோணத்திலிருந்து, தன் கையினாலேயே நாராயணப் பிள்ளைக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பினர். அந்தக் கடிதத்தில், முதலியார் தமக்கு நிர்யாணகாலம் சமீபித்திருப்பதையும், பிறர் சொத்தில் அணுவளவும் தப்பாமல் திருப்பிவிட வேண்டுமென்கிற திடமான மனதுடன் கணக்கு ரொக்கம் முதலான விஷயங்களை வரையறை செய்தும் தெரிவித்தார். பிறகு தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவையாற்றுக்குப் போய்ச் சேர்ந்து, அங்கு பிரமாதீச வருஷம் பங்குனி மாதம் 21-ம் தேதி திங்கட்கிழமை அமாவாசை திதிக்குச் சரியான இங்கிலீஷ் 1794-ம்௵ மார்ச்சு௴ 31-ம் தேதி பரலோகப் பிராப்தியானர்.

ஃ

முதலியார் பழிக்கும் பாவத்துக்கும் பயந்தவர்; பிறனில் விழையாதவர். எல்லாரிடத்திலும் இன்சொல் சொல்பவர். ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவர். வித்வான்களுக்குத் தகுந்த மரியாதை செய்பவர். சதா தர்மம் செய்வதிலும் திருப்பணிகள் இயற்றுவதிலுமே சிந்தை யுள்ளவர். தர்ம மார்க்கத்தை யநுசரித்து வரும் பொருளன்றித் தகாத வழியில் நுழைந்து சிறிதும் ஈரமின்றிப் பொருள் கவரக் கருதியவரன்று. எவ்வித காரியங்களிருப்பினும், தான் செய்யவேண்டிய நித்திய கருமங்களைத் தவறாது செய்து வந்தார். முதலியாரின் ஜீவியத்தில் ஆண்மகப் பேறு இல்லாத தொன்றே பெருங்குறை. இவ்வுலகிற் பிறந்தோருக்கு எல்லா செல்வமும் நிறையப் பெற்றிருப்பினும், ஏதேனும் ஒரு பெருங் குறையிருப்பது இயல்பு. குறையில்லாதவர் எது?

“தோன்றிற் புகழொடு தோன்றுக; வஃதிலார்
தோன்றலிற் றேன்றாமை நன்று.”

சமாதானத்தைப் பின்பற்ற முடியாத நிலையிலே பெண் சந்தேகமானது சிருஷ்டனை செய்யப்பட்டிருக்கையில், அதை மறந்து, தான் சந்தேகித்த மனிதனுடன் சமரஸமாய்ப் பழகுவதென்பது கூடாமை யாகிறது. அவனால் தன் வீட்டுப் பெண்களின் கற்பு ஆபத்தாகிவிடுமென்று காண்கையில், அவனை வீட்டுக்குள் வரவிட எப்படி சம்மதிக்க முடியும்? இவ்வித சந்தேகம் அண்ணன் தம்பிகளுக்குள் உண்டாகிவிடுகையில் இருவரும் பகைவராகிறார்கள்.

விகடகவியின் பூகம்ப சமாதானம்.

கதைக்குக் காலில்லை என்பார். நாம் சொல்லப்புகும் கதை வங்கதேசத்திற் பரவியுள்ள தாதலின் இக்கதைக்குக் காலுண்டு. டில்லி சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக மூர்ஷிடாபாத் நவாப் அவர்கள் வங்காள தேசத்தின் பெரும்பாகத்தை ஆண்டுவந்த காலத்தில், பூமியதிர்ச்சியுண்டாகி அநேக பிராணிகளுக்கு உயிர்ச்சேதமும் அளவற்ற சொத்துக்களுக்கு நாசமும் சம்பவித்தனவாம். இவ்விபத்து நேருமென்று யாரேனும் முன் எச்சரிக்கை செய்திருந்தால் இச்சம்பவத்தினின்றும் தப்பி யிருக்கலாமென சபையோர்களிலொருவர் நவாபுக்கு எடுத்துக்காட்ட, அவர் கிருஷ்ணகர் ஹிந்து ராஜாவின் ஆஸ்தான ஜோஸ்யர்களை வரவழைத்து, அடுத்த பூமியதிர்ச்சி எப்போது உண்டாகுமென்று அறிவிக்கும்படி கட்டளை யிட்டார்.

ஃ

அவர்கள், "ஜோஸியம் ஆகாசத்திலுள்ளவைகளைப்பற்றியே கூறுவதால் பூகம்பம் இன்ன காலத்தில் உண்டாகுமென நிர்ணயிக்க முடியா" தென்றனர். இதனை நவாப் நம்பாமல் அத்தனைபேரையும் ஜெயிலுக் கனுப்பும்படியும், குறித்த காலத்திற்குள் விடை கொடுக்காவிட்டால் சிரசை வாங்கிவிடும்படியாயும் கடுமையாக ஆக்ஞாபித்தார். இச்சங்கதியறிந்த கோபால் என்னும் ஸமஸ்தான விகடகவி ஜோஸ்யர்களிடம் சென்று தன்னைக் குருவாக ஒப்புக்கொண்டால் அத்தனைபேரையும் ஆபத்திலிருந்து தப்பவைக்கக் கூடுமென்றான். அந்தோ! அவ்விப்பிரசிரேஷ்டர்கள் இழிகுலத்திற் பிறந்த விகடகவியைக் குருவாக ஒப்புக்கொள்ளப் பின்னடைந்தனரேனும், ஸமய பேதத்தால் அவ்விதமே ஏற்றுக்கொள்ள இணங்கினர். விகடகவி ஸந்தோஷ சித்தனாய் அவர்களுக்குத் தைரியம் கூறிவிட்டு நவாபினிடம் சென்றான்.

ஃ

ஜோஸியர்கள் பூகம்பம் உண்டாவதைத் தெரிவிக்கப் பாசாங்கு செய்யவில்லையென்றும், உண்மையில் அது அவர்களுக்குத் தெரியாதென்றும், விகடகவி கோபாலன் நவாபுக்கு அதி விநயமாய்த் தெரிவித்தான். விகடகவி நவாபின் முன்னிலையில், "இப்பிராமணர்கள் தங்கள் பிரேதங்களைக் கொளுத்திவிடுகிறார்கள். ஆதலின், அப்பிரேதங்கள் புகை, சாம்பல் தூசு முதலியவைகளாக ஆகாசத்திற் செல்லுகின்றன. அங்கிருந்தே பூமியில் இன்னின்ன ஸம்பவங்கள் உண்டாகுமென அறியக்கூடும். இவற்றை

மதுரைப் பிரேத பார்சல் வழக்கில் ஒரு சாக்ஷியின் மொழி:—"காலையில் வாந்தி எடுத்த பெண் எவ்விதம் இருக்கிறாள் என்று பார்க்க கதவின் ஓரத்தின் வழியாக உள்ளுக்குள் பார்த்தேன். அப்போது பேச்சு, வார்த்தையில்லாமல் அசைவற்றுக் கட்டையாகக் காந்திமதி யிருந்ததால் உயிர் போயிருக்கு மென்றே நான் எண்ணினேன்."

உயிருடனிருக்கும் தங்கள் உறவினர்களுக்கு அந்தப் பிரேதங்கள் ஆகாசத்திலிருந்து கொண்டு அறிவிக்கின்றன. ஆனதுபற்றியே ஜோஷ்யர்கள் இனி நடக்கப்போவதை முன்பாகத் தெரிவிக்கும் சாமர்த்தியம் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு ஆகாசத்தில் நடப்பதை யறிவதுபோல், பூமியில் நடப்பதை இவர்கள் அறிய ஹேதுவில்லை. காரணம், அவர்கள் தங்களின் பிரேதங்களை எரித்துவிடுவதால், அப்பிரேதங்கள் பூமியில் தங்காமல் ஆகாசத்துக்குச் சென்றுவிடுவதால், பூமியில் நடப்பவைகளைப்பற்றித் தங்களின் உறவினர்களுக்குச் சொல்ல சாத்தியமில்லாமற் போகின்றது. மகம்மதியர்களோ தங்களின் சவங்களைப் பூமியில் புதைக்கும் வாடிக்கையைக் கொண்டிருக்கின்றனர். ஆதலின், மகம்மதிய மார்க்கத்தைச் சேர்ந்த முல்லாக்களே பூமியதிர்ச்சியின் வரவை ஸமாதியிலிருப்பவர்களின் மூலமாக ஆவிரூப வாக்கினுல் அறிந்து தெரிவிக்க வல்லவர்கள்” என்று விவாதம் செய்தான். இந்த வாதத்தை நவாப் பூரண நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, தக்ஷணமே ஜோஷ்ய பண்டிதர்களான பிராமணர்களை விடுதலை செய்தார். எவ்வளவு கற்றிருந்தாலும் பயனில்லை. தருணத்திற்குத் தக்கபடி ஸமயோசித சாதுர்யமாய் யுக்தி புத்தியோடு பேசத்தெரிந்த வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும். அவனே தனது ஸமத்காரத்தால் எவ்வித ஆபத்திலிருந்தும் தப்புவித்துக் கொள்ள வல்லவனுய் விளங்குவான்.

மேஸ்திரிகளும், சிற்றுள்களும்.

ஒரு வீட்டுச் சுவரைக் கட்டுவதற்கோ, வீட்டைப் பழுது பார்ப்பதற்கோ மேஸ்திரி, இரண்டு சிற்றுள் போதுமாயினும் நாலுபேர் வேண்டுமென்பான். தனக்குத் துணையாக ஒரு மேஸ்திரி வேண்டுமென்றும், தன் கூலியே அந்த ஆளுக்கும் தரவேண்டுமென்பான். சிற்றுள்களோ சிறிதுநேரம் வேலைசெய்துவிட்டுப் பிறகு வெறுமனே காலத்தைக்கழிப்பர். கூலிகொடுப்பவன் அருகே வருகையில், மேஸ்திரி சிற்றுள்களுக்குச் சிறு வேலையிட்டு அவர்களும் வேலை செய்துகொண்டிருப்பதுபோல் காட்டுவான். ஆறு நாளைக்குப் போட்ட திட்டம் பத்து நாட்களுக்குமேல் வளரும். ஆதலின், பழுது பார்ப்பதற்குமட்டுமாயின், ஒரு மேஸ்திரியும், ஒரு சிற்றுளும் மட்டுமே வைத்துக்கொண்டு வேலை செய்யின், ஏமாற்ற முடியாமல் வேலையும் நன்கு நடக்கும். இவ்விதம் செய்வதில் வேலை முடியச் சிறிது நாளாயினும் வேலை சரிவர நடைபெறும்.

பந்தமின்மை யென்றுல் தன்னடக்கமாகும்; ஆத்ம பந்தமாகும். ஸ்வேச்சை யென்றுல் உறுதிப்பாடின்மையன்று; ஆத்ம உறுதியாகும்.

காவற் சுங்க வரி.

எங்கெந்த அன்னிய வஸ்துக்கள் சுதேச வஸ்துக்களை விலையாகாமல் தடுக்கின்றனவோ அவற்றின்பேரில் "காவற் சுங்க வரி" அதாவது,—உள் நாட்டுச் சரக்குகள் ஏராளமாய் விருத்தியாவதற்காக அயல்நாட்டுச் சரக்குகளின்பேரில் தகுந்த வரி யிட்டு, அதன் விலை சுதேசச் சரக்கின் விலையைக் காட்டிலும் அதிகமாக அமையும்படியான ஸ்திதியில் வைத்தலான வரி,—விதிக்கப்படுதல் எல்லா நாடுகளிலும் வழக்கமாயிருக்கிறது. அமெரிக்கா தேசமானது அம்மாதிரியான சுங்கவரியை அயல்நாட்டுச்சரக்குகளின்பேரில் விதித்து தனது சுதேச சாமான்களையும் கைத்தொழில்களையும் விருத்திபண்ணிக்கொண்டது. ஜெர்மனி தேசமும் அதே மாதிரியான சுங்கவரியிட்டுத் தினே தினே செல்வப்பெருக்கு அடையலாயிற்று. ஆஸ்திரேலியாவும் கானடாவும் ஆங்கில ராஜாங்கத்தின் ஒரு பகுதியாயிருந்தபோதிலும், தங்கள் தாய்நாடான இங்கிலாந்து தேசத்திற்குக்கூட அம்மாதிரியான சுங்கவரியின்றித் தாராளமாய் வியாபாரஞ் செய்ய விட முடியாதென மறுத்து விட்டன. இங்கிலாந்து தேசமும் அயல் நாட்டுச் சரக்குகள் உட்புகுந்து நயமாய் விற்கப்படாதவண்ணம் அதே மாதிரியான சுங்க வரிகளை விதித்துத் தனது தேசத்துத் தொழில்களைக் காப்பாற்றிக் கொண்டது. ஆனால், இந்தியா மட்டும் அப்படிச் செய்ய முடியவில்லை.

ஒரு பிரதி எடுத்து வை.

பத்திரிகைக்கு அனுப்பும் வியாசங்களுக்கு உன்னிடமும் ஒரு பிரதியிருக்கும்படியாகச் செய்துகொள். பத்திரிகையில் உன் வியாசம் பிரசுரிக்கப்படாவிடில், அது திரும்பக் கிடைப்பது அரிதாதலின், அப்பொழுது உன்னிடமிருப்பது பொன்போல் உனக்கு உதவும். இவ்விதமே ஒரு நூல் எழுதுகையில் அதைப் பார்த்து இன்னொரு பிரதியும் எழுதி வைத்துக்கொள்வது நன்மை. ஒன்று கெட்டுத் தவறினும் மற்றொன்று ஸஞ்சீவிபோன்றும் உதவும். மேலும், எழுதிய ஒன்றைப் பார்த்து மறுபடியும் ஒருதரம் எழுதுகையில், முன்னையதைவிட இன்னும் அதிகமான புது சரக்குடையதாய் மேன்மைப்படுத்தி எழுதுதற்கு வேண்டிய புது சிந்தனைகள் உன் உள்ளத்தே ஊறித் ததும்பும். விவகார சம்பந்தமான கடிதங்களுக்கு உன்னிடம் ஒரு பிரதி வைத்துக்கொண்டு அனுப்புவது, பிறகு ஒரு சமயத்தில் என்ன எழுதினேம் என்று பார்த்துக்கொள்ள உபயோகப்படும். ஒரு விஷயத்தை எழுதுவதற்கு எவ்வளவோ பாடுபட்டிருக்கலாம். ஒருதடவை எழுதிய விஷயத்தை, அது தவறிப்போய் மறுபடியும் எழுதுவதாகில் முன்னையதைப்போல் அவ்வளவு நேர்த்தியாக எழுத ஒருபோதும் முடியாது. முதலில் தோன்றிய சிந்தனையூற்றுகள் மறுபடியும் அப்படியே தோன்றுவது அபூர்வம். முதலில் வரைந்ததே முதற்றரமாயிருக்கும். இரண்டாவது வரைவது இரண்டாம் மனைவிக்கு சமமாகும். நன்றாயுமிராது. ஆதலின், ஒரு பிரதி உன்னிடம் வைத்துக்கொண்டு அனுப்பு. இதில் சிறிது கஷ்டம் நேரினும் பொறுத்து ஒரு பிரதி எழுதிவிடு.

குழந்தைகள் பக்கம்

ஒரு பேனின் கதை.

ஒரு ஊரில் ஒரு பேன் இருந்ததாம். அதற்கு வெகு நாளாய் அந்த ஊர் இராஜாவின் ரத்தத்தைச் சாப்பிட ஆசை ஒருநாள் அது தெரு வழியாய்ப் போய்க்கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு மூட்டைப்பூச்சி பேன் பெரியக்கா நீ எங்கே போறே என்றது. அதற்குப் பேன் நான் இராஜாவைக் கடித்து ரத்தங் குடிக்கப்போகிறேன் என்றது. அப்படியா, நானும் வருகிறேனென, வா என்று இரண்டும், இரண்டடி சென்றதும் ஒரு எறும்பு எதிரில் வந்தது. பேன் பெரியக்கா, மூட்டைப்பூச்சி முத்தக்கா, எங்கே போறீங்கோ என, நாங்கள் ராஜாவைக் கடிக்கப் போகிறோம் என்றன. உம், அப்படியா நானும் வருகிறேனென்று எறும்பும் புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் ஒரு கொசுவு, இவர்களைப் பார்த்து, பேனு பெரியக்கா மூட்டைப்பூச்சி முத்தக்கா, எறும்பு எல்லக்கா எங்கே போகிறீர் என, ராஜாவின் ரத்தங் குடிக்கப் போகிறோம் என்றன. ஆனால் நானும் வருகிறேன் என்று தொடர்ந்தது. கொஞ்சதூரம் போனதும், ஒரு தேள் இவர்களைக் கண்டு பேன் பெரியக்கா, மூட்டைப்பூச்சி முத்தக்கா, எறும்பு எல்லக்கா, கொசுகு குமாரசாமி எங்கே பிரயாணம் நானும் வாரேனென்றது. பிறகு ஒரு பாம்பு ஓடிவந்து, பேன் பெத்தக்கா. மூட்டைப்பூச்சி முத்தக்கா எறும்பு எல்லக்கா, கொசுகு குமாரசாமி, தேள் தெய்வானை எங்கே போறீரென, ராஜாவைக் கடிக்க என்றது. நானும் என்று நடந்தது. பத்தடி சென்றதும் ஒரு புலி இவர்களைப் பார்த்து எங்கு பிரயாணம் என்று வினவ, ராஜாவைக்கடிக்கப்போகிறோமென, இராஜாவின் ரத்தம் ரொம்ப இனிப்பாயிருக்கும், இதோ நானும், என்று குசாலாய் வந்தது. இவைகள் வழியில், நாம் ஒருவர்பின்னொருவராக ராஜாவைக் கடிக்கவேண்டுமெனப் பேசிக்கொண்டே அரண்மனைக்குச் சென்று, பேன் ராஜாவின் தலையில் ஏறிக்கொண்டது. எறும்பு ராஜாவின் உடம்பில் ஊர்ந்து சென்றது. கொசுவு ராஜாவின் எதிரில் பறந்துகொண்டிருந்தது. தேள் அலமாரியில் ஒளிந்துகொண்டது. பாம்பு ஒரு செடியில் சுற்றிக்கொண்டது. புலி தெருவில் பதுங்கியிருந்தது. ராஜாவுக்கு நல்ல தூக்கம். விளக்கு காற்றில் அணைந்துவிட்டது. இதுதான் சமயமென்று பேன் மெள்ளக் கடித்தது. மூட்டைப்பூச்சி வெடுக்கென்று கடித்து ரத்தங் குடித்தது.

சொந்தம் பாராட்டி உறவு கொண்டாடும் சுற்றத்தார்களெல்லாம் வெளிப் பகட்டளவிலேயே நிற்கிறார்கள். கிட்ட நெருங்கிச் சென்று உதவி கோரினாலோ, ஒரு முழம் தள்ளி விலகி உறவையே வேர் அறுத்துக்கொண்டு தூரப் போய்விடுகிறார்கள்.

R. M. S. M. கதிரேசன்.

உடனே அரசன் திடுக்கெனவெழுந்து சொறிந்து கொண்டான். பிறகு எறும்பு கடிக்கவும், உடனே கொசுவும் கடித்தது. என்ன யிது, இப்படி என்றுமில்லாமல் கடிக்கிறதுகளே என்று அரசன், அடே யாரடா அங்கே தூங்குகிறவன், கோவிந்தா-நாராயணு விளக்கை ஏற்றுங்களடா என்ருர். யாரும் எழுந்திருக்கவில்லை. குறட்டை சப்தம் பலமாய்கேட்கிறது. பிறகு அவரே எழுந்து நெருப்புக் குச்சி எடுக்க அலமாறியில் கை வைத்தார். அங்கிருந்த தேள் சுருக்கென்று கொட்டிவிட்டது. அப்பாடா என்று தேள்கடி மருந்துச் செடியண்டை போய் இலை கிள்ளினுர். முன்பு பதுங்கியிருந்த பாம்பு கடித்துவிட்டது. ஐயோ! என்றலறிக்கொண்டு எதிர்வீட்டு ஐயரை எழுப்பினுல் பாம்புக் கடிக்குச் சிகிச்சை செய்வாரென்று தெருவுக்கு ஓடினுர். அங்கு பதுங்கியிருந்த புலி அரசனின் தோளைக் கவ்வி ரத்தத்தை உறிஞ்சிற்று. இதற்குள் சேவகர்கள் அரசனின் கூக்குரல் கேட்டுத் துப்பாக்கியுடன் ஓடிவர, புலிபயந்து காட்டின் பக்கம் ஓடி மறைந்தது. கூட்டத்தின் சப்தம் கேட்டுத் தேளும் வேறிடத்துக்குப் போய்விட்டது. எறும்பு, கொசு, மூட்டுப்பூச்சியும் தங்களின் பழய இருப்பிடத்துக்குப் பிரயாணப்பட்டு விட்டன. ராஜாவும் ஒரு மாதத்திற்குப் பிறகு புலி கடித்த காயங்கள் ஆறிக் குணமடைந்து சுகமாகி, இவ்வளவும் விளக்கு அணைந்ததால் வந்த தீங்கு என்று அன்றுமுதல் தமது அறையில் பல விளக்குகளை ஏற்றும்படி உத்திரவிட்டார். ஒருவரைக் கெடுத்து வாழ்வதற்காகக் கூட்டாளிகளாக ஒன்று சேருவோருடைய ஒற்றுமை நீடித்திருப்பதில்லை. தாங்கள் கெடுதி நினைத்த இடத்தில் மறுபடியும் தலைகாட்ட முடியாமலும் போகிறது. இதை மேற்சொன்ன கதையால் உணரலாம்.

R. கோமளவல்லி அம்மாள்.

வெளிச்சுகம் ஆபத்து.
வீட்டுச் சுகம் அமிர்தம்.

மனைவி புத்திசாலியாயிருந்தால், தன் கணவன் காலையில் சிற்றுண்டிக்குக் காபிஹோட்டலுக்குப் போகும்படி விட்டு வைக்கமாட்டாள். அந்த வீண் செலவை நிறுத்தி, காபிஹோட்டலுக்குப்போகும் நேரத்திற்கு முன்பே வீட்டிலேயே பலகாரம், காபி தயாரித்துக் கணவனுக்கு யாவும் வீட்டிலேயே கிடைக்கும்படி செய்துவிடுவாள். இவ்விதம் மனைவி செய்யாமலும், கவனிப்பு இல்லாமலும் போவதாலேயே பலர் காபி ஹோட்டலில் காலையில் தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ள நேர்கிறது. புருஷர்களுக்கு வெளியிலே 'சுகம்—திர்ப்தி' கிடைக்கும்படி பெண்கள்விடக் கூடாது. அந்த சுகம் திருப்தியை வீட்டில்தானே பெறும்படி செய்யவேண்டும். இன்று காபி ஹோட்டலில் கண்ட வெளிச் சுகத்தின் ருசியிலே, நாளை தாசி வீட்டுக்கும் சென்ருல், குடும்பத்துக்கு அது எவ்வளவு அனர்த்தம்?

சிலர் எழுதும் பாடல்கள் சுலபமாயுள்ளன. ஆனுல், அவர்களின் வசன நடையோ வெகு கடினமாய், வேண்டுமென்றே மூக்கி மூக்கிக் கடினமாய் விரிவாக எழுதியதாயுள்ளன. அதைப் படிக்கவும் முடியவில்லை.

நளினன்

அல்லது நவ கங்கணங்கள்.

(224-ம் பக்கத் தொடர்ச்சி)

II

காமினி அவர் கருத்திற் கிணங்கவில்லை. அவள் அவரை நோக்கி, "நம் வார்த்தைக் கடங்கி நடக்காம விருப்பதற்கு, அவன் என்ன தறிதலையா?" என்று வினவினாள். நளினன் பாவினியைக் கண்டதும் அவள் பேரில் காதல் கொள்வானென அவள் உறுதியாய் நம்பி மீண்டும் கூறினாள்:—"இதற்காக அவன் வெகு காலம் விவாகமின்றிக் காத்திருக்க முடியுமா? மகாலக்ஷ்மியை போல் பேரழகு வாய்ந்த பாவினிக்கு வரனா கிடைக்கமாட்டான்? நாம் இப்போது வாளாவிருந்தால், அவளைக் கட்டாயம் இழந்துவிடுவோம்."

ஃ

இறுதியில் ஹரிலால் காமினியின் விருப்பத்திற் கிணங்கினார். ஏற்கெனவே நொந்து கிடக்கும் தமது மனைவியின் மனதை மீண்டும் புண்படுத்தலாகாதென்று அவர் எண்ணினார். காமினியோ சொல்ல முடியாத ஆனந்தம் அடைந்தாள். பாவினியின்பேரில் அவன் கொண்டிருந்த அன்பு பன்மடங்கு பெருகியது. நாளடைவில் பாவினியும் அவள் தாயாரும் ஹரிலால் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகி விட்டனர். அவர்கள் அடிக்கடி ஹரிலாலின் வேண்டுகோளுக்கிணங்கி அவர் வீட்டுக்கு வந்து பலநாள் தங்கியிருந்து செல்லலாயினர். பாவினி வந்தது முதற்கொண்டு ஹேமாவின் ஜ்வரமும் சிறுகச் சிறுகத் தணிந்து குணம் பெற்றெழுந்தாள். பாவினியும் ஹேமாவும் சந்தோஷத்துடன் தங்களின் காலத்தைக் கழித்தனர். பாவினி நன்கு கற்ற வித்யாவதி. அவள் "வங்க தர்சனம்" எனும் பத்திரிகைக்கு அடிக்கடி சிறு கதைகள் நெடுநாளாக எழுதி வந்தாள்.

ஃ

காமினிக்கும் பாவினியில்லாமல் ஒரு கணமும் பொழுது போவதில்லை. அவள் பாவினியின் முன்னிலையில் தன் மகனின் அயலூர் வாசத்தையும், கொடிய வறுமையின் துயரங்களையும் மறந்தவளா யிருந்தனள். பாவினி அவ்வளவு தூரம் அவளது உயரிய அன்பையும் ஆதரவையும்

மனோபாவம் மாறினாலன்றி, துவேஷ நிலையில் எவ்வித சமாதானமும் ஏற்படப் போவதில்லை.

பெற்றிருந்தாள். வீட்டிற்கு வந்த வளையல்கள்விற்போரும், துணி மணிகள் விற்போரும் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றதில்லை. விசேஷப் பொருள்களைக் கண்டபோதெல்லாம் காமினி "இதன் பேரில் பாவினிக்கு நிரம்ப ஆசை" என்று கூறி அதை வாங்கி அவளுக் களித்து மகிழ்ந்தாள். ஆதலின் ஹரிலாலுக்கு சமாளிக்க முடியாதவாறு வீட்டுச் செலவு வரவுக்கு மிஞ்சிப் பெருகியது. போதாததற்கு அவர்கள் அக்கம் பக்கங்களிலிருந்து கடன் வாங்கியும் செலவு செய்யலாயினர்.

ஃ

பாவினி இல்லாதபோது காமினி வாசனை மிகுந்த வெற்றிலை போட்டுக் கொள்வதுமில்லை; நல்ல காய்கனிகளால் அருஞ்சுவை பதார்த்தங்கள் ஆக்கிப் படைப்பதுமில்லை. பரிசாரகை நாவிற் கினிமையான உணவுப் பொருட்களை ஆக்கும்போதெல்லாம் பாவினியின் வீட்டிற்கு விரைந்தோடிச் சென்று அவள் அன்னையிடம் "தாயே! தங்கள் குழந்தையை அனுப்புங்கள். அம்மான் உணவு சித்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் மகள் முதலில் உண்ணுவிட்டால், அவர்கள் இன்று முழுதும் பட்டினி கிடப்பார்கள்" என்று மொழிவாள். உடனே பாவினியை அவள் தாயார் அனுப்பிவிடுவாள். பாவினியைக் கண்டதும் ஹேமாவும் காமினியும் அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு பூரிப்பர்.

ஃ

இரக்கத்திற்கும் அன்பிற்கும் வசப்படாத இதய முண்டோ? பாவினி தனது மாமியாரின் வீட்டை இன்ப நிலையமெனக் கொண்டாள். உண்மையில் அவள் அந்த வீட்டைத் தனது சோந்த வீடாகவும், காமினியைத் தனது சொந்தத் தாயாராகவும் பாராட்டி வந்தாள். பாவினி இப்போது வெறும் குழந்தையன்று. வயது பதினைந்து நிரம்பியிருந்தது. அவள் வயதுப் பெண்கள் யாவரும் கலியாணமாகிக் கணவன் வீடு சென்று விட்டனர். அங்கவ மோகனங்கிகள் தம் காதற் கதையை எடுத்துரைக்கும்போதெல்லாம் பாவினியின் மனம் நளினனிடம் விரைந்தேகும். நாவல்களில் கதாநாயகி நாயகரைப்பற்றிய செய்தியை வாசிக்கும்போது அவள் தனது வாழ்க்கையையே அதில் வரைந்திருப்பதாக நினைப்பாள். நூலை முற்றிலும் வாசித்து முடித்ததும் அவள் நளினன் முன்னிலையில் உல்லாசமாய்ப் போக்கிய இன்ப நாட்களை—இளமைப் பருவத்தை நினைத்து நினைத்து உன்ன முருகுவாள். நளினன் தன்னிடம் உல்லாசத்தோடும் உவகையோடும் உரையாடிக் களித்ததும், நூலிலுள்ள படங்களை யெல்லாம் தனக்குக் காட்டியபோது அவன் முகத்தில் தவழ்ந்த எழில்—நகையும், ஒரு நாள் அவன் நறுமலரொன்றைத் தனது கார் கூந்தலில் சூட்டிக் களித்ததும், பின்னொருநாள் திருவிழாவுக்குச் சென்றபோது பாதையின் இரு மருங்கிலும் காணப்பட்ட அழகிய காட்சிகளை யெல்லாம் தனக்குக் காட்டி மகிழ்ந்ததும் அவள் அகக்கண்முன் தோன்ற, அவள் அப்பேரின்பத்தில் மூழ்கித் தன்னையே முற்றிலும் மறந்தவளாய் இருப்பாள்.

ஃ

சில உரவினர் சண்டையிட்டுக்கொண்டு போய்விடுகையில், எத்தனையோ தடவைகளில் உண்டாகி மறைந்த சண்டையைப்போல் இதுவு மொன்று என்று நினைத்துக் கொள்ளும்படியாகிறது.

இங்ஙனம் அவள் சென்றுபோன நாட்களின் இன்ப நிகழ்ச்சிகளை நினைக்கும்போதெல்லாம் அவள் மனதில் பேரற்புதமான ஒருவகை ஆனந்தம் பொங்கும். அத்துடன் வேறொரு சிந்தனை அவள் உள்ளத்தில் உதயமாகும். அது மற்றொன்றுமல்ல; நளினன் அவளது பிராணநாதன் என்ற எண்ணமே. உடனே பாவினி வெட்க மிகுதியால் தலைகுனிந்து, "அவரருகே நான் எங்ஙனம் செல்வேன்?" என தனக்குள்ளேயே வினவுவாள். மறுகணம் "நளினன் முன்போல் என்னிடம் அன்பும், நேசமும் பாராட்டுவார். அதனால் நான் நாணமடைவேன்" என்றெண்ணி முகத்தைக் கைகளால் மறைத்துக்கொள்ளுவாள். இங்ஙனம் அச்சுந்தர விளங்கொடி நளினன் வருகையை ஒவ்வொரு விநாடியும் ஆவலோடு எதிர்பார்த்தவண்ண மிருந்தாள். காமினி தனது மருமகளை ஆடையணிகளால் சிறப்பாக அலங்கரித்து விட்டு, வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

ஃ

சின்னேரத்திற்கெல்லாம் பாவினி மெல்ல நடந்துவந்து வீட்டின்முன் நின்று தன் கூந்தல் கலையாது ஒழுங்காக யிருக்கிறதாவென்று கைகளால் தடவிப் பார்த்தாள். மனம் கவரும் புன்னகை அவள் முகத்தில் தவழ்ந்துகொண்டிருந்தது. சந்தோஷ மிகுதியால் அவளிதயம் மிக விரைவாய் அடித்துக்கொண்டது. ஆ! அவள் அவ்விதம் திடுக்கிட்டு மருண்டு அங்கு மிங்கும் நோக்கியதேன்? எக்காரணத்தாலோ அவள் திகிலடைந்து வாசலை அணுகினாள். அவள் கொண்டது வீண் திகில்! எவ்வித காலடி யோசையும் அவள் காதிற்கெட்டவில்லை. அவள் வாயிலினருகே நின்று எதிரே காணப்பட்ட இனிய காட்சிகளில் மனதைச் செலுத்தலானாள்.

ஃ

குளிர்ந்த தருக்கள் நிறைந்து மாலைக் கதிரவனின் மஞ்சள் கிரணங்களால் பொன்மயமாய்த் திகழ்ந்த நிலப்பரப்பு அவள் முன் காணப்பட்டது. இளந்தென்றல் செடிகொடிகளில் புஷ்பித்திருந்த மலர்களின் நறுமணத்தையும், மகரந்தப் பொடியையும் வாரி நாற்றிசையு மிறைத்தவண்ணம் அப்பசும்புற்றரைமீது மெல்லெனத் தவழ்ந்துவிளையாடிக்கொண்டிருந்தது. அந் நறுமணத்தை நுகர்ந்து களிவெறி கொண்டதுபோல் புற்கள் யாவும் தலை சாய்த்து அங்குமிங்கும் அசைந்தாடி நடனம் புரிந்தவண்ண மிருந்தன. வானோக்கி எழுந்த மரங்களின் உச்சிகள் தங்கத் தகடுபோல் துலங்க, அவற்றின் இலைகளெல்லாம் இடையிடையே சல சலவென்று ஒலித்தன. குயிலும் சக்கிரவாகமும் தமது இனிய குரலால் அவ்விடமெங்கும் இன்னிசை பரப்பின. இத்தகைய ஆனந்தமான இயற்கைக் காட்சிகள் என்றுமில்லாத விதமாய் அன்று அவள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன. அம் மாலைக் கதிரவனின் மஞ்சள் கிரணங்கள் அவளுள்ளத்தில் ஆனந்தப்பேரொளி வீசின. அத் தென்றல் மகிழ்ச்சியுற்ற

சில வஸ்துக்கள் சாப்பிடத்தகாததென ஸ்மிருதிகளில் மறுக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சம் நேரிட்டுவிடுமாகில், அப்போது மேற்கூறிய மறுக்கப்பட்ட பண்டங்களைச் சாப்பிட்டால்தான் பிழைப்பு; இல்லையெனில் சாவு என்று நிச்சயமாய் விடும்பக்ஷத்தில் அவைகளைச் சாப்பிடலாமென்று சாஸ்திரம் இருக்கிறது. அதற்குத்தான் அபதர்மம் என்று பெயர்.

அவள் மனதை சலனமுறுவித்தது. இங்ஙனம் அக் குலக்கொடி கண்ணுக்கினிய அற்புதக் காட்சிகளில் ஈடுபட்டும், ஆனந்தமாகத் தவழ்ந்து கொஞ்சி விளையாடித் தன்னங்கங்குளிரத் தழுவிக்கொள்ளும் இளந்தென்றலின் இன்பசுகத்தை அனுபவித்தும் மெய் மறந்தவளா யிருக்கையில், அவளது அண்ணனான இராமபிரசாத் திடீரென உள்ளே வந்து உரக்கக் கூவினன்:—"பாவினி! நீ என் இங்கு நிற்கிறாய்? நளினன் இதோ வந்து விட்டான். வா, அங்கு போவோம்."

ஃ

அவளது நெற்றியில் அரும்பிய வியர்வை நீர்த் துளிகள் முத்துகள் போல் உதிர்ந்தன. அவள் அசைவற்று அப்படியே நின்றாள். இராமபிரசாத் அவளை அணுகி உற்று நோக்க, அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. இராம பிரசாத் தன்னைப் பரிகாசம் செய்வதாக அவள் எண்ணினாள். அவன் நகைத்துக்கொண்டு அவள் கரத்தைப்பற்றி மற்றவர்கள் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

ஃ

காமினி பாவினியைக் கண்டதும் ஆனந்த மேலீட்டால் பின் வருமாறு கூறினாள்:—

"நளினா! உனக்கு இவளைத் தெரியுமா? நீ இவ்வூர் விட்டுச்சென்றபோது இவள் குழந்தையாக இருந்தாள். ஆனால், இப்போது பார், அவள் எவ்வளவு சீக்கிரம் வளர்ந்திருக்கிறாளென்று"

ஃ

நளினனுக்கு அவள் நினைவேயில்லை. அவன் அவளை உற்று நோக்கிய வண்ணம் வினவினான்:—"இவள் யார்?"

உடனே இராமபிரசாத் பதிலளித்தான்:—"என்ன நளினா! இவன் பாவினியல்லவா?"

ஃ

நளினன் அவளை இனிதறிந்து கொண்டவனாய் சட்டென தன் கைகளை நீட்டிய வண்ணம் அவளை அணுகி ஆங்கிலத்தில் கூறினான்:—

ஃ

"ஹலோ, பாவினி! நீ இவ்வளவு சொற்ப காலத்திற்குள் எவ்வளவு சீக்கிரம் வளர்ந்து விட்டாய்! சௌக்கியமா?"

ஃ

பாவினிக்கு ஆங்கிலம் தெரியாது. நளினனுக்கு மணம் செய்து கொடுக்க வேண்டுமென்று பெற்றோர் தீர்மானித்தபின் அவள் ஆங்கிலம் கற்க மிகுந்த ஆசை கொண்டாள். அவள் இராமபிரசாதிடம் தன் விருப்பத்தைப் பலமுறை வெளியிட்டளாயினும், அவன் அதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டு வாளாவிருந்தான். ஆதலால், அவள் இப்போது இராம

விவாகத்திற்கு எல்லோரையும் தருவித்து விடுகிறார்கள். வந்தவர்களில் சிலர் வேறொரு விவாகத்திற்கும் சென்று அங்கேயே புசித்துவிட்டு வந்திருந்தாலும், அவர்கள் இங்கு உண்டார்களா என்று கவனிப்பதற்குக்கூட மனுஷ்யர்கள் இல்லாமற் போகிறார்கள். விவாகத்தை நடத்துகிறவரோ மற்றவர்களை நம்பி விடுகிறார். மற்றவர்களோ தங்களைச் சேர்ந்தவர்களை மட்டும் கவனித்துக்கொள்வதில் கண்ணாகிறார்கள்.

பிரசாத்பேரில் அடங்காத கோபம் கொண்டதோடு, நளினன் தன்னை ஏளனம் செய்வதாக நினைத்து வெட்கமும் அடைந்தாள். அவன் தனக்கு உதவி செய்திருந்தால் அமமொழியில் தேர்ச்சிப் பெற்றிருக்கக் கூடுமென பாவினி நம்பினாள். வெட்கமும், வெருட்சியும், வெகுளியும் ஒருங்கே அடைந்ததால் அவளுக்குப் பேச நாவெழவில்லை. அந்நிலையிலும் அவளழகு பன்மடங்கு மிகுந்து தோன்றியது. காமினி பூரண திருப்தியடைந்தவளாய் தனது நெடுநாளைய எண்ணத்தை—ஆசையை மகனிடம் வெளியிடலானாள்:—

ஃ

"நளினா! நீ இவ்வளவு அழகு வாய்ந்த பெண்ணை இங்கிலாந்தில் பார்த்ததுண்டா? நீ முதலில் இவளைக் கலியாணம் பண்ணிக்கொள் மற்ற காரியங்களையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்." அவள் மீண்டும் கூறினாள்:—"கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இனி, முகூர்த்தம் பார்த்து அழைப்புக் கடிதங்கள் அனுப்பவேண்டும். வருகிற ஞாயற்றுக்கிழமையன்றே ஆரம்பச் சடங்குகளை யெல்லாம் முடித்து விடுவது நலம்."

ஃ

காமினி ஏற்கனவே மண விஷயத்தைப் பற்றி அவனுக்கு அனுப்பிய கடிதங்களில் பலமுறை குறிப்பிட்டிருந்தாள். நளினன் அதைப் படித்த போதெல்லாம் தன் தாயார் தனக்கு ஆறுதல் அளிப்பதற்காக அவ்வாறு வரைந்திருப்பதாய் மனதை சமாதானம் செய்து கொண்டான். ஆனால், இப்போது காமினி கூறியது உண்மை யென்று மனதில் படவே அவன் பெரும் குழப்பமடைந்தான். அவனது மனக் கலக்கத்தைக் கண்டு ஹரிலால், "இப்பொழுதே கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தவில்லை. ஆற அமரச் செய்தால் போதும்." என்றார்.

ஃ

"அது கூடாது; கலியாணம் விரைவில் நடைபெறவேண்டும். ஆனால், நளினா! நானொன்று கூறுகிறேன். விவாகம் முடிந்ததும் நீ அவளை அழைத்துச் சென்றுவிடாதே. அவள் கலியாணமாகிச் சந்தோஷமாயிருப்பதை நான் சில நாட்கள் கண்குளிரப் பார்க்கவேண்டும். ஸ்நானச சடங்குகளை நாளைக்கே முடித்துவிடவேண்டும். நீ என்ன கூறுகிறாய்?" என்றாள் காமினி.

ஃ

நளினன் ஒன்றும் கூறவில்லை. அவன் இரண்டொரு முறை இருமிவிட்டு ஏதோ கூற வாயெடுத்தானாயினும், அவனுக்குப் பேச நாவெழவில்லை காமினி தன் கணவனை நோக்கி, "சடங்குகளை நாளையத்தினமே முடித்துவிடவேண்டும் எல்லாம் இப்பொழுதே ஆயத்தம் செய்ய வேண்டும்" என்றாள்.

ஃ

சும்மா நடந்து செல்வதில் பயனில்லை. குறித்த இடத்தை நோக்கி நடந்தால்தான் பயனுண்டு. ஆகவே, உன்னுடைய வேலை— உன்னுடைய கடமை—நீ நடந்து செல்லவேண்டிய திசை இன்னதென்று நிச்சயமாய் அறிந்து கொள்வதற்கு—நீ சென்று அடைய விரும்பும் இடத்தை உறுதி செய்து கொள்ளுதல் உனது முதல் காரியமாக இருக்கவேண்டும்.

நளினன் திடீரென சிதைவு பட்ட குரலில் கூறினன்:—"வேண்டாம், அம்மா. ஆனல் இப்போது ....இப்போது ....இப்போழுது வேண்டாம்."

நளினன் மறுப்பதைக் கண்டு இராமபிரசாத் ஏளனமாக வினவினன்:—"நளினு! நீ ஏன் இப்படி உளறுகிருய்? இந்த முணுமுணுப்பும் திக்குமுக்கும் எதற்கு? உனக்கு விவாகமாகிவிட்டதா?"

நளினன் முகம் மாறுபட்டது. "இராமா! கண்டபடி பேசாதே. என் மனதின் கொந்தளிப்பை நீ அறிவாயா? இதென்ன விளையாட்டு!" என அவசரத்தோடு கடாவினன் அவன். "இப்படியெல்லாம் பேசாதே, அப்பா" என்று காமினி இராமபிரசாதைக் கடிந்துரைத்து அவன் வாயை அடக்கினன்.

(மற்றதில் முடிவு)

T. S. சங்கரலிங்கம்.

தாராள வாழ்வுக்கு ஆசி.

சிலருக்குக் கை வெகு தாராளம். பிறருக்கு இலேசில் தாராளமாகவே யாவும் செய்வர். கடையிலிருந்து எது வாங்கினும் ஏராளமாகவே வாங்கிவருவர். காலணவுக்குப் பதில் ஒரு அணு செலவிடுவார்கள். இத்தகைய தாராளக் கைக்கு அப்படியே செலவிடப் பணமும் தாராளமாய்க் கிடைக்மாறு கடவுள் ஆசீர்வதிக்கிருர். அவர்களும் தாராளப் பெருந்தன்மையாகவே இருந்து தங்கள் காலத்தைக் கழித்துவிடுகிருர்கள். தாராளத்திலும் ஒரு எல்லைக்குட்பட்டு நிதானத்திலே, கடன்படாத வழியில் எச்சரிக்கையுடனிருப்போர்க்கு எக்காலத்திலும் க்ஷேமமேதான். இனி, தரித்திரச் செட்டுக் கையையீயா, என்றைக்கும் தரித்திர வாழ்வாகவே கிடைக்கும்படிக் கடவுள் செய்துவிடுகிருர்.

ஒரு விவாகத்திற்குப் பழங்காலத்து மனுஷ்யரொருவர் செல்ல நேர்ந்தால், விவாகத்துக்கு வந்துள்ளோரிற் பலரை அவருக்கு இன்னின்னர் என்று தெரிவதேயில்லை. பெரும்பாலும் புதிதாயுண்டான சந்ததியின் பிறப்புகளாயிருப்பதில் அவர்கள் இன்னரின் குமாரன் குமார்த்திகள் என்று கண்டு கொள்ளவும் முடிகிறதில்லை தன்னேடு ஒத்துத் தனக்குச் சமமாய் அறிமுகமாய்த் தெரிந்திருந்தவர்களில் அநேகர் காலமாய் விட்டதில் அங்கு வந்துள்ளோர் புது முகங்களாக, அவர்களோடு தானும் ஒரு பக்கத்தில் வெறுமனே உட்கார நேருகிறது. தன்னை யறிந்தோராக அங்கு இரண்டொருவரே தென்படுவதால் மனக்களிப்பும் உண்டாவதில்லை. விவாக சபையில் காலஞ்சென்ற பழயவர்கள் இருந்தபோதிருந்த கௌரவமும் மதிப்பும் இப்போது காண்பதற்கில்லை யென்று அவர் எண்ணுகிருர்.

பேனவால் கிழிக்கும் எழுத்துகளின் கோடு பிறருக்குச் சில சமயங்களில் எவ்வளவோ உபத்திரவத்தை விளைத்து விடுகின்றது.

ஒன்பதுவித ரஸங்கள்.

சிருங்காரம், வீரம், ரௌத்ரம், அற்புதம், சாந்தம், பீபத்ஸம், பயானகம், கருணை, ஹாஸ்யம் என்று ஒன்பது வகைப்படும். இவைகளில் முதலில் சொன்ன ஐந்தும் உத்தம நாயகனுடைய வர்ணனையில் உபயோகிக்கப்படும்.

ராமன் ஸீதையை விவாகம் செய்துகொண்டு, அவளுடன் அயோத்தியில் பலவிதமான ஸுகங்களை யனுபவித்ததால் ஸம்போக சிருங்காரமும், அவளை விட்டுப் பிரிந்து வருந்துவது விப்ர ஸம்ப சிருங்காரமும், மந்தரையின் தண்டனையும், சூர்ப்பநகையின் தண்டனையும், மதுவனத்தை யழிப்பதால் ஹாஸ்ய ரஸமும், தசரதர் ராமனை விட்டுப் பிரிந்து அந்தத் துக்கத்தால் மரணமடைவதால் கருணாரஸமும், ஆஞ்சநேயர், லக்ஷ்மணன், ஸுக்ரீவன், அங்கதன் முதலியவர்களின் செயல்களால் வீர ரஸமும், ராவணன், இந்திரஜித், கும்பகர்ணன் முதலியவர்களின் சரிதங்கள் ரௌத்ர ரஸமும், மாரீசன், தாடகை முதலியவர்களின் கதையால் பயானகமும், கபந்தன், விராதன், கும்பகர்ணன் முதலியவர்களின் வதத்தால் பீபத்ஸமும், தாடகை, மாரீசன், ஸுபாஹு, பரசுராமன், கபந்தன், விராதன், காகாஸுரன், வாலி, கும்பகர்ணன், ராவணன், கரன், தூஷணன் முதலியவர்களுடன் ராமனும், இந்திரஜித்துடன் லக்ஷ்மணனும் செய்த யத்தனங்களாலும், மாருதி ஸமுத்திரத்தைத் தாண்டி லங்கையில் பிரவேசித்து அசோக வனத்தை யழித்து லங்கையைக் கொளுத்தினதினாலும் ஆச்சர்யமென்ற அற்புத ரஸமும், சபரி, சரபங்கர், பரத்வாஜர் முதலியவர்களின் கதைகளால் சாந்த ரஸமும், ஸ்ரீமத் ராமாயணத்தில் வர்ணிக்கப்படுகின்றன. ஆனால், கருணை யென்ற ஒரே ரஸமே மேற் சொன்னவைகளால் மாறுகிறதென்று பவபூதியின் கொள்கை.

சி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ.

பண்டிகைகள் தரும் உற்சாகம்.

தீபாவளி பண்டிகையில் விளையும் உற்சாகத்தை யாவரும் அறிவர். பாணம் முதலியவற்றைச் சுடுவதால் உண்டாகும் கந்தகப்புகை வீட்டின் துர் நாற்றத்தைப் போக்குகிறது. தீபாவளியின் பெயரால் வருட முழுமைக்கும் வேண்டிய துணிமணிகள் சேகரித்துக் கொள்ளப்படுகின்றன. எவ்வளவு துயரம் வேதனைகள் இருப்பினும் பண்டிகைகளின் சந்தோஷத்தால் மறக்கும்படியாகின்றன. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விசேஷத்தைப் பெற்றுள்ளன. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம். மார்கழியில் தேவாலயங்களில் உத்ஸவம். தைமாதம் சங்கராந்தி பொங்கல் பண்டிகை. மாசியில் மகம், தெப்பம். பங்குனியில் பங்குனி உத்திரம் சித்திரையில் ரதோத்ஸவம். ஆனியில் ஆனித்திருமஞ்சனம். ஆடியில், பதினெட்டாம் பெருக்குவிழா. ஆவணியில் "பூணூலு—கிருஷ்ணன்—பிள்ளையாரு." புரட்டாசியில் விரத நாட்கள், நவராத்திரி. இவ்வாறாகப் பிரதி மாதங்களும் ஒவ்வொரு விசேஷத்தையும் விரதாதி நோன்புகளையும் கொண்டதாயும் ஆஸ்திக புத்தியைப் பெருக்குகின்றன, பண்டிகை தினங்களும் பகவானை நினைத்துப் பரவசப்பட வைக்கின்றன. இவ்விதமே நதிகள், விருக்ஷங்கள், மலைகள், ஸ்தலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேஷத்தைப் பெற்று பகவத்சிந்தனையை யூட்டுகின்றன. நம் முன்னோர்களின் ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் அதி உத்கிருஷ்டமானவைகள்.

பத்திராசிரியர் பதவியின் உயர்வு.



பாபு மிருணள் காந்தி போஸ் கல்கத்தா சர்வ கலாசாலையின் ஆதரவின் கீழ் செய்த பிரசங்கசாரம் பின்வருமாறு:—"பத்திரிகைத் தொழிலில் கெட்டிக்காரர்களுக்குக்கூட நல்ல ஜீவனோபாயம் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. **பத்திரிகைத் தொழிலில் ஒரு வசீகர மிருக்கிறது. அத்தொழிலில் முதலில் சேர்ந்தவர்கள் அதில் விடாமல் நிலைப்பதற்குக் காரணம் அத்தொழிலின் வசீகர சக்தியே. இவ்வளவுக்கும் அவர்களுக்கு சம்பளம்கூட அதிகமாய்க் கிடையாது. **ஒரு பத்திரிகாசிரியர் தொழில் எப்போதும் உற்சாகமற்றதாயிராது. இத்தொழிலில் மிகவும் உற்சாகமற்ற பாகம் பிரதி வாசிப்போர்களுடையது (ப்ருப்ரீடர்) தான். **பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிற் சங்க அக்கிராஸனரான ஸ்ரீமான் 'மிச்சல்' கூறுவதாவது:— "மற்றத்தொழில்களைக் காட்டிலும் இத்தொழிலுக்கு வசீகரம் அதிகம்ஏற்படக் காரணமிருக்கிறது. வாழ்க்கையில் நடக்கும் அநேக புதுமாதிரியான ஸம்பவங்களைப்பற்றி இத்தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்குத் தினமும் தெரிகிறது. அம்மாதிரியான அனுபவமே ஒரு பெரிய வசீகர சக்தியல்லவா?" என்கிறார். இத்தொழிலே ஒரு கௌரவமான தொழிலாகிவிட்டது. இதில் ஈடுபட்ட யாவரும் உற்சாகமாக வேலை செய்ய வழியிருக்கிறது உலகத்திலுள்ள பெரிய தொழில்களிலே நான்காவதாகப் பத்திரிகைத் தொழில் விளங்குகிறது. **எம். ஏ. பட்டம் பெற்றுவிட்டதினுல் மாத்திரம் ஒருவர் பத்திரிகாசிரியராகிவிட முடியாது. **பத்திரிகைத் தொழிலைப் பத்திரிகாலயத்திலேயே கற்பது, ஆராய்ச்சிச்சாலையில் விஞ்ஞான சாஸ்திரம் கற்பதுபோல் மிக்க நல்ல உபயோகமான முறைதான்.

ஃ

பட்டதாரியாய் இருந்தால் மட்டுமே பத்திரிகாசிரியராக முடியாது. பெரும் பட்டம் பெற்றவர்களையும் தோற்கடிக்கக்கூடிய சக்தியுடன் பல பத்திராசிரியர்கள் விளங்குகிறார்கள். நம் பத்திரிகாசிரியப் பிரமுகர்களில் அநேகர் பட்டதாரிகளேயல்ல. அவர்கள் கலாசாலை வாயிற்படியில்கூட நுழைந்தது கிடையாது. தங்களது சொந்த முயற்சியாலேயே அவர்கள் விஷயங்களை உணர்ந்து கொண்டார்கள். **பத்திரிகைத் தொழில் புத்தியை மாத்திரம் விருத்தி செய்யவில்லை. இத்தொழிலில் நன்னடக்கைக்கு மிகுந்த மதிப்புண்டு ஆனாலும், இத்தொழிலும் சில ஹீனர்கள் இல்லாது போகவில்லை. அவர்களாலும் தொழிலுக்கேற்பட்ட பெருமதிப்பைக் கெடுக்க முடியாது.

ஃ

**சீர்திருத்தக்காரர்களில் பெரும்பான்மையோர் உண்மை நெறி இல்

உங்களுடைய சொந்த திரவியத்தைக்கொண்டு ஒரு வியாபாரம் தொடங்கினுல், அதற்கு நீங்கள் தகுதி யுடையவர்களாவென்று உங்களை எவரும் பரீக்ஷிக்கப் போவதில்லை. ஆனல், உத்தியோகத்துக்கோ நீங்கள் பரீக்ஷிக்கப் படுவதோடுகூட, ஒரு பக்கம் நல்ல அதிர்ஷ்டமும் வேண்டியிருக்கிறது.

லாதவர்கள் என்பது பத்திரிகாசிரியருக்கே தெரியும். தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியம் பத்திரிகாசிரியருக்கு இல்லை. மௌனத்துடன் பதட்டமில்லாமல் அவர் காரியங்களைக் கவனிக்கவேண்டும். அவர் தம்மைப் பற்றி ஒன்றும் சொல்லிக்கொள்ளக் கூடாது. தாம் எழுதும் விஷயங்களின் மூலமாக அவர் தம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்களுக்கு அறிவித்தாலே போதுமானது. உண்மை, நடுநிலைமை; தாராளம், காரியத்தில் கருத்து, சுயநலமில்லாத பொதுஜன சேவை இவைகள்தான் ஒரு பத்திரிகாசிரியருக்கு அவசியமான குணங்கள். **நம் தேசத்தில் சமாசாரம் பிரசுரித்துத் தலையங்கம் எழுதுவதே பத்திரிகைத் தொழிலின் முக்கிய அம்சமாகக் கருதப்பட்டு வருகிறது. **பத்திரிகைத் தொழிலை விருத்தி செய்வதால் அறியாமை அழியும். **ஏழ்மையால் அறியாமை ஏற்பட்டிருக்கிறது. அறிவு ஏற்படப் படிப்புவேண்டும். படிப்பிற்குப் பணம் வேண்டும்."

பணிந்த தன்மையும் அன்பும்

எவ்வளவு செல்வமிருப்பினும் சிலருக்குக் கர்வப்படத் தெரிவதேயில்லை. எப்பொழுதும் பணிந்து வணங்கிய சுபாவமாக இருப்பர். பொட்டகிராப் எடுக்கும்போதுகூட மற்றவரை மேலே இருக்கவிட்டுத் தாங்கள் கீழே உட்காருவர். தாங்கள் மதித்த மனிதனுடைய அருமையை நன்குணர்வர். அந்த மனிதர் ஏழ்மையிலிருப்பினும், அவரை உயர்த்தியே கௌரவிப்பர். இன்னோரின் பணிவும் பெருந்தன்மையும் மற்றவர்களை அன்புக்கு அடிமைப்படுத்தி விடுகின்றது. இத்தகையோரை ஒரு நாள் காணத்தவறினுங் கூட, அது ஒரு பெரிய ஏக்கமாய் விடும்படி செய்கிறது. ஒருவர் அன்பு உணர்த்த, மற்றவரும் அதைவிட அதிக அன்பிருப்பது பெரிய பாக்கியம்.

பளபளப்பும் வளவளப்பும்.

அதிக நாளாகிச் சுவற்றின் பளபளப்பு மங்கி மாறிவிட்டாலும், அந்தப் பளபளப்புக்குக் காரணமாய் நின்ற வளவளப்பு சீக்கிரம் மாறாது. எவ்வளவுதான் இழிந்த நிலை எய்திடினும் பெருந்தன்மையாளரின் குணம் அழியாது. ஒருவரது கௌரவம் பிறரால் கெட்டுவிடினும், அவரது அன்பர்கள் தமது மதிப்பை என்றுமே உணர்த்தி மேன்மைப்படுத்துவரேயன்றித் தாழ்த்தார்கள். கோயிற் சுவர்களெல்லாம் இடிந்து கேவலத்திற் கிடப்பினும், அது பாடல்பெற்ற ஸ்தலமாயின். அதன் பூர்வ மதிப்பும், யாத்ரீகர்களின் வருகையும் அதற்கு எப்போதுமுண்டு.

பிறமதஸ்தர்களின் மொழி பெயர்ப்பு.

(ஸ்ரீ விபின சந்திரபாலரின் வாக்கு.)

பிறமதஸ்தர்கள் நமது வேதங்களை மொழி பெயர்க்கக் கூடும்; இராமாயணத்தில் ஒரு சருக்கத்தையேனும், இரண்டொரு வேதாந்த சூத்திரங்களையேனும் மொழி பெயர்த்துவிட்டுச் சிறந்த கீழ் தேசக் கல்வி விற்பன்னர் என்ற பிரதிஷ்டையையும் சம்பாதிக்கக் கூடும். ஆனால், வடமொழி வியாகரணத்தை ஓதிய மாத்திரத்தாலும், சில வேதாந்த சூத்திரங்களையும் நியாய சூத்திரங்களையும் மொழிபெயர்த்த மாத்திரத்தாலுமே நம் தேச தத்துவங்களையும் சம்பிரதாய வகைகளையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் அந்நிய தேசத்தாருக்கு உண்டாய் விடுமா? விதேசஸ்தர்கள் நம்மினும் வேறான மனச்சார்பும், வேறான ஐதிகங்களும், வேறான ஒழுக்கப் பயிற்சியும் உடையவர்களாதலின், நாம் உணருகிற அருத்தத்தில் அவர்கள் உணர முடிகிறதில்லை.

ஃ

நம் தேசத்தைப்பற்றி நன்றாய் அறிந்தர் ப்ரோபெஸர் மாக்ஸ் முல்லரைப்போல் மற்றெவரும் இருக்கப்போவதில்லை. ஆயினும், அவரது நூலைப்படித்துப் பார்த்தால், அந்தக் கீழ்த்தேச வித்யா விற்பன்னர் சொற்களை மொழி பெயர்த்தாரேயன்றி அவற்றின் கருத்து நன்கு விளங்குமாறு எழுதவில்லையென்று அடிக்கடியும் தோன்றும். பௌத்தமத நூலாகிய "தர்ம பதம்" என்ற கிரந்தத்துக்கு அவர் செய்துள்ள மொழி பெயர்ப்பை நான் முதலில் படித்த பொழுது, அம்மொழிபெயர்ப்பை, பாலி பாஷையிலுள்ள முதனூலுடன் ஒப்புநோக்கிப் படிக்கலானேன். பாலி பாஷையில் அதிகப் பயிற்சியில்லாமற் போயினும் சிறிது ஸம்ஸ்கிருதமும் பிராகிருதமும் தெரியும் பட்சத்தில் 'பாலி'யிலுள்ள முதனூலைப் படித்துணரலாம். ஆகவே, நான் 'தர்ம பத'த்தைப் படிக்கத் தொடங்கிய பொழுது மாக்ஸ் முல்லரின் மொழி பெயர்ப்பின் துணையைக் கொண்டேன். ஆனால், அதில் நான் கண்டது யாது? முதற் பக்கத்திலேயே தர்ம பதத்தில் பௌத்த மதத்தின் ஒழுக்கப் பயிற்சியை யெல்லாம் உணர்த்தும் பொருள் பொதிந்த சொல்லொன்று பிரயோகிக்கப் பட்டுள்ளது. அச்சொல் "நிருத்த வீர்ய" என்ற சொல்லேயாம். இந்தச் சொல்லின் பொருளைத் தெரிந்துகொள்ள எனக்கு மொழி பெயர்ப்பின் துணைவேண்டுவதில்லை. வீர்ய நிரோதம், க்ஷாத்ரதர்மம், ப்ரஹ்மசர்யம், இப்பதங்கள் சாதாரணமாக நம் தேசத்திலே வழக்கத்திலுள்ளவை.

ஃ

ஆயினும், மாக்ஸ்முல்லர் என்ன சொல்லுகிறார் பார்ப்போமென்று அவரது மொழி பெயர்ப்பைப் பார்த்தேன், அங்கே நான் கண்டது யாது? 'பலமுள்ள' என்று அவர் பொருள் கூறுகின்றார். அப்படியானால் சாண்டோ என்பவன் பாலாட்டியனாயிருக்கிறான். ஆனால், அவனுக்கு "நிருத்த வீர்ய" என்ற

விசேஷணத்தை அமைக்கலாமா? நமது பாஷை, நமது கருத்து, நமது வாழ்க்கை, நமது வழக்கங்கள். ஆசாரங்கள், நமது பரிச்ஞானம், நமது நாகரீகம் ஆகிய இவற்றிலெல்லாம் இந்த மேற்றிசைப் பண்டிதர்களுக்குள்ள அநுபவ ஞானம் இவ்வளவே. மாக்ஸ்முல்லரைப் போன்றவர்க்கே "கிருத்த வீர்ய" என்ற சொல்லிலே சாண்டோவின் வலிமையைவிட அதிகமாக ஒன்னும் விளங்கவில்லையாயின், ஆக்ஸ்போர்ட் கேம்ப்ரிட்ஜ் கலாசாலைகளில் தேறி வெளிவருகின்றவர் எவ்வளவு கல்விப புலமையுடையவராயினும், இந்தியாவுக்கு வந்து நம் ஜாதீயக் கல்வியை ஜாதீய வழிகளை யொட்டிப் போதிக்கக் கூடியவர்களென்று எவ்வாறு எதிர்பார்க்ககலாம்? அது சாத்தியமில்லாத விஷயம்.

எதையும் சிந்தித்து நிதானிக்கும் நுட்ப புத்தி.

அருமையான நூல் சகாய விலையில் கிடைக்கிறதென்று ஒருவர்கூற, அதற்கு ஒரு வியாபாரி அந்த நூல் கடின நடை; அது நமக்கு அர்த்தம் விளங்காது, அதிலுள்ள விஷயங்கள் நமது சாமான்ய புத்திக்கு எட்டாது; அதை வாங்கிப் பயனில்லை என்றார். மற்றவருக்கும் அது சரிதானென்று பட்டது. ஒன்றை வாங்குமுன் நமக்கு அது பயன்தருமா என்தையும் சிந்திக்கும் நுட்ப அறிவு வேண்டும்.

பழய மாப்பிள்ளைகளின் பணிவு!
புதிய மாப்பிள்ளைகளின் கிறுக்கு!

பழய மாப்பிள்ளையை மற்றொரு பழய மாப்பிள்ளை சந்தித்தால் இருவரும் ஒரே குணமுடையவராய், குடித்தனத்தின் சுமையையும் கவலைகளையும் கண்டுணர்ந்தவர்களாய் ஒருவருக்கொருவர் அன்புடன் பரஸ்பரம் உதவிக்கொண்டு ஒன்றுபட்டிருப்பர். இது பழய மாப்பிள்ளைகளின் குணமாகும். இனி, புது மாப்பிள்ளையோ புதிய கல்யாணக்காரரான புதிய கிறுக்கு முறைப்பிலே கிடந்து துள்ளுவார். உலகத்திலே நடவாத கல்யாணத்தைத் தாமே புதிதாகச் செய்துகொண்டதுபோல் எண்ணிப் புது நடை, புது ஒய்யாரம், புது ராங்கி காட்டுவார். பழய நண்பர்களை மறப்பார். முன்போல் நேசர்களிடம் அடிக்கடி வரார். இந்தப் புதிய மாப்பிள்ளைகளின் கோணல் போக்குகளைக் கண்டு பழய மாப்பிள்ளைகள் வெறுத்து வியப்புடன் சிரிப்பார்கள்.

ஒருவர்மீது அன்பிருந்தால்தான் அவர்களுடைய உணர்ச்சிக்கு ஒரு ஸ்வரூபம் கொடுத்து அதை மதித்துக் கவனிக்க எண்ணமுண்டாகும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



தந்தை:—கடிதத்தைத் தெப்பக் குளம் தபாலாபீஸில் போட்டுவிட்டாயா?

குமாரன்:—நீங்கள் கடிதத்தைக் கொடுத்தபோது தெப்பக்குளத்தில் போடும்படி சொல்லிவிட்டு, இப்போது தபாலாபீஸில் போட்டாயா என்கிறீர்களே? நான் தெப்பக்குளத்தில்தான் போட்டேன்.

ஃ

மனைவி:—நகைக் கூலிக்காக நான் உங்களிடம் ஆறு ரூபாய் கொடுத்தேனே. புது நகை வாங்குவதற்கல்லவா வைத்திருந்தேன். நீங்கள் எப்போது கொடுக்கிறீர்கள்?

புருஷன்:—நீ எனக்குத் தெரியாமல் பக்கத்து வீட்டில் வட்டிக்கு 20-ரூபாய் கொடுத்தாயே. அவர்கள் திருப்பித் தரும்போது நானும் வட்டி போட்டுக் கொடுத்துவிடுகிறேன்.

ஃ

ஒரு கனவான் இரண்டாவது விவாகம் செய்துகொண்டு, தனக்குத் தெரிந்த ஒரு தாசிவீட்டுக்குச் செல்ல, அத்தாசி, பழம், புஷ்பம், தாம்பூலம் கொடுத்து அனுப்பினள். அவற்றைத் தனது புது மனைவியிடம் கனவான் இன்னார் கொடுத்ததெனச் சொல்லித் தர. அவள் அதை வாங்காமலே, "நாளைக்கு உம்மை மூலையிற் சாய்த்துவைத்து அழும்போது நான் தாலியறுப்பேனா, அந்தத் தாசி முண்டை தாலியறுப்பாளா?" என்று கேட்டனளாம்!

ஃ

ஒரு வைத்தியர் மூலரோகமென்று வந்தவருக்கு ஐந்து ரூபாய் பெறுமான மருந்தை விலையின்றிக் கொடுத்து அதை யுண்ணும் பத்திய விவரமும் தெரிவித்தார். அந்த சமயம் பால்காரன் வந்து தனது பாக்கி ஒரு ரூபாயைக் கட்டாயம் தந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்தினன். வைத்தியரிடம் அந்த சமயம் ஒரு காசுமில்லை. எதிரிலிருந்த மூலரோகக்காரரைத் தமக்கு ஒரு ரூபா கடன் தருமாறு வேண்டினர். மூலரோகக்காரரோ தமக்குச் செலவுகள் அதிகமென்றும் தரமுடியாதென்றும் கண்டிதமாய்க் கூறினர். இந்த சமயம் மற்றொருவர் வந்து தமது மூலரோகத்திற்கு மருந்து கொடுக்கும்படி வேண்டினர். ஒரு டப்பி ஐந்து ரூபாவென்று கூற, அவர் உடனே ஐந்து ரூபாய்களைத் தர, வைத்தியர் முந்திய மூலரோகக்காரருக்குத் தந்த டப்பியைப் பிடுங்கி, ரூபாய் தந்தவருக்குக் கொடுத்து, பால்காரனிடம் ஒரு ரூபாய் தந்து அனுப்பிவிட்டு, பாக்கி நான்கு ரூபாய்களையும் பெட்டியில் வைத்துப் பூட்டினர். கடன் தர மறுத்த மூலரோகக்காரர் தமக்கு மருந்து கேட்க, ரூபாய் ஐந்து

ஒருவன்மீது குற்றம் சுமத்துவோர் சில சமயங்களில் தங்களின் அயோக்கியத்தனத்தால் அவ்வாறு செய்ததாகவும் புலப்படுத்திக்கொண்டு அவமானப் படுகிறார்கள். அத்தகையோர் முன்பாக நீங்கள் நியாய வழியையே யனுசரித்து நியாயமாகவே நடந்து கொள்வதினின்றும் உங்கள் விரோதிகளைக் குற்றவாளிகளாக்குங்கள்.

கொண்டுவாரும், கொடுக்கிறேன். நான் இலவசத்தில் உமக்கு மருந்தைத் தருவானேன், பிறகு ஒரு ரூபாய்க்கு உம்மிடம் கடனாகக் கேட்டுக் கெஞ்சுவானேன் என்றார். மூல ரோகக்காரர் வெட்கி ஒரு ரூபாயைத் தர வர, ஓ! முடியாது, சரியாக ஐந்து ரூபாய் கொடுத்தாலன்றி மருந்து கிடைக்காதென்று மறுத்து விட்டார். சிலருக்குப் புஸ்தகத்தையோ மருந்தையோ பெறும் போது, அதைப் பணமாக நினைக்கிற புத்தியில்லை. இலவசத்தில் நக்கிவிடலாமென்று பார்க்கிறார்கள்.

ஃ

வெங்கிடசாமி:—(தான் தங்கியிருக்கும் வீட்டுக்காரரைப் பார்த்து) இந்த மனிதரும், அந்த ஸ்திரீயும் மேல்மாடியில் வெகு சரசமாய்ப் பேசிக்கொண்டிருக்க என் கண்களாலேயே கண்டேன். சுத்த அயோக்கிய மனிதர்.

வீட்டுக்காரர்:—அவர் அப்படிப் பேசியது அயோக்கியதையாகும் போது, நீரும் நானும் சமயலறையில் சென்று நமது பெண்களுடன் பேசுவதும் அயோக்கியதையே யாகிவிடும்.

வெங்:—அப்படியானால் என்ன அருத்தம்?

வீட்:—இன்னும் உமது மூளையில் ஏறவில்லையா? அந்த ஸ்திரீ அவரது மனைவி.

ஃ

புருஷன்:—இன்னும் அதிகமாகப் பேசி என்னைக் கோபமூட்டாதே. நான் உன் மூஞ்சியிலே உதைக்கிற உதையிலே உன் பல்லெல்லாம் கீழே உதிர்ந்துவிடும். வாயை மூடடி.

பெண்டாட்டி:—எங்கே உதைச்சுப் பாரு, அப்போ தெரியும் உன் பாடு. பல்லெல்லாம் உதிருமோ? போலீஸ்காரனைத் தருவித்தால் உன்னைப் பிடித்துக்கொண்டு போய்விடுவான்.

புரு:—எந்தப் போலீஸ்காரன் வந்தாலும் நான் உன் மூஞ்சியிலே உதைத்துக் கீழே விழுந்துபோன பல்லுகளை மறுபடியும் உன் வாயிலே ஒட்டவைக்க முடியாது. நான் இதற்கெல்லாம் பயந்துவிடுகிறவனல்ல.

பெண்:—நான் இல்லாவிட்டால் உன் பாடு திக்கற்ற பிணம்தான். இதோ நான் போய்விடுகிறேன் (என்று சேலை துணிகளை யெல்லாம் மூட்டையாகக் கட்டினாள்.)

புரு:—எண்டி இந்த வீம்பு? உனக்குப் போய்த் தங்குவதற்கு ஒரு வீடும் கிடையாது. போனாலும் ஒரு வேளைக்குமேல் எங்கும் இருக்க முடியாது. இது தெரிந்த சங்கதி. எண்டி சும்மா வீண் ஜம்பமும் முறுக்கும் காட்டுகிறாய்? இந்தக் குலுக்கு பிலுக்குகளெல்லாம் எத்தனையோ தடவை உன்னிடத்திலே நான் கண்டதுதானடி. சும்மா சும்மா வாயை நீட்டாதே. குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமாடி?

ஃ

துப்பம்மா:—என்னடி சீதா! நீ இந்தப் பசங்களோடும் குட்டிகளோ

உலக இன்பங்களிலே பற்று ஒருவனுக்கு அதிகரிக்குமாயின், மாயையானது அவனை விடாமற் பிடித்துக்கொள்ளும். ஆகவே, மாயையினின்றும் தன்னை நீக்கிக்கொள்ளவேண்டுவோன் வைராக்கியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்றும், விரக்தியைக் கைக்கொள்ளவேண்டு மெனவும் சொல்லப்படுகிறது.

டும் இங்கேயே படுத்துக்கொள்கிருயே. அவர் ஒண்டியா மாடிமேலே கிடந்து தூக்கமில்லாமே அவஸ்தைப் படுவாரே. அங்கே போயல்லவோ நீ படுக்கவேணும்.

சீதா:—அங்கே போக எனக்கு வெட்கமாயிருக்கு. போக முடியவில்லே!

துப்பம்மா:—என்னடி வெட்கம்? இன்னும் உனக்கு ஒரு காயும் காய்க்கவில்லே. அதற்குள்ளே வெட்கம் வந்து பொத்திக்கிட்டுதோ? போடி போ! இனிமேலே இங்கே படுக்காதே. என்னடி நான் சொல்லுறது தெரியுதா?

ஃ

ரெட்டியார்:—என்ன செட்டியாரே! பட்டாணிக்கடை வைக்கப் போகிறீரே, நமது பையனைக் கடையில் வேலேக்கு வைத்துக்கொள்ளுகிறது தானே?

செட்டியார்:—சம்பளம் தருகிற பிடுங்கலே எனக்கு வேண்டாம். என் மனைவி, என் பெண், என் மருமகள், என் குமாரன் இவர்களெல்லாம் ஒருவரைமாற்றி யொருவர் கடையிலிருந்து வியாபாரம் செய்வார்கள். வேறு வேலேயாள் எனக்கு எதற்காக?

ஃ

ருக்மணி:—என்னடி, என்ன நடந்தது? அதை எனக்கு ரகசியமாய் கொஞ்சம் சொல்லு. நான் யாருக்கும் சொல்லமாட்டேன்.

ஜானகி;—உன் சாந்திமுகூர்த்தத்தின்போது உனக்கு என்னென்ன நடந்ததோ அதுதான் எனக்கும் நடந்தது. உனக்கு நடந்ததையெல்லாம் நீயே நினைத்துப் பார்த்துக்கொண்டால் எனக்கு நடந்ததும் தெரிந்துபோகும். இதிலே புதியது ஒன்றுமில்லே

ஃ

மாமியார்:—(மருமகனைப் பார்த்து) அவர்களெல்லாம் யாரு? வீடு நிறையக் கிடந்து வீண் செலவுகள் வைக்கிருர்கள். ஒவ்வொருவரும் என் பெண்ணைப் பார்த்துப் பல பல பேச்சும் பழிப்பும் பேசுகிருர்களே? அவர்களுக்கு அந்த வீட்டிலே என்ன வேலே? என்ன பாத்தியதை? இனிமேலே என் பெண்ணே எவராவது பேசினுல் பல்லேயுடைத்துவிடுவேன்.

மருமகன்:—வீட்டிலே நிறைந்திருக்கிற அவர்களெல்லாம் என்னே வளர்த்துக் காத்து ஒரு உருவாக்கி விட்டு என் க்ஷேமத்தைக் கோரினவர்கள். அவர்களுக்கு வேலே செய்யத்தான் உங்கள் பெண்ணே நான் விவாகம் செய்துகொண்டது. நீங்கள் எவர் பல்லேயும் உடைக்க வேண்டாம். உங்கள் மகளே அங்கே அனுப்பி வாழவைக்கவும் வேண்டாம். நன்ருகச் சிங்காரித்துத் தெருத்திண்ணேயிலே உட்காரவைத்து அழகு பார்த்துக் கொண்டிருங்கள். நான் போகிறேன்.

மாமி:—என் பெண்ணேத் தெருத்திண்ணேயிலே வைக்கும்படி எப்படிச் சொல்லலாம்? நாங்கள் என்ன கூட்டிக் கொடுக்கிறவர்களா? அவ்வளவு இழிவாகப் பேசலாச்சா?

மருமகன்:—நீங்கள் கூட்டிக் கொடுக்கிறவர்களென்று நான் சொன்னேனு? நீங்களாகத்தான் சொல்லுகிறீர்கள்.

எவ்வளவு மழை கொட்டினுலும் தனக்கு வேண்டியவர்கள் ரயிலில் வருகிருர்களென்ருல் மழையையும் பாராமல் ஓடச் செய்கிறது. ஏதாவது சாக்கு போக்கு சொல்லி வீட்டிலிருந்துவிட மனம் ஒப்புவதில்லே.

எனக்கு உங்களைப்பற்றி ஒரு சங்கதி யுமே இதுவரையில் தெரியாதே. இனிமே லல்லவா ஒவ்வொன்ருக நான் தெரிந்துகொள்ளவேணும்.

ஃ

பாப்பாயி:—என்னடி நீ இரண்டாம் தாரமாக அவரைக் கட்டிக் கொள்ளப் போகிருயே. உனக்கு முந்தியிருந்தவள் பெற்று வைத்து விட்டுப்போன குழந்தைகள் அங்கேயிருக்காமே. சொந்தத் தாயைப்போல் அவர்களை அன்பாக நடத்து.

முருகாயி:—போன சிறுக்கிக் கழுதை மூதேவி சும்மா போகக் கூடாதா? பாழும் குழந்தைகளை ஏன் வைத்துவிட்டுப் போனுள்? அவளை வைத்தாற்போல அவர்களையும் குழியில் வைக்கிற தெப்பவோ? தாலி கட்டிக்கொண்டு வீடடுக்குள் நுழைந்ததும் அந்தக் குழந்தைகளால் எனக்குப் பெரிய பிடுங்கல் ஏற்படுமேடியம்மா? எப்படியோ எல்லோரையும் அடக்கி மடக்கி முடுக்கித் தீர்த்துத் தொலைத்து நான் அரசாளப் பார்க்க வேணும். நான் என்ன இளைத்தவளா?

பெண் கேட்கவந்த அம்மாள்:—(இவ்வளவையும் மறைந்திருந்து கேட்டுவிட்டு) அம்மா, முருகாயி, அந்த மட்டில் உன்னுடைய குணத்தைச் சொல்லி விட்டாயே. அதுவே போதுமம்மா. நீ மகாராஜியாயிரு. நீ எங்கள் வீட்டிற்கு வந்து கஷ்டப் படவேண்டாம். நீ இங்கேயே இரு. நாங்கள் இப்போதே போகிறோம்.

(என்று தன்னுடன் வந்தவர்களை யழைத்துக்கொண்டு அவ்வீட்டினின்றும் நீங்கினுள். விவாகம் நின்று விட்டது. இதைக்கண்ட முருகாயியின் தாய், அடி மூதேவி, உன் வாயை வைத்துக்கொண்டு நீ எங்கே வாழப் போகிருய். வந்தவர்கள் உன் சொந்தக் குணத்தை யறிந்து செத்தோம் பிழைத்தோமென்று ஓடிப்போய் விட்டார்களே. இனி ஊரெல்லாம் சிரிக்குமே என்று வைதாள். முருகாயி மூலை வீட்டிலே குந்தி முணு முணுத்தாள். அவள் அரசாள நினைத்த அரசும் மண் மூடிப்போயிற்று.

ஃ

புருஷன்:—என்னடி, ரொம்ப மீறித் துள்ளுகிருய். சிவனே என்று என் பாட்டிலிருக்க, காலைப் பொழுதிலேயே வலிய சண்டைக்கு வருகிருயா? எனக்கு வருகிற சம்பளம் வீட்டுச் செலவுக்கே சரியாய் விடுகிறது. இந்த நிலையில் நான் தனியாக ரூபாய் 40-போலத் தீபாவளிக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டுச் செலவு செய்து நிர்வகித்துவிட்டு, அடுத்த மாத சம்பளம் வரும் வரையில் வீட்டுச் செலவுகளை நிதானமாய்ச் செட்டோடு செலவு செய்து கொண்டு போகப் பார்த்தால், என்னேடு, நீயும் சேர்ந்து, என் கஷ்டங்களை யறிந்து என் உழைப்பை விசுவாசத்துடனே உணர்ந்து, என் கஷ்டத்தில் பங்கு பெற்று நடக்கவேண்டாமா? வீட்டுப் புருஷன் எவ்வளவு கஷ்டப்படுகிருனென்று அவனிடத்தில் இரக்கம் வைத்து அவனேடு ஒட்டி நின்று சமயத்துக்குத் தக்கபடி போகவேண்டாமா? தீபாவளி கடன்கள் வேறே! விட்டைப் பழுதுபார்த்த

"சத்" என்பதின் உணர்ச்சி, "அசத்" வந்து தாக்கும்போதுதான் தனது உண்மையான ஸ்வரூபத்திலே தோன்றி விளங்கும். அரிச்சந்திரனின் "சத்" என்ற சத்தியம், விசுவாமித்திரனுடைய "அசத்" என்ற அசத்தியம் வந்து தாக்கியபோதுதான் நன்கு பிரகாசித்தது.

சடன் வேறே! இனி 10-நாளில் பண்டிக்குச் செலுத்தவேண்டிய 40-ரூபா நிர்ப்பந்தம் வேறே! இவ்வளவு பாடுகளுடன் மனிதன் கலங்கித் தத்தளிக்கும்போது அவனுக்குப் பக்கத்துத் துணையாயிருந்து அவன் பாடுகளை யறிந்து நடக்க வேண்டியதை விட்டுவிட்டு, அவனை எதிர்த்துச் சண்டையிடுகிறதா? பளா பளா குடித்தனம் வெகு நன்றாயிருக்கிறது!

மனைவி:—என்ன வாங்கிவந்து போட்டுவிட்டது? என்ன செலவுகள் பிரமாதமாய் நடந்துவிட்டது? மூன்று காசு முருங்கைக் கீரையை முழநீளம் நீட்டிக்கொண்டு வந்து போடுகிறதைத் தவிர்த்து வேறொன்றையும் காணேமே?

புருஷன்:—கீரை வாங்கிவந்தே னென்று குத்திக் குத்திக் காட்டாதே. கீரையோடு போகவில்லை; உருளைக் கிழங்கும் அரை வீசை வாங்கி, எப்போதும் இரண்டு மூன்று தினுசாகத்தான் வாங்கிப் போட்டிருக்கிறது. கீரை மட்டுமே தனியாக வாங்கி வந்து போடவில்லை.

மனைவி.—எல்லாம் நான்தான் தின்றுவிட்டேனுக்கும். என்னெருத்திக்குத்தான் எல்லாம் கொண்டுவந்து கொட்டுகிறாப்போலே யிருக்கு.

புருஷன்:—ஏண்டி ஒரு முழம் கையை என் மூஞ்சிக்கு எதிரே நீட்டிப் பேசுகிறாய்? இனிமேலே அப்படிக் கையை நீட்டினால் உன் குழந்தைகள்மேலாணை. ஜாக்கிரதை!

மனைவி:—மகா ஆணை! கையை நீட்டிப் பேசினால் என்ன மோசம் போச்சு?

புருஷன்:—இனி நீ கையை நீட்டவும் வேண்டாம். இனி உனக்கும் எனக்கும் எந்த வார்த்தையும் வேண்டாம். என்னோடு நீ எந்தப் பேச்சும் வைத்துக்கொள்ளாதே. விசுவாசம் கொஞ்சமாவது காணேம். புருஷன் என்கிற மரியாதை இருக்க வேண்டாமா?

(சிறிதுநேரம் கழித்து அவ்வீட்டுக்காரனிடம் அவனது பெண் வந்து நின்றாள்.)

குமார்த்தி:—அம்மா கோபமாய் வெளித் திண்ணையிலே போய் உட்கார்ந்திருக்கு. தான் ஒன்றும் இன்றைக்கு சமைக்காதாம்.

தந்தை:—சரி சமைக்காவிட்டால், நீ சாதம் ஆக்கி ஒரு ரசம் மட்டும் வைத்துவிடு. அது போதும். இனி அவளிடம் எனக்குப் பேச்சுவார்த்தை வேண்டாம், எதொன்றுக்கும் நீயே வந்து சொல்லு. என்ன வீடு இது? எவ்வளவோ பாடுபட்டுச் சமுசாரம் நடக்கவேண்டுமே யென்று மனமொத்து உழைக்கப்போக, அதை உணராமலும், அதற்கு ஒரு விசுவாசம் வைத்து நடக்காமலும், காலைப் பொழுதிலேயே வெட்டிக்கு ஒரு வீண் சண்டையைத் துவக்கி என் மனதை நோகப் பண்ணுகிறதா? முழநீளம் கையை நீட்டிப் பேசி, அப்படிப் பேசினால் என்னவோ பிரமாதம் என்கிறதா? வீட்டுக் குடித்தனம் ஒழுங்கா யிருக்கிறதே! (என்று சொல்லி மிக்க வாதனையுடன் உட்காருகிறார்.)

நமக்குற்ற விபரீதங்களுக்கெல்லாம் நாமே காரணம். நடக்கிறது நடக்கட்டுமென்று நாம் பொறுத்துக்கொண்டு போனதினாலேயே நமக்குப் பல துன்பங்கள் சூழும்படியும், சாமானியர்கள்கூட நம்மை எதிர்க்கும்படியும் ஆயிற்று.

துருவமண்டலக் காக்ஷி.

(Aurora Borealis.)

பூகோளப் பகுதியில் வடகோடியாகிய துருவ மண்டலக் காட்சி அதிக ஆச்சரியமானது. துருவ மண்டலமென்பது பூமியின் உத்தராயண ரேகைக் குட்பட்ட வடபாகமாகும். இந்த இடத்தில் பகலிரவின் மாற்றம் ஓர் அதிசய மானது. நமக்கு 24—மணி நேரம் ஒரு பகல் இரவாக யிருக்கையில் துருவ வட்டத்திற்குட்பட்ட உறுவாணிப் பிரதேசத்தில் உத்தராயணம், தக்ஷிணாய னம் என்ற வேறுபாட்டால் ஆறு மாதம் ஒரு பகலாகவும், ஆறு மாதம் ஒரு இரவாகவும் மாறி ஒரு வருஷம் ஒரேநாளாக அமைந்திருக்கின்றது. உத்தராயண காலத்தில் 'டிராபிக் ஆப் கான்சர்' என்ற அயன ரேகையைச் சூரியன் அடுத்ததுமுதல் வட துருவத்தில் சூரியோதய காலமாகிறது. அது முதல் அங்கு சூரியன் ஆறுமாத காலம் வரையில் அஸ்தமிக்காமல் வட்டமிட்டு இருந்து வருகிறது. பிறகு தட்சணாயன காலம் திரும்பியதும் சூரியாஸ்தமன மடைந்து ஆறு மாத காலம் இரவாக விருக்கின்றது. இதைத்தான் இந்தியர்கள் தேவர்கள் வசிக்கும் நாட்டில் பகல் ஆறு மாத காலம்; இரவு ஆறு மாத காலமாக உள்ளதென்று வர்ணித்திருக்கின்றனர். அங்கு சந்திரனுடைய ஒளி காணப்படுவதில்லை. பூமியைச் சந்திரன் சுற்றி வருவதால் அது வட துருவத்தில் பிரகாசிப்பதற்கில்லை. இரவில் சந்திர ஒளி யில்லாம விருக்கும் அந்த ஆறு மாத காலத்தில் ஒரே காடாந்தகாரமான இருள் மூடி யிருக்கவேண்டியதா யிருக்க, அதற்கு மாறாக அங்கு ஒளி தரும் ஒருவகை மின்னலை யுண்டாக்கியிருப்பது கடவுளின் அற்புதப் பெருமையை விளக்குவதா யிருக்கின்றது. வட துருவ பூமி அதிக குளிர்ச்சியுள்ளதும், பனிக் கட்டியால் மூடப்பட்டதுமாக விருக்கிறது. ஒருவகைக் கரடியும், சில பறவைகளும் ஜீவிக்கின்றன. எஸ்கிமோவர் (Eskimo) என்ற ஒருவகை ஜாதியினர் பனிக்கட்டியால் வீடு கட்டிக்கொண்டு வசிக்கின்றனர்: ஜலத்தில் வசிக்கும் பிராணிகளில் 'சீல்' என்ற ஒருவகைப் பிராணிகள் துருவ மண்டலக் கடலில் வசிக்கின்றன. துருவ மண்டலக் கடல் வெகுவாக உறைந்த பனி மூடியதாகவேயிருக்கும். அப்பனிக்கட்டியைத் துளைத்துக் கொண்டு சீல் முதலிய மிருகங்கள் கடலுக்கு மேல் வெளிவரும். உத்தராயண காலத்தில் மட்டும் சிலகொடி செடிகள் ஆங்காங்கு உற்பத்தியாகும். துருவ மண்டலத்தை யடுத்து இந்த உறை பனி மூடியுள்ள பிரதேசத்தில் வசிக்கும் பிராணிகளும், மனிதரும் நீண்ட ஆறுமாத இரவில் ஒளியில்லாமல் ஜீவிக்க முடியாதாகையால், அதற்கென்று கடவுள் அதிசயமான ஓர் ஒளியை ஆகாயத்தில் அங்கு உண்டாக்கியிருக்கின்றார். அதற்கே (Aurora Borealis) 'அரோரா போரியாலிஸ்' என்று பெயர். இதைத்தான் இந்தியர்கள் 'வடவா முகாக்னி' யென்று வருணித்திருக்கின்றனர். பூமியினுடைய வடகோடியிலுள்ள மேற்பாகமாகிய ஆகாயத்தில் ஓர் அதிசய மான மின்னொளி எப்பொழுதும் உண்டாகிப் பரவிப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது அங்குத் தோன்றும் மின்னல் பலநாள் மறையாமலும், இடி முழக்கத்தைச் சிறிதுகூட உண்டாக்காமலும் அப்படியே யிருக்கின்றது. அதன் காட்சி துருவ மூலைகளில் ஏற்படும் நீண்ட இராக்காலங்களில் ஒளி தரத்தக்க மிகுந்த பிரகாசத்துடனும் மனோரம்மியமாயு மிருக்கின்றது. அம் மின்னொளி உயரத்திற்குத் தக்கபடியாயும், பார்ப்பவர்களுடைய தூரத்திற் குத் தக்கபடியாயும் பற்பல விதமாக நிறபேதத்தில் மாறுதலடைந்து காணப் படும். சில சமயங்களில் தோன்றும் மின்னல் பிரகாசத்துடன் அப்படியே

பல நாளிருக்கும். அவ்வாறின்றிச் சில சமயம் அம்மின்னல் பாம்புபோல் நெளிந்து நெளிந்து மெதுவாய்ச் சென்றுகொண்டிருப்பதாயுங் காணப்படுவதுண்டு. சில பெரிய உருவத்துடன் தோன்றும். மின்னல்கள் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நெளிந்து நெளிந்து தாவிச் செல்லும் விநோதம் மிக்க மனோரம்மியமா யிருக்கின்றது. சிலசமயம் மின்னொளி விநாடிக்கு விநாடி நிறபேதமடைந்தும், கதிமாறியும் ஓடுவதுபோலக் காணப்படுகின்றது. ஒரு சித்திரக்காரன் படமெழுதும்போது நிற பேதத்திற்காகத் தூரியக் கோலாலிழுக்கப்படும் பலவர்ணக் கோடுகளைப்போன்று அம்மின்னொளி கதிமாறியுஞ் செல்லுகின்றது. சிலசமயங்களிற் தோன்றிய மின்னல் தாவிச் செல்லும்போது அப்படியே திடீரென்று துண்டாக முறிந்து போனது போலக் காணப்படும். அவ்வாறு முறிந்துபோன மின்னல் அவ்விடத்திலிருந்து மரக்கிளைகள்போன்று பல்வேறு கிளைகளாய்ப் பிரிந்து நாலா திசையும் பரவிச் செல்வதுமுண்டு. அப்படிப் பரவிச்செல்லும் மின்னல் சில சமயங்களில் புஷ்பமாரிபோல் பொடிப்பொடியாகச் சிதறி நின்று சிலநாள் வரையில் அந்நிலையில் அப்படியே மாறுதலின்றி காணப்படுகின்றது. சில சமயங்களில் தோன்றும் மின்னல் "விசிறிபோலப் பரவி நின்று வீசுவதுபோலவும், தங்க வர்ணப் பட்டால் இடப்பட்ட ஆகாயப் பந்தல் காற்றின் அலைப்பில் வெளிச்சத்தில் எவ்விதம் பிரகாசிக்குமோ அவ்விதமாகவும்" பளபளப்புடனும், மிகப் பிரகாசத்துடனும், நெளிந்து நெளிந்து அசைந்தாடுவதுபோலவும் காணப்படுகின்றது. அதனால் அவ்வொளியிற் பலவகை நிறபேதமான விநோதங்கள் மாறிமாறித் தோன்றுகின்றன. அச்சமயங்களில் காற்று சிறிது ஓங்கி வீசிக் கொண்டிருந்தால் பின்னும் அவ்வொளி பரவி வானவில்லின் நிறபேதத்தை யொத்து கண் கொள்ளாக் காட்சியாய் விளங்குகின்றது. அவ்வாறு காணப்படும் ஒளி சில சமயங்களில் நவமணிகளாலிடப்பட்ட பந்தல்போன்று மாறி நின்றுங் காணப்படுகின்றது. இக்காட்சி விநோதத்தின் அமைப்பு 11 வருஷங்களுக்கு ஒருதரம் மாற்றமடைகின்றது. அதே காலத்தில் சூரிய கோளத்திற் காணப்படும் கறுப்புப் புள்ளிகளும் அதன் நிலையில் மாற்ற மடைகின்றன. இதனால் சூரியனுக்கும் பூமிக்கும் ஏதோ நேரான சம்பந்த மிருக்கிறதென்பது உறுதியாகின்றது. இதுவன்றி, அத்துருவ முனைகளின் நேர்வடக்கில் அதிக தூரத்திற்கு அப்பால் வானவில்போன்ற நிறபேதங்களையுடைய ஜோதி வட்டம் ஒன்று எப்பொழுதுந் தெரிந்துகொண்டேயிருக்கின்றது. அவ் வட்ட ஒளியின் மத்திய பாகம் எப்பொழுதும் ஒரே இருளாகக் காணப்படுகின்றது. வட்ட வடிவிலுள்ள வானவில்போன்ற அவ்வொளி நிறபேதத்தில் எல்லையற்ற காட்சியுடையதா யிருக்கின்றது. அம் மின்னொளி துருவ முனையில் வாழும் பிராணிகளுக்கும் மனிதருக்கும் அவ்விடத்தில் உண்டாகிறநீண்ட இராக்காலத்தில் ஏற்படும் மிகுந்த இருளால் கஷ்டப்படாமலிருப்பதற்கு ஒரு முக்கிய சாதனமா யிருக்கின்றது.

உலகத்திலே படித்துத்தேறிய கல்விமான்களையும், நீதி சாஸ்திர நிபுணர்களையும், ஒழுக்க வழக்கமானவர்களையுங்கூட, தாசிக் கச்சேரிகளில் தாசிகளின் சுகமான ரீங்காரத் தொனியானது சோபமடையச் செய்து தங்கள் தங்கள் கௌரவங் குலைந்து தாசிகளைச் சேர்ந்து இன்புறவைத்துவிடுகிறது. அதற்காகவே தாசிகள் சங்கீதசுர சாஹித்திய வித்தையைப் பழக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்.

நாயின் குணங்களிலே மனிதனின் பங்கு.

உலகில் மனிதன் காலத்திற்குக் காலம் நாகரீகத்தில் விருத்தியடைந்து வந்தானென்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். மனிதனுக்கு நாகரீக பாடங்கள் கற்பிப்பதற்கு இயற்கைப்பொருள்களே, அனுபவத்தில் முக்கிய சாதனமாக இருந்து வருகின்றன. பட்சிகள், மிருகங்கள், தாவரங்கள், நீரில் வாழும் பிராணிகள், இடம், காலம் இன்னும் இவைபோன்ற வகைகளும் மனிதன் அறிவை விசாலப்படுத்தி வந்திருக்கின்றன. அந்த வகையில் அவைகளினிடத்து நல்லவை தீயவை என்பதை யுணர்ந்து தீயவற்றைத் தள்ளி நல்லவற்றைக் கைக்கொண்டு முற்பட முயன்றிருக்கின்றான். அவைகளுள், நாயும், அவற்றின் குணமும், மனிதனுக்கு எவ்வளவு தூரம் அறிவை விளக்கக்கூடியதாயிருக்கிறதென்பதை இங்கு குறிப்பிடுவதற்கே நாம் இந்த வியாசத்தை எடுத்துக்கொண்டோம். நாயில் வேட்டை நாய், போலர் நாய்; நியூபவுண்ட்லாண்டு நாய், மங்கோலியன் நாய் (Mangolean Dog), ஆஸ்திரேலியன் நாய்களென்ற அநேக வகைகளிலிருக்கின்றன அவைகளெல்லாம் குணத்தில் ஒரே தன்மையுடையவைகளேயாம். மிருக இனத்தில் சிலவகைக்குணங்கள் நல்லவையாகவும், சிலவகைக் குணங்கள் கெட்டவையாகவுமிருப்பது இயற்கை. ஆனால் நாயின் குணங்களிலோ அதற்கு ஒரு கவளம் அன்னமிட்டவர்களை உள்ளவரையில் மறவாதிருக்கின்றதென்ற சிறப்பு ஒன்றைத் தவிர மற்றப் பெரும்பாகமான குணங்களெல்லாம் கெட்டவைகளாயிருக்கின்றன. அதாவது தன் இனத்துடன் கூடிவாழும் கூட்டுறவைப் பெறுவதும், இனத்திற்கு இட்டுண்பதும் மனிதருக்கு இன்றியமையாதன. அதில் நாய் நேர் விரோதமான குணமுடையதாயிருக்கிறது. நாய்க்கு ஆகாரத்திலுள்ள பேரவாவின் காரணமாக அது தன் இனத்தைக் கொடுமையாகச் சீறும் குணமுடையதாயும், பாலன்னத்தையும், மலத்தையுஞ் சமமாக நினைக்கும் புத்தியுடையதாயுமிருப்பதோடு, எஜமானன் வீட்டில் திருட வரும் திருடனுடைய சிறு மாமிசத் துண்டிற்கு ஆசை கொண்டு அவனுக்கும் நன்றி செலுத்தும் முறையில் வழிவிடுங் குணமுடையதாயுமிருக்கிறது. இதுவன்றி, ஆண் பெண் சேர்க்கையில் இதற்குள்ள பழக்கம் மிகவும் கேவலமானது. பூனையோ நாயைப்போல வீட்டில் வளரும் மிருகமாயிருந்தும் அது அதன் சேர்க்கையை மற்றப் பிராணிளின் கண்ணிற் படாமற் செய்து கொள்ளுகிறது. நாயோ அதற்கு மாறுபட்ட செய்கை யுடையது. பிராணிகளுக்குரிய முக்கியமான இவ்விரு குணங்களிலும் வீட்டு நாய் மிகவும் கேவலமான இழிகுணமுடையதாயிருப்பதால் இது மிருக இனத்தில் காணப்படாத பல கெட்ட வியாதிகளுக்கு ஆளாகின்றது. மனிதரிலும் இத்தகைய செய்கையுடையோரே கொடிய வியாதிக்கு ஆளாகின்றனர். நாய்க்குள்ள இவ்விழி குணத்தால் இது மற்ற எல்லாப்பிராணிகளையும்விட கடையானதென்று முன்னோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. உறவோடுண்ணல் வேண்டுமென்ற விதி மனிதனுக்கு முக்கியமானதென்பதைச் சுட்டும் பொருட்டே உண்ணும் காலத்தில் காகத்திற்கு முலிதல் வைக்க வேண்டுமென்றும், எச்சில் இலையைத் திதி, விரதம்போன்ற விசேஷமான புண்ணிய தினங்களிலே நாய்க்கு இடக்கூடாதென்றும் அது பாவமெனவும் விதித்திருக்கின்றனர். எச்சில் இலைக்குக்கூட நாய் தன் இனத்துடன் சண்டை யிடுகின்றது. இக்குணக்கேட்டை மனிதரும் உடையவர்களாயிருப்பது அவர்கள் நாயினுங் கடையானவர்களா யிருப்பதையே விளக்குகின்றது இத்தகைய குணமுடையவர்கள் மனிதரில் யாவர் என்பதை இங்கு

குறிப்பிடுவோம். அதாவது, ஆகார விஷயத்தில் பேராவாவுள்ளவர்களாயும் சுகாதார விதியை அனுசரிக்காமல் எப்பொழுதும் எதையாவது தின்று, கொண்டிருப்பவர்களாயும். இட்டுண்ணாமலும். இனத்தைச் சேர்க்காமலு மிருப்பவர்கள் மனிதரில் கடைகெட்ட தெரு நாய்க்கு உவமையாயிருக்கின்றனர். பல மனைவிகளை நேசிப்பவனும் பிறர் முன்னிலையில் லச்சை யின்றிச் சல்லாபிப்பவனும், அவன் அரசனாயிருப்பினும் சமூகத்தில் லச்சை கெட்ட நாயாயிருக்கின்றான். (அரசனும் அவன் போன்ற செல்வ முடையவர்களும் காரணமின்றிக் காமக் கிழத்தியராகிய பல பெண்களை யடைந்திருப்பதும், அவர்கள் ஜலக்கிரீடை முதலிய சல்லாப ஆடல்கள் புரிவதும் முறையென வெனக் கொள்ளப்பட்டிருப்பினும், அவர்களும், இவ் விழிகுல நாயின் இனத்தவரேயாம்) சேவை செய்வதில் எவுங் காரியத்தின் ஒழுங்கை யுணராமல் பிறருக்கு இம்சையை யுண்டு பண்ணுபவன் சமூகத்தில் ஒரு கொடிய வேட்டை நாயாயிருக்கின்றான். தாகு செய்வதிலும், தொழில் செய்வதிலும், அளவுக்கு அதிகமான லாபத்தை விரும்புகிறவனும் உத்தியோக முறையில் லஞ்சம் வாங்குபவனும் சமூகத்தில் (திருடனின் மாமிசத்துண்டிற்கு ஆசைப்படும்) நன்றி கெட்ட நாயாயிருக்கின்றான் என்பதாம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்குள் 'ஆத்மா' என்பது ஒன்றிருக்கிறது; அதுதான் இம்மானிட ஜென்மத்தை நல்வழிப்படுத்த நிற்கும் பரமாத்மாவின் சக்தி. கடவுள் எப்பொழுதும் ஸ்வேச்சையாயும் ஆத்ம ஸித்தியும் பெற்றிருப்பதுபோல, ஒவ்வொருவனும் என்றைக்கும் ஸ்வேச்சையாயும் ஆத்ம ஸித்தி பெற்றும் இருக்கிறான். ஸ்வேச்சை என்பது மனிதனுக்குப் பிறப்போடு வந்த சுவாதந்திரியமாகும். அது கடவுளாலும் மதிக்கத்தக்கதாய் உடலோடு பிறந்த சுவாதந்திரியமாகும்; அது மனிதனுடைய சிருஷ்டியிலேயே கலந்து பிறந்திருக்கிறது.

உலகின் சண்டைக்குக் காரணர் யார்?

யுத்த தளவாடம் செய்யும் கம்பெனி முதலாளிகளாம்.

சென்ற மகா யுத்தம் நடந்து முடிந்து 10—வருடங்களுக்குள் மற்றொரு மகா யுத்தத்திற்கு அடிகோலப்பட்டு வருகிறது. நடந்த மகாயுத்தம் ஏற்பட்டதற்குக் காரணம் கூறிய மேதாவிகள், "இனி உலகில் யுத்தமே நடவாமல் செய்வதற்காக இந்த யுத்தம் நடக்கிறதென்றும், உலகில் ஜன ஆக்ஷி முறையைக் காப்பாற்றுவதற்காக இந்த மகாயுத்தம் நடக்கிறதென்றும் கூறினர். இது மாத்திரமன்றி "உலகில் சாம்பிராச்சிய முறையை ஒழிக்கவும், சுயநிர்ணய சுதந்தரத்தை நிலைநாட்டவும் இந்த யுத்தம் நடக்கிறதென்று வானமளாவப் பேசினர். இந்த பேச்செல்லாம் பத்து வருஷங்களுக்குள் வெறும் கனவாகி, சாம்பிராச்சிய வெறிகொண்ட தேசங்கள் யுத்த சன்னுகம்கொள்ளத் தொடங்கி விட்டன. இதைக்குறித்து அமெரிக்காவின் செனெட்சபை "செனேட்டர், வில்லியம் ஈவோரா" என்பவர் சமீபத்தில் பேசியபோது,

> "யுத்த தளவாடங்களைச் செய்பவர்கள் அரசாங்கங்களில் அதிக செல்வாக்குடையவர்களாக விருக்கின்றனர். அந்த செல்வாக்கு ஒழியும்வரையில் யுத்த தளவாடங்களைக் குறைக்கும் யோசனை நிறைவேறப் போவதில்லை, அந்த அளவில் ஆயுதப்பரிகரணமென்பதும் வீண் பேச்சேயாம். ஆயுதச் சாலை முதலாளிகளின் செல்வாக்கே ஒரு தேசத்தை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்யச் சக்தியுடையதாக விருக்கின்றது"

என்று கூறியிருக்கின்றார். இதுவன்றி "ஜே, சி. ஹானிங்கன் என்னும் அமெரிக்கர் "இரும்பு, இரத்தம், லாபம்" என்ற புத்தகமும், எங்கில் பிரட்ட என்ற அமெரிக்கர், சாலின் வர்த்தர்கள் என்ற புத்தகமும் எழுதி யிருக்கின்றனர். இவ்விரண்டு நூல்களும் யுத்த தளவாடம் செய்யும் கம்பெனிகளைக் குறித்தும், அக்கம்பெனி முதலாளிகளைக் குறித்துமே எழுதப்பட்டிருக்கின்றன. இதற்குத் தகுதியாய், 1927-ஆம் வருடம் கூடின ஆயுதப்பரிகரண மகாநாட்டை அமெரிக்காவிலுள்ள ஒரு யுத்ததளவாட கம்பெனிக்காரர்தான் ஒன்றுக்கும் உதவாமல் கெடுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது. இம் முதலாளி வருக்கத்தில் பிரான்சிலுள்ள "யூஜின் ஸ்னேடர்" என்பவர், பிரான்சிலுள்ள பெரிய யுத்ததளவாடக் கம்பெனிக்குச் சொந்தக்காரராவர். அவருக்குச் சொந்தமான "ஸ்னேடர்—இஸாட்" என்னும் கம்பெனி உலக முழுவதிலுமிருக்கின்றது அக்கம்பெனியின் கிளைகளாக 400 ஆயுத உற்பத்திச்சாலைகள் ஆங்காங்கு இருக்கின்றனவாம். அதோடு பல பத்திரிகைகளும், அவருடைய ஆதரவில் நடக்கின்றதாம். அப்பத்திரிகைகள், உலகில் யுத்தம் வரப்போகிறது என்றும், அந்த அரசாங்கம் அவ்வளவு யுத்ததளவாடங்களை சேர்த்துவிட்டது, என்றும் இந்த அரசாங்கம் இவ்வளவு யுத்ததளவாடங்களை வைத்திருக்கிறது என்றும், பறைசாத்துவதே அப்பத்திரிகைகள் தொழிலாகக் கொண்டு நடந்து வருகிறதாம். இதுபோல இங்கிலாந்திலுள்ள "விக்கர்ஸ் ஆம்ஸ்டாங்" என்னும் கம்பெனியும் மிகப் பெரிய ஆயுத சாலையாம். இந்த விக்ஸர் கம்பெனிக்கு பொக்கிஷ மந்திரி நெவில்ஸ் சேம்பர்லேன், யுத்த சமாதான பிரபுவான "ஆஸ்டின் சேம்பர் லேன், அன்னிய நாட்டு மந்திரி ஸர் ஜான் சைமன், மகா தத்துவ ஞானியாகிய "ஸர்பீ லால்போர், லார்டு கிரே, லார்டு கர்சன். லார்டு சின்னியார்டு முதலியோர் இந்த கம்பெனி

யின் சொந்தக்காரர்களாம், இந்த விக்ஸர் கம்பெனிக்கும், ரொமேனியா, ஸ்கோடி. செக்கோஸ்லாவியா, இத்தாலி. ஸ்பெயின், ஆலந்து, அயர்லாந்து, நியூஜிலாந்து ஜப்பான் முதலிய நாடுகளில் இளை ஆயுதச்சாலைகள் இருக்கின்றனவாம். இந்த ஆயுத உற்பத்தி கம்பெனிகளிலேதான் 100 க்கு 12, 20, 30 லாபம் கிடைக்கிறதாம் இந்த லாபத்தைக் கருதியே செல்வாக்குடைய இவர்கள் ஆயுத பரிகரண மகாநாடுகளில் ஜாடையா யிருந்துவிடுகின்றனராம். இந்த ஆயுத உற்பத்திக்காரர்கள் சண்டை காலங்களில் கொள்ளை லாபம் அடைவதனாலேயே கடந்த மகா யுத்தத்தில் வல்லரசுகள் ஒரு சிப்பாயைக் கொல்லுவதற்கு 25000 டாலர் வீதம் செலவு செய்திருக்கின்றனராம். (அதாவது யுத்தத்தில் இறந்த சிப்பாய்களின் எண்ணிக்கைக்கு யுத்தத்திற்கு செலவிட்ட தொகையை பங்கிட்டால் ஒரு சிப்பாயைக் கொல்லுவதற்கு இருபத்திஐயாயிரம் டாலர் வீதம் செலவாகியுளதாம். இந்தக் கேவலமான நிலைமையிலுள்ள நாகரீகம்தான் உலகத்தை ஆளுகின்றது.

(மாடரன் ரிவ்யூ.)

தூக்கத்தை ஒரு மூதேவி என்று சொல்லு.

தூக்கம் உன் ஆயுளின் பெரும் பகுதியை விழுங்கி விடுகிறது. இரவில் விழித்திருந்து செய்யக்கூடிய எவ்வளவோ வேலைகளையும் படிப்பையும் அந்த மூதேவித் தூக்கம் கெடுத்துவிடுகிறது. இரவில் கண் விழித்துச் செய்கிற வேலையின் அளவு பகற்பொழுதில் செய்ய முடியாது. அதிக நேரம் விழித்திருந்து படித்தால், பிற்காலத்தில் நல்ல நிலைமையில் வாழலாம். பிந்திய நல்ல வாழ்வையும், ஆகவேண்டிய எத்தனையோ வேலைகளையும் தூக்கம் கெடுத்துப் பாழாக்குகிறது. ஏதோ நித்திரைக்குச் செல்வது போல் சென்று சொற்ப நேரம் தூங்கி, சீக்கிரம் விழித்துக் கொண்டு, மூதேவித் தூக்கமே போ போ என்று பழித்துத் துரத்திவிட்டு, விழித்து வேலை செய்யப் பழகுவது எவ்வளவோ நன்மை. அதிகாலை விழிப்பு அவ்வளவும் பொன்.

அதிகக் கல்வி அதிகத் திறமையைக் காட்டுவதாகிவிடாது. சொற்ப கல்வியுள்ளவர்கள் அதிகத் திறமைசாலிகளாயிருக்க, அதிகக் கல்வி கற்றோர் வெறும் புத்தகப் பூச்சிகளாகவும் முடிந்திருக்கிறார்கள். சாதாரணக் கல்வியுள்ள ஒரு கிராமவாசி சென்னைக்குச் சென்று ஓரிடத்தில் சம்பளத்திற்கு அமர்ந்து, சொந்தமாகவும் ஒரு தொழில் நடத்திச் சீமான் ஆனதையும், பி. ஏ. படித்த ஒருவர் சென்னை சென்று பல இடங்களில் வேலைக்கு அலைந்து எதுங் கிடைக்காமல் திரும்பி, பிறகு எம். ஏ. வுக்கு வாசித்தால் வேலை கிடைக்குமென்று வாசிக்கப்போன சங்கதியையும் பார்த்தே இருக்கிறோம்.

பல திரட்டு.

தங்க ஏற்றுமதி.

ஒரு சவரன் 22—ரூபாய்க்கு மேல் நமது நாட்டில் விற்றமுதலாகிக் கொண்டிருக்கையில் இந்தியாவிலிருந்து, இந்த அக்டோபர் மாதம் முடிய இருநூற்றி இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் விலையுள்ள தங்கம் இங்கிலாந்திற்கும், அமெரிக்காவுக்குமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளி ஏற்றுமதி.

சீனுவிலிருந்து நாலுகோடி ரூபாய் மதிப்புள்ள வெள்ளிஇங்கிலாந்து போய்ச் சேர்ந்தது.

பஞ்சு உற்பத்தி.

உலகம் முழுவதிலுமாக சுமார் 276 லக்ஷம் பேல் பருத்தி விளைகிறது. (ஒரு பேல் 500 ராத்தல் எடையுள்ளது) இப்பஞ்சு விளைவில் அமெரிக்கா முதலாவதாகவும், இந்தியா இரண்டாவதானதாகவு மிருக்கின்றது. பருத்தி விளைவே இல்லாத இங்கிலாந்தும், ஜப்பானும் இந்நாடுகளின் பஞ்சை வாங்கித் துணியாக நெய்து அவர்களிடத்திலேயே விற்று லாப மடைகின்றன.

ஞாபகச் சின்னம்.

இந்தியாவின் சுதேச அரசர்கள் ஒன்று சேர்ந்து, வைசியராய் லார்டு வில்லிங்டனைக் கௌரவிப்பதற்கு அவருடைய உருவச்சிலை ஒன்றைப் புதிய டெல்லியில் நாட்டப் போகின்றனராம். அதற்கு 107000—ரூபாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகில் மிகப் பெரிய பாலம்.

டென்மார்க்கு தேசத்தில் சீலண்ட் (Zealand) பூனன் (Funen) என்ற இரண்டு தீவுகள் ஒன்றுக்கொன்று 11—மைல் தூரத்திலிருக்கின்றன. இதற்கு மத்தியிலுள்ள கடலின்மீது 11—மைல் நீளத்தில் 164—தூண்கள் நிறுத்திப் பாலங்கட்டத் திட்டம் போட்டிருக்கின்றனர். இதற்கு (62,50,000-பவுன்) அதாவது 73—கோடி ரூபாய் செலவு செய்ய திட்டம் போட்டிருக்கின்றனர். இந்தப்பாலம் கட்டப்படுமோயின் இதுவே உலகிலுள்ள பாலங்களில் மிக நீண்ட பாலமாகும்.

வேலையில்லா திண்டாட்டம்.

நமது சென்னையில் படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்படும் பட்டதாரிகள் 486—பேர்களும், பட்டம் பெறுமல் படித்துவிட்டவர்களாக 2000 பட்டதாரிகளும் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்களாம். இதுதான் புது நாகரீகக் கல்வியின் பயன்.

இம்மாதிரி வேலையில்லாமல் கஷ்டப்படும் பட்டதாரிகளுக்கு உதவி செய்ய மத்திய மாகாணம் முன்வந்திருக்கிறது. படித்து வேலையில்லாம

லிருக்கும் மாணவர்களை விவசாயத் தொழிலில் பழக்கி ஜீவனத்திற்கு வழி காட்டப்படுமோம். மத்திய மாகாணத்தைச்சேர்ந்த பைசாபாத் என்னும் ஊரை யடுத்துள்ள நிலங்களில் நல்ல நிலமாக 200—எக்கர் நிலத்தை மாணவர்களுக் கென ஒதுக்கிக் கொடுத்து இரண்டு வருடப் பயிற்சி யளிக்கப்படுமோம். சோதனை முறையில் உயர்ந்த விவசாயப் பயிற்சியளிப்பர். அவர்கள் குடியிருப்புக்கு இரண்டு அறைகளுள்ள ஒரு சிறு வீடும், மாடு, ஆடு கட்டுவதற்கான வசதியும் செய்துகொடுக்கப்படுமோம். படித்துப் பட்டம் பெற்றபெருமையில் விவசாயத் தொழிலை இழிவென நினைக்கும் மனப்போக்குடைய மாணவர்கள் இதில் எப்படித் தங்கள் கௌரவத்தைவிட்டு ஈடுபடப் போகிறார்கள் என்பது பின்னால்தான் தெரியும்.

வங்காள புரட்சி இயக்கத்தை அடக்க ஒரு வருஷத்தில் 1700000 ரூபாய் செலவு செய்யப்பட்டதாம்.

1. மோட்டார்:—இந்தியாவில் 1933-ல் 13-லக்ஷம் மோட்டார்கார்கள் உபயோகத்திலிருந்ததாம்.

2. கோவில்கள்:—சென்னை மாகாணத்தில், வரும்படியுள்ளதான 18000 ஆயிரம் கோயில்களிருக்கின்றன. இவைகளுக்கு வருடத்தில் 3 கோடி ரூபாம் வரும்படி யிருக்கின்றன.

3. சமத்துவம்:—ஜப்பானில் வரப்போகிற 1935 ஜனவரி தொடங்கி ரயில்வேக்களில் 1-வது வகுப்பு வண்டியை எடுத்துவிடப் போகிறார்களாம். ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உத்தேசித்தும், ஜனங்கள் சமத்துவத்தை யுத்தேசித்தும் இந்த 1-வது வண்டியை எடுத்துவிடப் போகிறார்களாம்.

4. மிகப் பெரிய கப்பல்:—இங்கிலாந்தில் "லூயிஸ் மேரி 534, என்ற ஒரு கப்பல் கட்டி சமீபத்தில் தண்ணீரில் இறக்கப்பட்டது. அக் கப்பலுக்கு இதுவரையில் கோடி பவுன் செல்வழிக்கப்பட் டிருக்கிறது. இன்னும் அதன் முழு வேலையும் பூர்த்தி செய்ய 50 லக்ஷம் பவுன் செலவாகுமாம். இதன் வேலை 1936-ஆம் வருட மத்தியில் பூர்த்தியாகுமாம். இது 1918 அடி நீளமுள்ளது. 112 அடி உயரமுள்ளது. 75000 டன் நிறையுள்ளது. இதில் 27 நீராவித் தொட்டிகள் (பாய்லர்கள்—Boiler) இருக்கின்றன. இதுவே இப்போது உலகத்திலுள்ள உலகிலுள்ள கப்பல்களிலெல்லாம் மிகப் பெரிய கப்பலாகும். மகா யுத்தம் நடந்த காலத்தில் இது போன்ற மிகப் பெரிய கப்பலொன்று இங்கிலாந்திலிருந்தது. அதற்கு "லூசிடானியா" என்று பெயர். அது 45000 டன் எடையுள்ளது. அது அச்சண்டை காலத்தில் ஜர்மனியாரால் மூழ்கடிக்கப்பட்டு போயிற்று.

ஒரு முடிவாகாமல் கலந்து பேசிவரும் நிலையிலுள்ள அபிப்பிராயங்களை இறுதியான முடிவுகளைப்போல அறிவிப்பதாயின், பொதுஜன வாழ்க்கையை நடத்துவதே சாத்தியமற்றதாகிவிடும். ஒரு சங்கதியைப் பேசிக்கொண்டிருக்கையிலேயே அந்த சங்கதி ஒரு முடிவுக்கு வந்து விட்டதுபோலக் கற்பித்து அதை இன்னொரிடத்தில் சொல்லி முடிபோடுவது மன்னிக்க முடியாத தவறுதலாகும்.

சிப்பாய்களை எதிர்த்த தேனீக்கள்.

முன் இத்தேசத்தில் யுத்தம் நடந்தபோது ஒரு சமயத்தில் ஆங்கிலேயருடைய சேனைகள் மேற்கே மைசூருக்கடுத்த மலை நாட்டில் ஒரு காட்டின் வழியே இரண்டு மூன்று நாள் செல்லும்படி நேரிட்டது. அவ்வழியில் ஒரு நாள் அந்தப் பட்டாளத்து வீரர்கள் தேனீக்களால் பட்ட பாட்டை அவர்களுள் ஒரு சுபேதார் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

ஃ

"நாங்கள் சென்ற காட்டு வழியிலே மத்தியில் ஒரு நாள் இறங்க வேண்டியதாக நேரிட்டது. அவ்விடத்திலே தேன் கூடுகள் இருக்கின்றனவென்பது எங்கள் ஒருவருக்கும் தெரியாது. நாங்கள் பாசறை இறங்கின சிறிது பொழுதுக்கெல்லாம் சில தேனீக்கள் நாங்கள் நாட்டிய ஆயுதங்களண்டை வந்து பார்த்துத் திரும்பிப்போயின. அந்த ஈக்கள் மிகப் பெரியவைகளாயிருந்தன. அவைகள் திரும்பிப்போன சிறிது நேரத்துக்கெல்லாம் அதே மாதிரியாய் நூற்றுக் கணக்கான ஈக்கள் வந்து பார்த்துவிட்டுப் போயின. அதன் பின்பு சற்றுநேரம் கழித்து ஆயிரக் கணக்காய்க் கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்து எங்கள் சிப்பாய்களைக் கடிக்க ஆரம்பித்தன. அது கொஞ்சநஞ்சமன்று. ஒவ்வொரு மனிதனையும் அநேகம் ஆயிரம் ஈக்கள் சுற்றிக்கொண்டன. அத்தனை ஈக்கள் சூழ்ந்துகொண்டு கொட்டினால் அந்த வருத்தத்தை யார்தான் பொறுப்பார்கள், அவர்கள் சிறிதும் அவ்வேதனை பொறுக்கமாட்டாமல் தங்கள் தலைப்பாகைகளாலும் துணிகளாலும் உடம்பின் மேல் அடித்துக் கொண்டு பித்தம் பிடித்தவர்கள் போல் ஒன்றும் தெரியாமல் நாற்புறமும் ஓடத் தலைப்பட்டார்கள். ஓடாமல் திரும்பி வரும்படி நான் எவ்வளவு வேண்டிக்கொண்டும் ஒருவரும் என் பேச்சைக் கேட்கவில்லை. அவர்களுள் ஒருவன் அவ்வேதனை பொறுக்கமாட்டாமல் அக்காட்டிலிருந்த ஒரு குளத்தில் இறங்கி விட்டான். அக்குளம் அதிக ஆழமானது. அந்தக் குளத்திலிறங்கியும் தேனீக்கள் அவனை விடவில்லை. அது தெரிந்து அவன் தண்ணீருக்குள் நன்றாய் முழ்கிவிட்டான். எந்நேரம் தண்ணீருக்குள் மூச்சுப் பிடித்துக் கொண்டிருப்பான்? ஈக்கள் தண்ணீரின் மேலேயே காத்துக்கொண்டிருந்து. அவன் தலையை மேலே தூக்கும்போதெல்லாம் மிகக் கோபமாய்க் கடித்துக்கொண்டிருந்தன. அவன் பல தடவை மூழ்கி மூழ்கிக் கிளம்பிப் பார்த்தான். எந்நேரம்

மைசூரின்மீது ஆங்கிலேயர்கள் கடைசி முறையில் எதிர்த்த யுத்தத்தில் மைசூர் மன்னராகிய திப்பு சுல்தான் தங்கப் பட்டாக் கத்தியுடன் தனியே ஒரு பக்கம் வந்து கொண்டிருக்கையில், ஆங்கிலேய சேனை அவ்வழியே செல்ல, அதில் ஒரு ஆங்கில ஸோல்ஜர் தனியே நின்ற திப்பு சுல்தானின் பட்டாக் கத்தியைப் பிடுங்க வந்து எதிர்த்துக்கொன்று அதைக் கைப்பற்றிக் கொண்டு சென்று விட்டான். வெகு நேரத்துக்குப் பிறகே அநாதைபோல் இறந்து கீழே கிடப்பவர் திப்பு சுல்தான் என்று தெரிய வந்ததாம்.

மூழ்கி யிருந்தாலும் தேனீக்கள் அப்புறம் போகவில்லை. எப்போது தலையைத் தூக்கப் போகிறானென்று அங்கேயே காத்துக்கொண்டிருந்தன. அதனால், அவன் தரையைவிடத் தண்ணீரில் வருத்தம் அதிகமே யன்றிக் குறைவில்லை யெனத் தெரிந்து, குளத்தினின்றும் எழுந்து வெளியே ஓட ஆரம்பித்தான். அப்போதும் தேனீக்கள் அவனை விடாமல் பின் தொடர்ந்து போய்க் கடித்துக்கொண்டிருந்தன. இவ்வண்ணம் அவ்விடத்தைச் சுற்றி அரை மைலுக்கு அரை மைல் தூரம் அவை தொந்தரை செய்தன! சிப்பாய்களெல்லாம் நாலா மூலையிலும் ஓடி மதிமயக்க முற்றவர்களும் மூர்ச்சை யடைந்தவர்களு மானார்கள். பத்துப் பன்னிரண்டு பேர் மாத்திரம் அதிவேகமாய் அரை மைல் தூரத்துக்கப்பால் கூடாரம் அமைந்திருந்த இடம் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் தங்கள் சுகத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டார்களேயன்றி மற்றவர்களுக்காகச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. கடைசியில் இரண்டொருவர் துணிந்து சக்கி முக்கி யடித்து நெருப்பு உண்டாக்கிக் காட்டிலுள்ள உலர்ந்த கட்டைகளில் கொளுத்தி விட்டார்கள். அந்த நெருப்பைக் கண்டபின்பு தான் தேனீக்கள் பயந்து மனிதர்களைத் துரத்துவதை விட்டுத் திரும்பி ஓடிப்போயின.

ஃ

பின்பு நான் ஆயுதங்கள் நாட்டிய இடத்தில் இப்படித் தேனீக்களின் தொந்தரை அதிகமாயிருப்பதால் சிப்பாய்களெல்லாரும் அவ்விடத்திற்கு அரை மைல் தூரம் ஓடிப்போய் விட்டார்கள் என்பதாய் எங்கள் தலைவனுக்குச் செய்தி யனுப்பினேன். அதற்கு அவர் அந்த இடத்தைவிட்டு வேறெங்கே உனக்கு உசிதமாய்த் தோன்றுகிறதோ அவ்விடத்தில் ஆயுதங்களை நாட்டிவை என்றதாய்ப் பதில் சொல்லியனுப்பினார். இதற்குள் ஓடிப்போன சிப்பாய்களும் காட்டிலிருந்து ஒவ்வொருவராய்த் திரும்பி வந்தார்கள். மாலை ஐந்தரை மணிக்கு எங்கள் சேனைத் தலைவரும் ஆயுதம் நாட்டியிருந்த இடத்தில் எங்களைக் காணவந்தார். சிப்பாய்களுடைய கைகால் முகம் முதலிய எல்லா உறுப்புகளும் ஈக்கடியால் பொதியாம வீங்கிப்போயிருக்கக் கண்டு மிகவும் பிரமித்து, மறுநாள் காலையிலே அவ்விடம் விட்டுப் புறப்படும்படி அன்று இராத்திரி மூன்று மணிக்குள் ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கூடாரத்தண்டை கொண்டு வந்து சேர்க்கும்படி கட்டளை யிட்டுப்போய் விட்டார்.

ஃ

அவ்வண்ணமே இராத்திரி மூன்றுமணிக்கு ஆயுதங்களை எடுத்துக் காண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டோம். கூடாரத்தண்டையிருந்த உத்தியோகஸ்தர்களெல்லாம் வீங்கிப்போயிருந்த சிப்பாய்களுடைய முகம் முதலான அவயவங்களைப் பார்த்துத் திகைத்துப் போனார்கள்.

குமாரர்களுக்கு எவ்வளவு செலவிட்டாலும் அது பிறகு தன் குடும்பத்திற்கு உதவுவதா யிருக்கிறது. பெண்ணுக்குச் செலவழிப்பது வேறொருவரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து, தனக்கு உதவாததாகிறது. செலவழிக்கும் பொருள்மட்டுமல்ல, தனது பெண்ணே தனது அவசர சமயங்கட்கு உதவாமல், அவளை யனுப்பக் கணவன் வீட்டார் மறுத்துவிடுகிற கொரே சங்கதிகளும் எத்தனை எத்தனையோ!

அங்கிருந்து இராத்திரி புறப்பட்டுப் போனவர்கள் தாம் ஈக்குத் தப்பினவர்கள்; பகலில் சென்றவர்கள் ஈக் கடிக்குத் தப்பவில்லை. ஒரு பெண் பிள்ளை குதிரைமீது சாமான்களை யெல்லாம் போட்டுத் தானும் அதன் மேல் ஏறிக்கொண்டு சென்றாள். அவளையும் குதிரையையும் ஈக்கள் தூரத்திப் படுத்தினபாடு இவ்வள வவ்வளவல்ல, அந்தத் தொந்தரை பொறுக்க மாட்டாமல் குதிரை வெறி கொண்டு முரட்டுத்தனமாய் நடுக் காட்டில் ஓடி அப்பெண்ணைக் கீழே தள்ளி விட்டது'' என்று இவ்வாறு அந்த சுபேதார் சொல்லியிருக்கிறார் சால்களால் நடப்பவர்கள் பறப்பவை களுக்குத் தப்பி ஓட முடியுமோ!

அகல இருந்தால் பகையும் உறவாம்.

“அகல இருந்தால் நிகள உறவு, கிட்ட வந்தால் முட்டப் பகை” என்பது ,வெகு சரி. எவ்வளவு மனஸ்தாபம், பகை கொண்டவர்களானாலும் அவர்கள் தூரப்போய்விட்டால், பிறகு நாளடைவில் அன்பும் உறவுமாகிவிடுகிறார்கள். எவ்வளவு உறவாயிருந்தாலும் ஒரு வீட்டுக்குள் இருக்க வந்து நெருங்கிப் பழகத் தொடங்கினால், பிறகு எந்தக் காரணத்தின் மூலமாகவேர கனத்த பகையும் மனஸ்தாபங்களும் உண்டாகிவிடுகிறது. ஒரு விசேஷத்தின்போது ஒருவரை அழைத்து விருந்திட்டால், அடுத்த விசேஷத்துக்கும் அவரை யழைக்கும்படியாகி நெருங்கிய உறவு ஏற்பட்டுக்கொள்ளுகிறது. பிறகு இன்னொரு விசேஷத்தின்போது அவரை அழைக்காவிடில், “என்னை அழைத்தார்களா?—அவர்கள் வீட்டிற்கு நான் ஏன் போக?” என்ற பேச்சுகள் தொடங்கி மனஸ்தாப வருத்தங்கள் முளைத்துக் கொள்கின்றன. இவ்விதம் நெருங்கிப் பிறகு விரோதப் படுவதைவிட விருந்துக்கு அழைப்பதற்குப் பதிலாக, அன்றைய விசேஷத்துக்குச் செய்த தோசை, வடை பலகாரங்களை ஒரு தட்டில் கொஞ்சம் வைத்துக்கொண்டுபோய்க் கொடுத்துவிட்டால், அதைப் பிறரும் பிரியமாய் வாங்கிக் கொள்வார்கள். பிறகு இன்னொரு விசேஷத்துக்கு இவ்விதம் தாராமற் போனாலும் “ஏதோ அவர்கள் கொடுக்கவில்லை” என்பதோடு அந்த சங்கதி தீர்ந்துபோகும். இப்படித் தூர விலகி சற்றே ஒட்டியபடி இருந்தால் எந்தப் பகை வருத்தமுமில்லை. உறவும் பிரியாமலிருக்கும். நல்லபேரும் வரும்.

உலகத்தில் ஜனிக்கும் ஒவ்வொரு மனிதனும் உலகத்தில் பரவியுள்ள ஞானப் பெருக்கைக் கிரகிக்க வேண்டியது அவசியமாகும்.

17-ஸம்ஸ்கிருத மகா கவிகள்

—அவர்களின் ஜீவிய வரலாறு—

11. தனஞ்செயர்.

தசரூபகம் என்கிற கிரந்தத்தின் கடைசி சுலோகத்தால் தனஞ்செயர் என்ற மகா கவி, விஷ்ணு என்ற ஒரு பிராமணருடைய குமாரரெனவும், முஞ்சன் என்ற ஒரு அரசனுடைய காலத்தில் வடதேசத்தில் இருந்தாரெனவும் தெரிய வருகிறது. இந்த இரண்டொரு விஷயத்தைத் தவிர, வேறு யாதொரு நிச்சயமான காலமும் நமக்குப் புலப்படவில்லை. நாம் இப்பொழுது முஞ்சன் என்ற சரித்திர புருஷனது காலத்தை நிச்சயிப்போமேயானால், அதைக்கொண்டு சற்றேறக் குறையத் தனஞ்செயருடைய காலத்தைக் கண்டறிந்ததாகச் சொல்லலாம். இதுவரையில் நமது பரீக்ஷைக்குள் வந்திருக்கின்ற அநேக சிலா சாஸனம் தாம்பிர சாஸனம் முதலிய ஆதாரங்களால், முஞ்சன் என்ற பெயர் பொருந்தி இராஜ குலத்திலுதித்தவர் ஒருவரே தான் இருந்ததாகக் காணப்படுகின்றது. இவர் தாராபுரியில் அரசாட்சி செய்த போஜமகா ராஜாவின் சிற்றப்பன். இவர் சாலிவாகன சகம் 974-ம் வருஷம் இருந்தார் என்பதற்கு ஆதார மிருக்கின்றது. இதைக்கொண்டு கி. பி. 1052-வது வருஷம் அதாவது சற்றேறக்குறைய 880-வருஷங்களுக்கு முந்தி தனஞ்செயர் நமது தேசத்தைக் கிரந்தங்களால் அலங்கரித்ததாகச் சொல்லலாம்.

ஃ

அன்றியும், இவர் இருந்த காலம் இதுதான் என்று நிச்சயிக்க இன்னமொரு ஆதார மிருக்கின்றது. தனஞ்செயர் செய்த தசரூபகம் என்ற கிரந்தத்திற்கு தனிகர் என்ற கவி அதே காலத்தில் பதவுரை செய்திருக்கிறார். தனிகரும், விஷ்ணு என்கிற பிராமணருடைய குமாரர். சகம் 974-ம் வருஷம் பிறந்த ஒரு தாம்பிர சாஸனத்தால் தனிகரென்னும் பண்டிதரின் குமாரனான வசந்தனுக்குச் சில நிலங்கள் கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது. இவைகளினால் நன்கு விளங்குகின்றவை யாவை என்றால்; தனிகர், தனஞ்செயர் இருவர்களும் சகோதரர்களென்றும், ஆதி ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றறிந்தவர்களென்றும், இவர்களில் ஒருவர் நாடக லட்சணமாகிய தசரூபகத்தை எழுத, மற்றொருவர் அதற்கு வியாக்கியானம் எழுதினாரென்றும், இவ்விளையவருக்கு அப்பொழுது தானம் வாங்கத் தகுந்த யோக்கியதையுள்ள ஒரு குமாரனிருந்தானென்றும், தெரிய வருகின்றது.

ஃ

சிலருக்கு எவ்வளவு புஸ்தகங்கள் இலவசமாய் வாரிக்கொடுத்து அவர்களின் திருப்திக்கு வசதி யளித்தாலும், அவர்களின் பேராசை என்ற பசி அடங்கக்காணோம். இன்னும் கொண்டு போகவே பார்க்கிறார்கள்.

சிலர், தனஞ்செயர், தனிகர் என்று சொல்லப் படுகின்ற இவ்விரு வர்களுக்கும் தகப்பனார் விஷ்ணு என்பவரே என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், இவ்விரண்டு பெயர்களினாலும், குறிக்கப்படுகின்றவர் தனஞ்செயர் ஒருவரே என்றும், அவர் தாமே தம் கிரந்தத்திற்கு உரை எழுதிக்கொண்டார் என்றும் சொல்வார்கள். அவர்கள் பெயர்கள் வெவ்வேறாகக் குறிக்கப்பட்டு ஒருவர் புஸ்தகம் எழுதினதாகவும், மற்றொருவர் அதற்கு உரை எழுதினதாகவும், அநேக ஆதாரங்கள் இருப்பதாக நாம் முன்னமே காட்டியிருக்கிறோமல்லவா? ஆகையால் இவ்விருவர்களும் சகோதரர்கள் என்று சொல்லவேண்டுமே யல்லாது, இருவரும் ஒருவரென்று சொல்லலாகாது. இவர்கள் வாழ்ந்திருந்த காலம் கி. பி. 1050-அதாவது, 880-வருஷங்களுக்கு முந்தின காலமென்றும் தீர்மானிக்கலாம்.

ஃ

12. பாணன்.

வட மொழியை நன்றாகக் கற்றறியாத பலர், அதில் வாசக நடையே கிடையாதென்றும், செய்யுள் நடை தான் வெகுவாய் வழங்கி வருகிறதென்றும் சொல்லுகிறதுண்டு. இது வட மொழிக்கு வீணான தூஷணையே யன்றி வேறல்ல. ஏனெனில், வட மொழியிலும் மற்றப் பாஷைகளைப் போல, செய்யுள் நடை எவ்வளவோ, அவ்வளவு வாசக நடையுமுண்டு. இவ்வித வாசக நடையில் தேர்ச்சி யடைந்தவர் பாணன் என்ற மகாகவி யாம். இவர் இருந்த காலத்தைச் செவ்வையாய்க் குறிக்க அநேக ஆதாரங்கள் இருக்கின்றன. பாண கவி செய்திருக்கும் கிரந்தங்களுள் முக்கியமானவைகள் ஹர்ஷ சரித்திரமும், காதம்பரியுமாம்.

ஃ

இதுவரையில் நாம் கண்டு பிடித்திருக்கிற ஆதாரங்களால், பாணன் என்பவர் கன்னியாகுப்ஜத்தில்ஆண்டு வந்த சீலாதித்திய மகாராஜாவின் காலத்தில் இருந்ததாகவும் அவர் வாத்ஸியாயன வம்சத்தார் எனவும், சித்திரபாநு என்னும் ஒரு பிராமணருடைய குமாரரெனவும் தெரிய வருகின்றது. இந்த சீலாதித்தியனுடைய காலம் கி. பி. 7-வது நூற்றாண்டின் மத்தியில் ஆனதால், இதைக்கொண்டு பாணகவியும் அக்காலத்தில் இருந்தாரென்று கூறக்கூடும். பாணகவியே தாம் செய்த ஹர்ஷ சரித்திரத்தில் தமது சிநேகிதர்களாகிய பத்ரன் நாராயணன், ஈசானன், மயூரன் என்ற கவிகளைக் குறித்திருக்கிறார். மேலும், மயூரன் என்றவர் பாணனுடைய மாமனாரவர். சார்ங்கதர பத்ததி என்ற புஸ்தகத்தில் பாணன், மயூரன் இவ்விரண்டு கவிகளும் ஸ்ரீஹர்ஷனுடைய காலத்தில் இருந்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறது. முற்கூறிய சீலாதித்தியனும் இந்த ஸ்ரீ ஹர்ஷன் என்பவனே.

ஃ

பைத்தியமென்பது மனிதனுடைய மூளையைக் கெடுத்துவிடுகிறது. ஆனால், விகாரமென்பது மூளையைச் சாஸ்வதமாய்க் கெடுத்துவிடாது. கொண்ட ஒரு எண்ணத்திலே மட்டில் அது கலங்கி நிற்கும். அவ்வெண்ணம் பிரத்தியக்ஷமாய் விட்டதோ, அல்லது கைக்குக் கிடைத்துவிட்டதோ, அந்த நொடியிலேயோ, அந்த விகாரம் சித்தத்திலிருந்து எடுபட்டுச் சுவாதீன புத்திக்கு வந்துவிடுகிறது.

பாணகவிக்குப் பால்யத்திலேயே மாதாவை இழக்க நேர்ந்தது. பிதாவே வெகு சிரமத்தோடு இவரை வளர்த்து உபநயனம் செய்து வேதாப்பியாஸம் செய்வித்து வருகையில் அகஸ்மாத் தாய் அவரும் மரணமடைந்தார். கடைசியில் அத்தையாகிய மாலாமதி என்பவள் வெகு ஆதரவோடு வளர்த்துவருங்காலத்தில் சாஸ்திர பண்டிதர்களான அநேகர் இவரது பிரபாவத்தைக்கண்டு இவர்களோடு நேசர்களாயினர். இவர் அவர்களோடு புறப்பட்டு அநேக தேசங்களில் வெகு காலம் ஸஞ்சாரம் செய்து நானாவித பாண்டித்தியத்தில் பிரஸித்தியடைந்து அவர்களோடு சொந்த தேசம் வந்து சேர்ந்தார். இக்காலத்தில் கன்னியாகுப்ஜம் என்னும் தேசத்தில் ஹர்ஷன் என்னும் அரசன் ஆண்டுவேந்தான். அவ்வரசன் பாணனுடைய சாதுர்யாதிகளைக் கேள்வியுற்று இவர் ராஜஸ்தானத்துக்கு யோக்கியரென்று அவரை வரவழைத்துப் பரீக்ஷிக்க எண்ணி, "இவன்தானோ ஸ்வேச்சாவிஹாரியான பாணன்" என்றான். அதைக் கேட்ட பாணன் "அரசனே! நான் கிரமம் தப்பி எதையும் செய்தவனல்ல; என் மாதா பிதாக்கள் பாலியத்திலேயே காலமானதால், நான் என் கல்வியின் பொருட்டு தேச ஸஞ்சாரத்தில் குதூகலனாய் என் ஸ்நேகிதர்களோடு ஸ்வதர்மத்துக்கும் ஞானத்துக்கும் விரோதமில்லாதபடி நானா தேசங்களில் சஞ்சரித்து வந்தேன். மறுபடியும் வித்வாம்ஸ நேசர்களோடு என் ஸ்வதேசத்துக்கு வந்திருக்கும்பொழுது, நான் ஸ்வேச்சாவிஹாரியாவது எப்படி?" என்றான். அரசன் இவரது தைரியத்துக்கும் காம்பீரியத்துக்கும் சந்தோஷித்து இவரைத் தன் ஆஸ்தான பண்டிதராய் வைத்துக்கொண்டான். சில காலத்திற்குப் பிறகு தன் பந்துமித்திராதிகளைப் பார்ப்பதற்காக ஸரஸ்வதி நதி தீரத்தின் பக்கத்திலுள்ள பிரீதிகோடமென்னும் தான் இருந்த அக்கிரஹாரத்துக்கு வரவும், அங்கிருந்தவர்களெல்லாம் பாணனைக் கண்டு ஸந்தோஷித்து, "கவி சிரேஷ்டனே! நீ போய் வஸித்துவந்த தேசத்தையும், அங்கு ஆண்டுவரும் அரசனுடைய சரித்திரத்தையும் எங்களுக்குச் சொல்" என, அந்த க்ஷணத்தில் ஹர்ஷ சரிதம் என்னும் கத்யரூபமான மஹாப் பிரபந்தத்தைச் செய்து முடித்தார். இதைக் கேட்டவர்களெல்லாம் ஆநந்தப்பட்டனர். இக் கவி செய்த அநேக கிரந்தங்களில், பரிபூர்வ பாகம், ஹர்ஷ சரிதம், சண்டீசதகம், பார்வதி பரிணய நாடகம், சிங்காரபூஷண பாணம், முகுடதாடித நாடகம், காதம்பரி ஆகிய இவைகளெல்லாம் வெகு உத்கிருஷ்டமான கிரந்தங்களாம்.

ஃ

பாணகவியின் வாசாலத்துவம் காதம்பரி என்கிற கிரந்தத்தைப் படிப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியவரும். "பாணோச்சிஷ்டம் ஜகத் ஸர்வம்" என்ற ஒரு பழமொழி

ஜீ. யூ. போப்பையர் என்ற ஆங்கிலப் பெரியார் தமிழில் இலக்கண நூல் ஒன்றை வெகு தெளிவாய் டிம்மி 1×8-அளவில் 300-பக்கங்கள்போலுள்ளதாய் எழுதினர். அதன் விலை ரூபாய் இரண்டிருக்கும். அது இப்பொழுது அகப்படவில்லை. அந்த நூலிலிருந்தும் சிறவர்க்கு உபயோகமாக ஒரு அணு இலக்கண புஸ்தகத்தை வெளியிட்டார். அதுதான் முன்பு 2, 3, 4-ம் வகுப்புகளுக்குப் பாட புஸ்தகமாக இருந்தது. அந்த வழியைப் பார்த்துக்கொண்டே பிறகு மற்றவர்கள் வேறு இலக்கண நூல்கள் எழுதத் தொடங்கினர்.

ஸம்ஸ்கிருதத்தில் வழங்குகின்றது. அதனது தாத்பர்யம் என்னவென்றால், பாணன் உமிழ்ந்துவிட்ட எச்சில் ஸம்ஸ்கிருதமென்பதாம். அதாவது, வடமொழியை அவரவ்வளவு நன்றாகப் படித்தவர் கிடையாது என்றது போலும். அன்றியும் காதம்பரியில் பாணன் வருணிக்காத சங்கதி புதிதாக ஒன்றிலும் கிடையாது. சுபாவத்தை வருணிப்பதில் காளிதாஸன், ரூத்திரகன் இவர்களுக்குச் சமானமாகவும், மனதை உருக்கத் தக்க துக்கம் முதலியவைகளைச் சொல்வதில் பவபூதிக்கு மேலாகவும் சொல்லலாம். காதம்பரியில் பிள்ளையில்லாக் குறையை அரசன் சொல்லி அழுகிற பாகத்தைப் படித்துக் கண்ணீர் வடிக்காதவர் கிடைக்கவே கிடையாது. இவரது கிரந்தமாகிய காதம்பரியைப் படிக்க ஆரம்பித்தால், காலம் போகிறதுகூடத் தெரியாது; பசியும் தோன்றாது. அதைக்கொண்டு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு பழமொழி வழங்கி வருகின்றது. அதென்னவென்றால், "காதம்பரீ ரஸக்ஞானும் ஆஹாரோபி நரோசதே." காதம்பரியின் ரஸத்தை யறிந்தவர்களுக்குச் சாப்பாடுகூட அவ்வளவு இனிப்பைத் தராது என்பதாம். அன்றியும் "காதம்பரி" என்ற பதத்திற்கு கள்ளு என்கிற அர்த்தமும் உண்டு. எப்படிக் கள்ளுண்பவனுக்கு ஆகாரத்தில் ருசியும் பிரியமுமிராதோ அது போலக் காதம்பரி படிப்பவனுக்கு மற்றக் கிரந்தங்களில் ஆநந்தம் இருக்கவேமாட்டாது என்பதாம். அது அவ்வளவும் உண்மையே. காதம்பரியைக் கற்றறிந்தவர்களே அதை யறிவார்கள். பாணகவி எழுதிய பார்வதி பரிணயம் என்பது ஒரு சிறு நாடகமானாலும் அது மிகவும் அழகான கிரந்தம். இதனால்தான் இவர் வாத்ஸியாயன வம்சத்தார் என்பது வெளியாகின்றது. இவர் சரித்திரத்தை இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லிவந்தோம். இவரது மாமனாகிய மயூரன் என்ற மகா கவியினுடைய சரித்திரத்தையும் இத்துடன் சேர்த்துச் சொல்லுவோம்.

(மற்றதில் முடிவு.)

மனிதனுக்குத் தன்னை யறியாமலே எண்ணங்கள் வெளி வந்தாலொழிய, மற்றெவையும் தீர்க்க தரிசனமாக மாட்டா.



"நச்சுப்பொய்கை" அல்லது "நாரியர் வேட்கை":—

[ஒரு நவீன நாடகம். ஸ்ரீமான் கோவை அ. அய்யாமுத்து அவர்களின் கற்பனை. விலை அணா 8. கிளேஸ் பதிப்பு. டிம்மி 1x8-அளவில் 100-பக்கங்கள். c/o காதி வஸ்திராலயம், திருப்பூர் என்ற விலாஸத்தில் கிடைக்கும்.]

இந்நாடகம் நன்கமைந்துள்ளது. நடித்தற்கும் சிறந்தது. உலக இயற்கையைப் பல திறத்தானும் விளக்கியுள்ளது தனவந்தர்களின் புதல்வர்கள் இருவகையிற் சொத்துக்களைச் சின்னாபின்னம் செய்கின்றனர். சம்பளம் கிடைக்காத பெருமைப் பதவிகளை வகித்தற்பொருட்டுப் பணத்தை ஆயிரக்கணக்கில் வாரியிறைத்தும், டம்பமான விருந்துகள் நடத்தியும் மகா கீர்த்தியில் உயர்ந்துவிட்டோமெனக் குதூகலித்து வறியராய்க் கடனாளிகளாவது ஒருவகை. தாசி, குடி, சூது முதலியவற்றைத் தொட்டுக்கொண்டு குட்டிச்சுவராவது மற்றொரு வகை. இந்நாடகத்தில் தோன்றும் கதாநாயகன் இந்த இரண்டாவது வகையைப்பின்பற்றிப் பல பெண்களின் கற்பை யழித்துப் படுபாவியாகின்றான். பெண்களை மயக்கிக் கெடுப்பதிற் சமர்த்தரான, சிலர் தங்களிடம் மயங்காத கற்பரசிகளைக் காணுகையில் ஆத்திரம்மிகுந்து சூழ்ச்சிகள் நாடுவதும், அதன் மூலமாகவே கேடடைந்து கேவலப்பட்டு ஸர்வ நாசமாவதும் கண்டிருக்கிறோம். இந்நாடகக் கதாநாயகனின் முடிவும் அதுவே. இவனை மணத்தற்கென இருந்த மங்கைநல்லாள் இவனது சூதுவாதுகளைத் தந்திரமாயுணர்ந்து பதிலுக்குப் பதில் பழி வாங்குகிறாள். வயோதிக விவாகத்தின் ஆபாச முடிவுகளையும் இதில் காண்கிறோம். இதனை இயற்றிய பெரியார் சிறைபுகுந்த தேசபக்தராவர். மிக்க மனோ உறுதியும் உலக அனுபவமும் வாய்ந்தவர். இந்நாடகம் தமிழ்ச் செல்வர்கட்கு ஒரு நல்ல விருந்தாகும்.

ஃ

ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீ பாய்:—

[புராதன இந்தியாவின் சரிதை. படங்களுடன் கூடியது. இரங்கூன் 36-வது கல்லி 10/212-ல் உள்ள ஸ்ரீமான் எஸ். நல்லசிவன் அவர்கள் மொழிபெயர்த்தது. டபிள்கிரவுன் 1x16-ல் 200 பக்கங்களுள்ளது. விலை அணா 12.]

இதுபோன்ற சிரேஷ்டதரமான சரித்திர நூலுக்கு மதிப்புரை தேவையில்லை, இவ்வளவு விரிவானதாக இதுவரை தமிழில் எழுதப்படவில்லை. ராணி லக்ஷ்மீபாய் ஆண் உடையுடுத்துக் குதிரைமீதேறி ராணுவ வீரர்களுடன் போர் முனைக்

விவாகத்திற்கு வருவோர் போஜனம் ருசிகரமாயிருக்கிறதா என்பதையே கவனித்து, அதற்குத் தக்கபடி விவாகம் நன்றாய் நடந்ததா இல்லையா என்கிற தீர்ப்பைக் கொடுக்கிறார்கள்.

குச் செல்லும் காட்சியுடனுள்ள படம் மிக்க வசீகரமானது. முற்றிலும் வீரச்சுவை செறிந்த இந்த சரித்திரத்தை நம் நாட்டுப் பெண்மணிகள் படித்துணர்வார்களாயின், புது உருவில் வீரத் தாய்மார்களாவார்களென்பது திண்ணம். கடைசியில் ராணி லக்ஷ்மீபாய் கடவுளிடம் சென்றுவிடும் ஸம்பவம் வாசித்து சகிக்கக்கூடவில்லை. அது மிக்க சோகபாகம். பெரும்பாலும் கண்ணீராகவும் கவலையாகவுமேயுள்ள சரித்திரமாயினும், மஹா அற்புதகரமான வீரத்வமுடையது. புராதன சரித்திரங்களைப் படித்துணர வேண்டுமென்ற ஆவல் இந்நூலின் மூலமாகவேனும் தமிழ் மக்களின் நெஞ்சில் உதயமாகுமென்று நம்புகின்றோம். இந்நூலை வெளியிடுவதில் இதன் ஆசிரியர் எற்றுள்ள அபாரமான சிரமத்திற்குத் தமிழகம் கடமைப்பட்டுள்ளது. முக்கியமாய் ஒவ்வொரு பெண்மணியும் வாசிக்கத்தக்கது. புராதன சரித்திரங்களை வாசித்துச் சுவைக்கும் அறிவு வெகு பேருக்கில்லாததை இந்நூல் திருத்துமாக. இவ்வீரச் சரிதையைத் தமிழ் மொழியில் அலங்கரித்த ஸ்ரீமானுக்கு நமது அன்பைத் தெரிவிக்கின்றோம்.

ஃ

கிரகண விளக்கம்:—

[யாழ்ப்பாணம், மட்டுவில் "தில்லைவாஸம்" ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றியது. டிம்மி 1x8-ல் 12-பக்கங்கள்.]

கிரகணம் உண்டாகும் விதத்தை விளக்கி ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டுள்ளது. கிரகணங்கள் ஏற்பட்ட சமயங்களில் உலகத்துக்கு உண்டான கெடுதல்களையும் ஆசிரியர் வெகு தெளிவாக விஸ்தரித்துள்ளார். நூலின் முடிவில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:—"இவ்வாறே கிரகணங்கள் ஏற்படுவதனுல், பூமியில் அநர்த்தங்கள் சம்பவிக்கின்றன. அவற்றை அறிஞர்கள் அறிந்து ஜனங்களுக்கு அறிவித்து வந்தார்கள். தற்காலத்திலோ ஜோதிஷ சாஸ்திர உணர்ச்சி குன்றிவருவதினுல், அதில் நம்பிக்கை குறைந்து வருகிறது. கிரகணம் போன்ற இத்தகைய சம்பவங்களால் யாதொரு நன்மை தீமையுமில்லை யென்றும் வாதிக்கிறார்கள். சிறிது நம்பிக்கை கொண்டு ஆராய்வோருக்குச் சோதிஷ சாஸ்திரத்தின் உண்மை புலனுகாமற் போகாது."

ஃ

உயிர் இரக்க நல்வழி மன்றம்:—

இச்சங்கத்தார் ஆயிரம் வருட கேலண்டர் என்று அழகாக ஒரு காகிதத்தில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அதன் விலை அணு 1. 22, வினைதீர்த்த விநாயகர் கோயில் தெரு, இருங்குன்றம், பிரம்பூர் பாரக்ஸ், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

இச்சங்கத்தின் கொள்கைகளாவன:—"இம்மன்றம், தெய்வங்கள், யாகங்கள் முதலியவைகள் பெயராலும், பிற காரணங்களாலும், மக்கள் மற்றைய சிற்றுயிர்களைக் கொல்லுதலையும், கொன்று அவற்றின் ஊனை உண்ணுதலையும் தடுத்து, எல்லாம்

இப்பொழுது விவாகத்தில் ஜவ்வரிசி பாயஸம் போய் சேமியா பாயஸம் புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜவ்வரிசியும் சேமியாவும் கலந்து செய்வது செலவைக் குறைக்கும்.

வல்ல இறைவர் ஒருவரையே இறை யெனக்கொள்ளும் இயல் நெறியை உலகிடை பரப்புவதற்கென, 8—9—1929-ல் நிறுவப்பெற்றது. பிறப்பினல் மக்களுக்குள் வேறுபாடு உண்டென்னும் பேதமையை ஒழித்து பேதாபேதமின்றி மக்கள் சமரசவாழ்வைப்பெற்று மகிழ வழி கோலுவது இம்மன்றத்திற்குரிய மற்றுமொரு சிறந்த கொள்கை யாகும்.''

கூட்டம் பெருத்தால் 'குசு' பெருகும்.

வீட்டிலுள்ள பெண்களே தங்களின் இல்லத்து வேலை களைச் சுலபமாய்ச் செய்துகொள்வார்கள். அவ்விதம் செய் வது வழக்கப்பட்டுப்போன சங்கதியுமாகும். ஏதோ தாங்கள் சமைத்ததைப் புசித்துச் சிக்கனமாகவும் வாழ்வார்கள். பண மும் அதிகம் செலவாகாது. எப்போதும்போல் ஆகிற செலவுகள் மட்டுமே நடக்கும். இவ்விதம் ஒழுங்காக நடந்து வருகையில், விருந்தினராகச் சிலர் வருவதில் கூட்டம் பெருத்து, 'குசு' அதாவது அதிகச் செலவு மாகிறது. இதில் விருந்திடுவதையோ, அதிகச் செலவா வதையோ வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனல், இந்த விருந்துக் கூட்டத்துப் பெண்கள் தாங்களும் அந்த வீட்டுக்கு உழைத்து வேலை செய்து, அந்த வேலையின் கூலியாக உண் பதுபோல் பசப்பிக் காட்டுகிறார்களே—அதுதான் கூடாது. இவர்கள் வந்து கூட்டம் போட்டதால்தான் வீட்டிலே அதிக வேலை ஏற்படும்படியானது. இவர்களின் கூட்டம் இல்லா விடில வீட்டில் எப்போதுமுள்ள சாதாரண வேலைதான் நடக்கும். ஆதலின், தாங்கள் ஏதோ வந்திருந்து வீட்டுப் பெண்களுக்கு உதவியாக உழைத்ததாய் எண்ணிக்கொள்ளு வதும், சொல்லிக்கொள்ளுவதும் சரியல்ல. இவர்கள் தங்கள் காரியமாகத் தாங்களே வந்தார்களேயன்றி, அந்த வீட்டுப் பெண்களுக்கு உடனிருந்து உதவவேண்டுமென்று வரவில்லையென்பதையும் சிந்தித்துப் பார்த்துக்கொள்ளட்டும்.

சிலர் வெகு தடபுடலான பெயரைக்கொண்டிருப்பார்கள். அவர்கள் இன்று இருக்கிற இடத்தில் நாளைக்கு அகப்படார்கள். அவர்கள் வசிக்கிற இடமும் ஒரு நிச்சயமில்லை. இடம் மட்டுமல்ல, இன்ன ஊரில்தான் இருப்ப ரென்றும் சொல்வதற்கில்லை. எதிர்ப்பட்டுக்கொண்டால் வெகு பிரியமாய்க் குலாவி விஸ்தாரப் பிரசங்கங்கள் பேசுவர். இவர்கள் கபடமும் பொய்யுமே உருவாய்த் தோன்றுவர். இவர்களைக் கண்டுபிடிப்பதென்பது வெகு பிரயாசை. இத்தகையோருக்கு விலாசம் தெரியாத வீணர்கள் எனில் பொருந்தும்.

இந்தியா சட்டசபைத் தேர்தலின் முடிவு.

சென்னை மாகாணப் பொதுத் தொகுதிகளின் விவரம்.	மொத்தம் பதிவான ஓட்டுகள்.	காங்கிரஸ் வெற்றி ஓட்டுகள்.	இதர கட்சி ஓட்டு.
(1) கஞ்சம்—விசாகப்பட்டணம்	27.430	18,921	8,319
(2) கோதாவரி—கிருஷ்ணை	34,391	32,772	1,454
(3) குண்டூர்—நெல்லூர்	16,601	12,816	3,625
(4) சித்தூர்—ராயலசீமா	16,776	12,565	3,873
(5) சென்னை	12,419	8,758	3,351
(6) செங்கற்பட்டு—தென்னாற்காடு	14,123	10,137	3,704
(7) தஞ்சை—திரிச்சி	17,077	13,097	3,580
(8) மதுரை, இராமநாத், திருநெல்[வேலி	13.189	12,931	140
(9) சேலம். கோவை, வடாற்காடு	17,559	15,258	2,047
(10) கேரளம்—மலையாளம்	12,776	10,801	1,790
(11) இந்திய வர்த்தகத் தொகுதி	1,424	757	665
மொத்தம் ஓட்டுகள்	183,765	148,813	32,528

அபேக்ஷகர்களின் பெயர்களும் ஓட்டு விவரங்களும்.

1. கஞ்சம்—விசாகப்பட்டணம்

ஸ்ரீ. வி. வி. கிரி (காங்கிரஸ்) 18921
ஸ்ரீ. சீதாராம ராஜு 8319

2. கோதாவரி—கிருஷ்ணை.

ஸ்ரீ. கே. நாகேஸ்வரராவ் 32772
ஸ்ரீ. வி, சுப்பிரமணியம் 1454

3. குண்டூர்—நெல்லூர்

புரொபஸர் என்.ஜி. ரங்கா 12816
ஸ்ரீ. ராமைய சௌதுரி 3625

4. சித்தூர்—ராயலசீமா

ஸ்ரீ. அநந்தசயன ஐயங்கார் 12565
ஸ்ரீ. ராமகிருஷ்ண ரெட்டியார் 3873

5. சென்னை

ஸ்ரீ. எஸ். சத்திய மூர்த்தி 8758
ஸ்ரீ. எ. ராமசாமி முதலியார் 3351

6. செங்கற்பட்டு-தென்னாற்காடு

ஸ்ரீ. சி. என். முத்துரங்க முதலியார் 10137
ஸ்ரீ. பி. நடேச முதலியார் 3704

7. தஞ்சை—திரிச்சி

டாக்டர் T. S. S. ராஜன் 13097
ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரி 3035
ஸ்ரீ. வேணுகோபால் செட்டியார் 545

8. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி

ஸ்ரீ. குமாரசாமி ராஜா 12931
ஸ்ரீ. காந்திமதிநாத பிள்ளை 140

9. வடஆற்காடு, சேலம், கோவை.

ஸ்ரீ. அவனுசிலிங்கம் செட்டியார் ,, 15258
டாக்டர் வரதராஜுலு நாயுடு 2047

10. கேரளம்—மலையாளம்

ஸ்ரீ. சாமுவேல் ஏரன் 10881
ஸ்ரீ. பிரபாகர தாம்பன் 1790

11. இந்திய வர்த்தகத் தொகுதி

ஸ்ரீ. சாமி வெங்கடாசலம் செட்டியார் 757
ஸர். ஷண்முகம் செட்டியார் 665

☞ தடித்த எழுத்திலுள்ளவை காங்கிரஸ் அபேக்ஷகர்களைக் குறிக்கும்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

கொடி ஏறினதா?



என்ன கொடி? சுரைக்கொடியா? அவரைக் கொடியா? பீர்க்கங்கொடியா? புடலங்கொடியா? திராக்ஷைக் கொடியா? மீனக்கொடியா அனுமக் கொடியா? கருடக்கொடியா? நாகக்கொடியா? வைணவக்கொடியா? சைவக்கொடியா? திரிதண்டக்கொடியா? யூனியன் ஜாக் பிரிட்டிஷ்கொடியா? இதெல்லாமேயல்ல; ராட்டினக்குறியுள்ள காங்கிரஸ் கொடி இந்தியா சட்டசபைத் தேர்தலிலே எப்படி ஏறினது; எவ்வளவு உயரம் ஏறினதென்று தான் விகடன் ஆராய்ந்திட இங்கு வந்தேன்! காங்கிரஸ் கொடி என்றாலும், பாரதத்தாயின் மணிக்கொடி என்றாலும் இரண்டும் ஒன்றுதான்! காங்கிரஸ், குடியேற்ற நாட்டு அரசாட்சி கேட்கப்போனதும், அதற்குமேல் நடந்த கதைகளும். எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து, கடைசியிலே காங்கிரஸ் மகாசபை கூடுவதையே கலைத்து விடும்படியாகி, காங்கிரஸே சட்ட விரோதமானதென்று அரசினர் தீர்மானித்து விட்ட சங்கதிகளும் என் நஞ்சான் குஞ்சான்கள் தெரிந்ததுதானே! அதற்குப்பின் "சட்ட மறுப்பு" என்பதை மகாத்மாஜீ காங்கிரஸிலிருந்தும் விலகிவிட்ட பிறகு, அரசாங்கத்தினரும் காங்கிரஸ் மீதிருந்த தடைகளை நிவர்த்தி செய்துவிட, அதன் மேல் பம்பாயில் காங்கிரஸ் கூடி முடிந்ததும், சட்ட சபைப்பிரவேசத்தைக் காங்கிரஸ் ஆதரித்ததும்— விகடன் சொல்லித் தெரிய வேண்டியதில்லையே! இதற்குப் பிறகு சட்டசபைப் பிரவேசத்திற்கு நல்ல பணக்காரப் பருப்புகளா யுள்ளவர்களைக் காங்கிரஸ் அபேக்ஷகர்களாகத் தேடிப் பிடிக்கிறவேலை ஆரம்பமாச்சுதப்பா! இந்தியா முழுதுக்கும் ஆங்காங்கு இந்தியா சட்டசபைக்குச் செல்லுகிற காங்கிரஸ் அபேக்ஷகர்களைத் தேடி நியமித்தார்கள்! இவர்களுக்குப் போட்டியாகவும் பலர் புறப்பட்டார்கள்! இதிலே நம்ம சென்னை மாகாணத்துக்குப் பதினொரு பேர்களைக் காங்கிரஸ் அபேக்ஷகர்களாக நியமித்த கதையை மட்டும் விகடன் இங்கு விவரிக்கிறேன்! கேளுங்கள்!

ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை. நமது சரீரத்தில்கூட ஏற்றுமதியும் இறக்குமதியும் சேர்ந்திருக்கிறது.

சென்னை மாகாணத்துப் பதி னொரு அபேட்சகர்களுக்கும் சரி யான ஜதைப் போட்டிக்காரர்கள் கிளம்பினார்கள்! ஒவ்வொரு போட் டிக்காரரும் தங்கள் வேலையிலே மெத்த மெத்தத் தேர்ந்தவர்கள்! சுல பத்தில் இளைத்துச் சோர்ந்துவிடக் கூடியவர்களல்ல! வாய் ஓயாமற் பேசுகிற அண்ணாவான ஸ்ரீ சத்திய மூர்த்திக்குப் போட்டியாக நின்ற ஸ்ரீ ராமசாமி முதலியார் என்ன சாமான்யமானவரா? ஸ்ரீ சாமிவெங் கடாஜலம் செட்டியாருக்கு எதிராக நின்ற ஸர். ஷண்முகம் செட்டியா ரது இராஜ தந்திரம் யாருக்கு வரும்? அரசாங்கத்தாரின் தயவு கடாக்ஷங் களைக் கிடைத்தபோதெல்லாம் பெற் றுக்கொண்டு மகா செல்வாக்குடனே விளங்குகிறவ ரல்லவோ? ஸ்ரீ அவ னாசிலிங்கம் செட்டியாருக்குப் போட்டியாகக் கிளம்பிய டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் பிரசித்தி தமிழ் நாட்டிலே யார்தான் அறியா தார்? பல முறை சிறைசென்று வந்த தீரராச்சுதே! தமமைக் காண வருகிற வர்களையும் தமது பேட்டி ராஜ பேட்டி என்று நினைக்கும்படியாக, வாசலிலே சேவகனைக் காவல் வைத் துத் தடுத்து, வந்தவர்களை நெடுநேரம் காக்கவைத்து, அப்பாலே பேட்டி தருகிற அவ்வளவு மகோன்னதப் பெருமை தாங்கியவராச்சுதே? எதை யும் தானாகவே சுயமாய் யோசித்துக் காரியம் செய்கிற பெரிய பெரிய மூளையும் மதிநுட்பமும் வாய்ந்தவ ராச்சுதே! இப்படிப்பட்ட பேருபெத்த பேரான பெருந்தலைகளெல்லாம் சேர்ந்துகொண்டு காங்கிரஸ் அபேக்ஷ கர்களை எதிர்த்துப் போட்டி போடும் போது, காங்கிரஸும் வெற்றியடை யுமா, ஜெயிக்குமா, பலிக்குமா என்று நினைத்தவர்களும் சந்தேகப்பட்டவர் களும் எவ்வளவோ பேர்தானே!

ஃ

ஆனாலோ, ஒரு சின்ன சங் கதியை என் நஞ்சான் குஞ்சான்கள் மறந்துவிடக்கூடாது! இந்தியாவிலே, ஜனப்பிரதிநிதிகளென்றும், பொது ஜனச் சார்பாக வெகு உருக்கமுள்ள வர்களென்றும், ரொம்ப ரொம்ப பரோபகாரிகளென்றும் பேரும் பெருமையும், சீரும் சிறப்பும், புகழும் கீர்த்தியும், பிரசித்தியும் ஆரவாரமும் பெற்றவர்களெல்லாமுமே, ஆதியிலே காங்கிரஸில் சேர்ந்திருந்து அதன் பேரைச் சொல்லிக்கொண்டு பெரிய மனுஷியர்களானவர்கள்தான்! அப் படிப் பெரியவர்களான பின்னாலே, தங்களின் பேருக்கேதான் ஜனங்கள் மதிப்பதாகவும், காங்கிரஸுக்காகத் தங்களை மதிக்கவில்லை யென்றும் எண்ணிக்கொள்பவர்களாய் மாறிப் போனார்கள்! பிறகு தாங்கள் அடைந்த பெருமைகளையும் பிரசித் தியையும் தூக்கிக்கொண்டு அவரவர் வழியிலே சென்று இன்னும் அதிகப் பிரசித்திபெற விரும்பி அதற் கானவைகளைச் செய்யலானார்கள்! காங்கிரஸிலிருந்து விலகிக்கொண் டும் விட்டார்கள். காங்கிரஸுக்கு இப்போது மதிப்பே கிடையாதென்று பறை சாற்றவும் புறப்பட்டுக்கொண் டார்கள்! கடைசியாகக் காங்கிர ஸுக்கே போட்டியாகவும் வந்து, அதை நசுக்கிப் பிசுக்கிக் கலக்கி மூச் சுத் திணறும்படி விரட்டி யடித்துத் தோல்வியுறச் செய்வதென்று அதற் குப் போட்டியான அபேக்ஷகர்களாக வும் புறப்பட்டுக் கொண்டார்க ளய்யனே!

ஃ

ஆரம்பிக்கப்படும் முயற்சியில் ஜனங்களுக்கு நிஷ்டையும் பக்தியும் அமைந்திருந்தாலன்றி, ஒரே நிலையாய் நிற்றல் சாத்தியமில்லை.

இதற்கு அப்பாலே இந்தியா சட்டசபைத் தேர்தல் நாளும் வந்ததப்பா! அதற்கு சில நாளைக்கு முந்திதான் டப்பு டுப்பு பட்டாசு பாணத் தீபாவளியும் வந்துவிட்டுப் போச்சு! அது போனதும், ஒரே வருஷத்திலேயே இரண்டு தீபாவளியாகத் தேர்தல் திருவிழா தொடங்கிற்றப்பா! ஒரு காசு கிடைப்பது குதிரைக் கொம்பா யிருக்கிற இந்த நாளிலே, பி. ஏ. எம். ஏ. படித்தவர்களெல்லாம் வேலை கிடைக்காமலே பேன் குத்தி மூலை வீட்டிலே குந்திக் கிடக்கிற கால பேதத்திலே, பிழைப்பு கிடைக்காமலே அலைகிற இந்தத் தவிப்புக் காலத்திலே இந்தியா சட்டசபைக்காக அபேக்ஷகர்களாக நின்றவர்களெல்லாம் எத்தனையோ முடிகள் போட்டு வைத்திருந்த தங்களின் பணப்பைகளை யெல்லாம் திறந்து விட்டு ரூபாயைக் காசாக வாரிச் செலவு பண்ணினார்களப்பா! தெருவெல்லாம் கூட்டம் கும்மாளம் போட்டோங்கோ! கொடிகளோடும், என க்கே ஓட்டு கொடுங்களென்ற விளம்பரங்களோடும் பல கூட்டங்களை வீதிக்கு வீதி சுற்ற வைத்தார்கள்! ஒவ்வொரு ஓட்டுக்காரரையும் போய் பார்த்து அவர்களின் தயவு கிருபைகளை வேண்டினார்கள்!

ஃ

இப்படித் தங்கள் பக்கமாக நின்று வேலை செய்கிறவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்த ஜோடி கூட்டங்களுக்கும் வேண்டிய சாப்பாடு, பகோடா, காராபூந்தி, லட்டு, ஜிலேப்பி, மைசூர்பாகு, சேமியா பாயஸம், காபி, டீ, கோகோ, வெற்றிலை, புகையிலை, பாக்கு, சுண்ணாம்பு, அதற்குமேலே புகை விடுகிற சரக்குகள், மூக்குப்பொடி முதலியவைகளை யெல்லாம் சப்ளை செய்து பணத்தைப் பைசாவாக வாரிக் கொட்டினார்கள்! இதோடே போச்சா! அங்கங்கே, அந்தந்த ஊர்களுக்குப் போய்ப் பேசவும், கூட்டங் கூடவும், மோட்டார் வண்டிச் செலவுகள் வேறே செய்தார்கள்! விகடன் இங்கே விவரிக்க முடியாத எத்தனையோ செலவுகளை யெல்லாம் இந்த அபேக்ஷகப் புண்ணியவான்கள் தாங்கினார்களப்பா! பெட்டியிலே எத்தனையோ மாதங்களாக வியர்வை நாற்றத்துடனே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற பட்டு ஜரிகைச் சேலைகளெல்லாம் கல்யாண நாளிலே பெண் மணிகளின் இடுப்பைச் சுற்றிக் கொண்டு காற்று வாங்குவதுபோல, பணம்பெருத்த பெத்தப் பருப்புகளின் பாசிபிடித்துப் பெட்டியிலும் பாங்கியிலும் கிடந்த பணங்களெல்லாம் தாராளமாக வெளியே வந்து, மடமட மடவென்று தடபுடலாய்ச் செலவுகளாச்சுதப்பா! தேர்தல் நாளிலே அது ஒரு பண்டிகை நாளாகவே இருந்ததப்பா! ஜட்கா வண்டிகளும், பஸ்ஸுகளும், மோட்டார்களும் மூலைக்கு மூலை கொடி கட்டிக்கொண்டு பறந்த வேடிக்கைகளை விகடன் என்னவென்று சொல்வேன்! ஆஹாஹா! இவ்வளவு பாடுகளும் பரதவிப்புகளும் பொது ஜனங்களுடைய நன்மைக்காகவாம்! பரோபகாரத்திற்காகவே இவ்வளவு பிரயாசைகளும் பணச்செலவுகளும் படுகிறார்களாம்! இது அவர்களுடைய சொந்த சுயநன்மைக்காக அல்லவாம்! இந்தியா சட்டசபையிலே நாற்காலியிலேபோய் உட்கார்ந்து பேசி, இந்திய ஜனங்களுக்கு நன்மைகள் லாபங்கள் மூட்டை மூட்

வியாதி உடம்பினுள்ளே ஒட்டியதாயிருக்கும் பொழுது, வெளியே சிற்சில இடங்களில் மட்டும் மருந்து பூசும் வைத்தியன் பாசாங்கு வைத்தியனேயொழிய உண்மையானவனல்லன்.

டையாக வாங்கிக் கொடுப்பதற்காக வாம்! அத்தேரி பாக்ஷா! அச்சா! போத் அச்சா! நல்ல பேஷான மயக்கு வார்த்தைகளப்பா இது!!!

ஃ

பணக்காரப் பெத்த பெரியவர்களின் பணங்களெல்லாம் இப்படித்தான் பெருமைப்படுகிற, புகழ் பிரதாபம் தேடிக்கொள்கிற சங்கதிகளிலே செலவாகும்! மற்ற சங்கதிகளிலே இந்தப் பெரிய பரோபகாரிகளிற் பலர் ஒரு காசு செலவிடவும் கணக்கு பார்ப்பார்கள்! ஏழை யொருவன் அறுத்துக்கொண்ட காயத்துக்கு இவ்வளவு சுண்ணும்பு தடவுதற்கும் கொடுக்கமாட்டார்கள்! ஒரு கூலிக்காரனுக்குக் காலணு சேர்த்துத் தரவு மாட்டார்கள்! தங்களின் சம்பள ஆட்களுக்கு அவர்கள் வேலை நிறுத்தம் செய்தாலுங்கூட ஒரு கால்ரூபா சேர்த்து உயர்த்தமாட்டார்கள்! இப்படியாக வெகு செட்டும் பிசிணறிக்கையுமா யிருந்துவிட்டு, திடீரென்று ஒரு பெருமைப்படுகிற சங்கதியிலே ஆயிரம் பதிணுயிரக் கணக்காய் வாரியிறைப்பார்கள்! இது பணப் பருப்புகளின் சங்கதி! இவர்களெல்லாம் இந்த சட்டசபைத் தேர்தலிலே ஆயிரம், பதிணுயிரம், இருபதிணுயிரம் போலே வாரிக்கொட்டித் தீர்த்திருக்கலாம்! அடே யப்பா! எவ்வளவு பெருந் தொகைகள் செலவு! இவ்வளவு செலவுகள் செய்தாலும், அது மூன்று வருஷங்கள் வரைக்கும்தான்! பிறகு மறுபடியும் தேர்தலுக்கு நின்று பழயபடி பணத்தைச் செலவிட வே ணு ம்! அப்போதுங்கூட ஜெயித்தால்தான் உண்டு! தோற்றாலோ! ஐயோ! அப்பா! அது ஒரு பெரிய பெரிய துக்கம்! ஏழைகள் பசிக்காக அழுதுவாட, பணக்காரர்களோ பெருமைக்காக அழுது வாடுகிறார்கள்! உலகப் போக்கே இப்படித்தாணுக்கும்! இதுவும் ஒரு வேடிக்கையான நாடகம்—தமாஷ் தான்!

ஃ

எல்லா தேர்தல்களும் ஆரவாரங்களும் நடந்து முடிந்து ஓட்டுகளை எண்ணத் தொடங்கிஞர்கள்! முதலிலே சென்னையில் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கும், ஸ்ரீ சாமி வெங்கிடாஜலம் செட்டியாருக்கும வெற்றிகள் கிடைத்த சங்கதி வெளியாச்சுது! ஆ! ஸ்ரீ இராமசாமி முதலியார் பெரிய ஜஸ்டிஸ்காரராச்சுதே! எவ்வளவோ உன்னதங்கள் தாங்கியவராச்சுதே! அவர் தோற்றுப்போனுரா என்று மூக்குக்குமேலே விரலை வைத்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்! அதற்குப் பிறகு ஸர். ஷண்முகம் செட்டியார் தோற்றுப்போனுர் என்பது அதைவிட அதிக ஆச்சரியமாய்விட்டது! ஸநாதனிகளுக்காக ரொம்ப ரொம்ப உழைக்கிறவராகச் சொல்லிக்கொண்ட ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரும் தோற்றுப் போய்விட்டாரு! அப்பாலே ஒரு பெரிய சங்கதி! தமிழ்நாட்டு வீரச் சிங்கமாய்ப் பழய நாளிலே நின்ற டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் தோற்றுப்போனது பெரிய வியப்பாய்விட்டது! காங்கிரஸின் பெயரால் மகோன்னதப்பெருமைகொண்ட டாக்டர் நாயுடு இப்படி விழுந்துபோனுரே! இப்படியாக சென்னை மாகாணத்தின் பதினெரு தேர்தல்களிலும் காங்கிரஸ் அபேக்ஷகர்களே வெற்றி பெற்றுவிட்டது மகத்தான அபூர்வ ஜெயமப்பா! இப்படியே இந்தியா முழுவதிலும் 100-க்கு 80-பேர் காங்

நல்ல, கெட்ட சமயங்கள் எப்படி ஏற்படுமென்பதை எவனும் அறிய மாட்டான்.

ரஸ் அபேக்ஷகர்களே ஜெயம் பெற்று, காங்கிரஸ் கொடி ரொம்ப ரொம்ப உயரத்துக்கு ஏறிவிட்டது! காங்கிரஸுக்கு ஜே! என்று எங்கும் ஆரவாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்! காங்கிரஸுக்கு பொது ஜனங்களின் ஆதரவு எவ்வளவு இருக்கிறதென்பதையும், காங்கிரஸே தேசமகாசபை என்பதையும் இந்தத் தேர்தல் நன்ருகக் காட்டிவிட்டதய்யனே!

ஃ

இப்போது காங்கிரஸ் வீரர்கள் வெற்றிக்கொண்டாட்ட மீட்டிங்குகள் நடத்தலானுர்கள்! காங்கிரஸ் கொடி வெகுஉயரத்தில்மேலே ஏறிவிட்டது! வெற்றிமேல் வெற்றி பெற்றுவிட்டது! இனி இந்தியா சட்டசபையிலே இந்தக் காங்கிரஸ் வீரர்களெல்லாம் சேர்ந்துகொண்டு ரொம்ப ரொம்பப் பேசப் போகிருர்களாம்! இப்போது ஸ்வராஜ்பம் கேட்கப்போகிற பேச்சுகளெல்லாம் ஒன்றுமில்லே! வேறு எந்தப் பேச்சுகளேயாவது தொட்டு இழுத்து மேலே போட்டுக்கொண்டு பேசுவதாயிருக்கலாம்! முன்பே ஸ்ரீமான் சித்தரஞ்சனதாஸ் இப்படியாய் காங்கிரஸ்காரர்களே இந்தியா சட்டசபையிலே நிறுத்திப் பேச்சுகள் பேசவிட்டு ஓய்ந்துபோன பழய சங்கதியைத்தான், இப்போது வெற்றி பெற்ற காங்கிரஸ் வீரர்கள் முழக்கப் போகிருர்கள்! இவர்களின் கைக்கு மேலாகவே நம்ம துரைத்தனத்தாரின் கைப்பலம் இருக்குமென்பதில் சந்தேகமேயில்லே! துரைத்தனத்தார் இந்தக் காங்கிரஸின் வீரர்களுடைய பேச்சுகளேக் கேட்டு ஒரு புன்னகை கொள்வார்கள்! அவ்வளவு தானே யொழிய, காங்கிரஸ் வீரர்கள் இந்தியா சட்டசபையிலே புகுந்து கனத்த வெற்றிபெறப் போகிற சங்கதி யொன்றும் இல்லே! ஆனாலும், காங்கிரஸின் பலத்தை இவ்வளவு இருக்கிறதென்று காட்டிக்கொள்ளலாம்! அப்படிப் பேசினேம், இப்படி இந்தியா சட்டசபையிலே பேச்சு வார்த்தைகளேக்கொட்டினேம் என்று பிரதாபம் பெறலாம்! தாங்களும் ஒரு பெருமை புகழ் கொள்ளலாம்! அவ்வளவுதான் நடக்கப்போகிற சங்கதி யானுலும், ஒரு சமயம் துரைத்தனத்தார் காங்கிரஸின் பொதுஜன பலத்தைக்கண்டு ஒரு புதிய மதிப்பு கொடுக்கும்படியும், காங்கிரஸின் வார்த்தைகளுக்குக் கொஞ்சமாவது செவி கொடுத்துக் கவனிக்கும்படியும் ஆனுலும் ஆகலாம்! அந்த ஒரு நன்மை மட்டும் கொஞ்சம் உண்டென்று விகடன் சொல்வேன்!

ஃ

இனி நம்ம தாதா காந்தியடிகள் இந்தத் தேர்தலின் வெற்றியைப் பற்றி என்ன சொன்னரு தெரியுமா? "ஆஹா! பேஷ்!" என்று ஒரு தலேயாட்டு ஆட்டினரு! அவருக்கு சென்னே ஸ்ரீ சத்திய மூர்த்தி ஒரு தந்தியனுப்பி, இனி நடக்கவேண்டியதற்கு யோசனே சொல்லும்படி கேட்டாரு! அதற்குக் காந்தி தாதா, தந்தி யடிப்பதிலே பல அணக்கள் வீண் செலவாகிறதென்றும், ஆனதால் கடிதம் எழுதியதாகவும் சொல்லிக்கொண்டு ஒரு கடிதம் அனுப்பினரு! காந்தி தாதாவின் செட்டுத்தனத்தைப் பார்த்தீர்களா? ரயிலிலே மூன்ரும் வகுப்பு வண்டியில் ஏறுகிறவராச்சுதே! காசு கஷ்டம் தெரிந்த தாதா தமது பதில் கடிதத்திலே,—

வேதாந்த ஞானம் ஒருவனுக்கு உண்டாக வேண்டுமானல், முதன் முதலாக "நித்திய வஸ்து விசார விவேகம்" (அதாவது. நிலேத்த பொருள் எது வென்று விசாரித்தறிதல்) வேண்டும்.

தனக்கு இப்படிப்பட்ட விஷடங்களிலே இப்போது ஆலோசனை சொல்வதற்கு நாட்டமில்லை யென்றும், ராஜீய விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்யும் சிரமத்திலிருந்து தான் விடுதலை பெற்றுக்கொண்டதாயும், இந்த விஷயங்கள் எவ்வளவு முக்கியமானாலும், தான் அதற்கு ஏற்ற மனிதராக இப்போது இருக்கவில்லை யென்றும்,—ஒரே யடியாய்த் தெரிவித்து விட்டாரு! காந்தி தாதா எதிலும் ரொம்ப கெட்டிக்காரராச்சுதே!

ஃ


கிடைசியாக சென்னை மாகாணத்தில் பதினொரு தேர்தல்களும் வெற்றியாக முடிக்க, மற்றொரு சின்ன தாதா ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் ரொம்ப பாடு பட்டிருக்கிறாரு! அவரது ஓயா முயற்சியே சென்னை மாகாண வெற்றிக்குக் காரணம்! தான் ஒரு அபேக்ஷகராக நிற்காமலும், அந்தப் பெருமையைத் தனக்கு வைத்துக் கொள்ளாமலும், மற்றவர்களை அபேக்ஷகராக நிற்க வைத்துத் தான் உழைத்த பெருமையை விகடன் கொண்டாடுகிறேன். பழய நாளில் ஸர் தியாகராஜ செட்டியார் தாம் மந்திரி ஸ்தானத்திற்கு நிற்காமல் ஒதுங்கி, மற்றவர்களை மந்திரிகளாக நியமித்துப் பூரித்த சங்கதிக்கு ஸ்ரீ இராஜகோபாலாசாரியார் இப்போது உதாரணமாகிறார்! இவர் பலே பக்கா சாமர்த்தியசாலியப்பா!

ஃ

எவ்விதமும் தனது மங்காத பெருமையைக் காங்கிரஸானது இந்தத் தேர்தலின் வெற்றியிலே பகிரங்கப்படுத்திக்கொண்டு உன்னதம் பெற்றதற்காகக் காங்கிரஸ்தேவியை விகடன் வாழ்த்துகிறேன்! பாரதமக்களுக்குக் காங்கிரஸின் பலமே பெரிய பலம் என்று எல்லோரும் அறிந்துகொண்டிருக்கிற சங்கதியிலே, இப்போதைய வெற்றி இன்னும் அதிகமான நம்பிக்கையை உண்டாக்கி விட்டது! இனிமேல் என்ன நடக்கப் போகிறதென்பதை என் நஞ்சான் குஞ்சான்கள் வெகு அக்கரையாய்க் கவனித்துப் பார்ப்பார்கள்! விகடனும் என் கோணைத்தடியைத் தூக்கி நிமிர்ந்து நீட்டிக்கொண்டு மேல் நிகழ்ச்சிகளைக் காண விழிப்பாய்க் காத்து நிற்கிறேன்! நன்மையாய் முடியின் எல்லாம் நன்றே! ராம்! ராம்! சுபம்! ஜு!! சுவாஹா!!!

செல்வப்பெருக்கு ஏற்படும் மார்க்கத்தைப்பற்றிக் கூறும் சாஸ்திரத்துக்கு ஆங்கிலத்தில் "பொலிடிகல் இகானமி" என்பர். பொருள் விளைவித்தல், செலவிடுதல் என்கிற இருவகையுண்டு. செலவில்லாமல் பொருள் விளைவினால் பிரயோஜனமில்லை. செலவிடுவதனால் தான் விளைவும் மேல் விருத்தியாகும். ஆகையால் விளைவும் செலவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவையாகும்.

நமது தேசத்தில் உடன்கட்டை ஏறுதல் என்ற வழக்க மிருந்தபோது, உடன் கட்டையேறவேண்டிய ஒரு ஸ்திரீயானவள் தான் அதற்கு மனப்பூர்மாய்ச் சம்மதிக்கிறாளென்பதை நிர்த்தாரணப்படுத்துவதற்காகத் தனது பந்து வர்க்கங்களுக்கு முன்பாக இருந்து தனது விரல்களில் ஒன்றை நெருப்பில் எரித்துக் காட்டினாலொழிய உடன் கட்டையேற விடப் படுவதில்லை யென்ற வழக்கம் இருந்து வந்தது.



கல்லா ஒருவன் குலமும் கோத்திரமும் நல்லதோ கெட்டதோ, கையில் நாலு துட்டிருந்தால் வெல்லமாய் எல்லோரும் அவனை நக்கிடுவாராம்!

பொய்யுடையொருவன் சொல் வன்மையினால் போலீசு கேஸையும் ஜெயித்து விடுவானாம்!

பூனைக்கில்லை தர்மகர்த்தாள் திருட்டுபோல! அச்சமும் நாணமும் ஆம்பிடையானிடமில்லை! நாளும் கிழமையும் நடுராத்திரியிலில்லை! எக்கம் கொண்டவனுக்கும், நீர் ரோகக்காரனுக்கும் இராத்திரியிலே நல்ல தூக்கமில்லை.

இத்தனை பிள்ளைகளையும் எப்படிப் பெற்றாய் மாதே? அவ்வப்போது ஆண்டவன் தரக் கையேந்தி வாங்கிக் கொண்டேன் ஐயனே!

அவர்கள் வீட்டிலே சாப்பிடுவோமே என்றதற்கு இன்னொருவர், அப்படியொரு வேளைபோய் புசித்துவிட்டால், எங்கே இன்னும் அதிகம் வந்து ஒட்டிக்கொள்வார்களோவென்று பயந்து, இப்போது அவர்கள் அடிக்கடி நம் வீட்டிற்கு வந்துகொண்டிருப்பதையும் அடியோடு விட்டு ஒதுங்கி விடுவார்களென்றாராம்!

தேடிய பணத்தை நிலத்தில் போடுவதா, பாங்கியில் வட்டிக்குப் போடுவதா எது லாபமென்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு; நில வருமானத்தைவிட பாங்கி வட்டி கொஞ்சம் அதிகம் வருமென்றாலும், நிலம் சாஸ்வதமாயிருக்கும்; பாங்கி அப்படி நிச்சயமில்லை, நாளைக்குப் பாங்கி முறிந்து விட்டால் நடுத்தெருவில் நிற்கவேணுமேயென்று பதில் சொன்னானாம்!

கோர்ட்டுக்குப் போய் வழக்கு முடிவதற்குள்ளே வாதியும் பிரதிவாதியும் ஸமரஸமாய்ப் போய்விடும்படியாக, இருவரும் ஒரே இடத்தில் பலநாள் கணக்கில் குந்திக்கொண்டிருப்பார்களாம்!

என் வீட்டிலே தினமும் பெண்கள் கூட்டம் போடுகிறார்களே, திண்ணை நிறையப் பக்கத்து வீட்டுக்காரியும், எதிர் வீட்டுக்காரியும், மூலை வீட்டுக்காரியும், சந்து வீட்டுக்காரியும் இன்னும் பலரும் உட்கார்ந்து பேச ஆரம்பித்து விடுகிறார்களே, அதை எப்படித் தடுப்பதென்று ஒருவர் விகடனைக் கேட்க, அந்த இடத்தில் நீபோய் உட்கார்ந்து காலை நீட்டி உன் சிடுமூஞ்சியைக் காட்டிக்கொண்டால் எல்லோரும் எழுந்து போய்விடுவார்கள், அப்படியும் போகாவிட்டால் ஒரு குடம் தண்ணீரைத் திண்ணையில் ஊற்றிவிடு, அதற்கும் போகாவிட்டால் அவர்களின் தலையிலே ஊற்று என்று பதில் சொன்னானாம்!

மெத்தை வீட்டுக்காரி தன் புருஷன் அறியாமல் சேர்த்திருக்கிற 26-ரூபாயைப் பக்கத்து வீட்டுக்காரி எப்படியோ அறிந்து மெதுவாக வட்டி தருகிறேனென்று பெற்றுக்கொண்டு போய்விட, அதே வீட்டிலிருக்கிற புருஷனுக்குத் தன் பெண்டாட்டி சேர்த்து வைத்திருக்கிற பணத்தின் மொத்தம் கொஞ்சமும் அறியமுடியாமலே போகிறதாம்!

அவளுக்கு ரவிக்கைபோடக்கூட அங்கேஒன்றும் காணாமற் இருக்கச்சே அதற்குள்ளேயே பெரிய மனுஷியாகிவிட்டாளே. அவள் பச்சைக் குழந்தையாச்சுதே என்று ராமு அம்மா சொல்ல, அதற்கு இனிமேலே தான் நாம் எல்லாம் சொல்லிக்கொடுக்க வேண்டுமம்மா என்று காமு அம்மா சொன்னாளாம்!

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்—

(600-ம் பக்கத் தொடர்ச்சி)

IV



கர்ணன் அனுப்பிய கடிதத்தைத் துரியோதனன் வாங்கிப் படிக்க, அதில், "அப்பா, தோழனே, நான் மகா பலசாலி, சத்துருக்களை ஜெயிக்கவல்லவன் என்று நம்பி, உன் தம்பிகளைவிட அதிக ஆதரவாய் நீ என்னைக் காப்பாற்றி வந்தாய்; நானோ உன் தம்பியைக் கொன்ற பீமசேனனைக் கொல்லத் திறமையற்றவனாயினேன். இனி புஜபலத்தினாலாயினும், கண்ணீரினாலாயினும் உனக்கு நேர்ந்த துக்கத்தை நீ போக்கடித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, வேறு வழியில்லை" என்று வெறுப்பாய் எழுதியிருந்தது. அதைப் படித்தவுடன் துரியோதனன், "சுந்தரகா, இதை உன் கையில் கொடுத்தபிறகு அங்கராஜன் செய்தது யாது?" என, "கவசத்தைக் கழற்றி வைத்துவிட்டு யுத்தம் செய்யச் சென்றார்." என்று சுந்தரகன் கூறினான். அரசன் சுந்தரகா நீ விரைவிற் சென்று, "நான் இதோ வருகிறேன், இருவருமாய்ப் பாண்டவர்களைக் கொன்றுவிட்டு, இறந்துபோன நமது பந்துக்களுக்குத் தர்ப்பணம் செய்து, பிறகு துக்கத்தினாலாவது ஸந்தோஷத்தினாலாவது இருவருமாய்ப் பிராணனை விட்டுவிடலாம்" என்று நான் சொன்னதாகச் சொல் என்று சொல்லிச் சுந்தரகனைக் கர்ணனிடம் அனுப்பினான்.

ஃ

சுந்தரகன் சென்றவுடனே, திருதராஷ்டிரனும் காந்தாரியும் சஞ்சயனுடன் ரதமேறி அங்கு வந்தார்கள். தம்பி மடிந்துபோன துக்கத்தினால் அவர்களைப் பார்க்க வெட்கி, 'மறைந்து கொள்ள வேண்டும்' என்று துரியோதனன் நினைத்தான். அப்படிச் செய்வது அனுசிதம் என்று சாரதி தெரிவிக்கவே அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

ஃ

திருதராஷ்டிரனும் காந்தாரியும் சஞ்சயனை நோக்கி, "சஞ்சயா, துரியோதனன் உயிரோடு இருக்கிறானா? இருந்தால் அங்கே எங்களை அழைத்துக்கொண்டு போ" என சஞ்சயன் அவர்களை அழைத்து வந்து, "இதோ துரியோதனன் இருக்கிறார்" என்று காட்டினான். இருவரும் தேரைவிட்டிறங்கித் தடவிக்கொண்டே சென்று தங்கள் குமாரனை அணைத்துத் தழுவினார்கள். அப்போதும் துரியோதனன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருக்கவே, "குழந்தாய், இப்படி நீ நம்மிடத்தில் மௌனமாய் இதுவரையில் ஒருநாளும் இருந்ததில்லையே;

சாமான்ய ஜனத்தின் மனத்தைத் தன்னிடத்தே இழுத்துக் கொள்வதுதான் பெரிய சக்தியாகும். லாபமடைகிறவனும் அவனே.

எங்களுடன் வார்த்தை சொல்லாமல் நீயே இப்படி உபேக்ஷை செய்தால், மற்ற துச்சாசனன் முதலியவர்களா எங்களை ஆதரிக்கப் போகிறார்கள்?" என்று கண்ணீர் பெருகப் பேசினார்கள்.

ஃ

'துச்சாதனன்' என்ற பேச்சைக் கேட்ட துரியோதனன் மிக்க விசன மடைந்து மாதா பிதாக்களை நோக்கி, "உங்கள் புத்திரர்கள் அனைவரும் நசிப்பதற்கு நானே காரணமாயிருக்கிறேன்; குலத்துக்குக் கோடாரியாய்ப் பிறந்த பெரும்பாவியான என்னை நீங்கள் பிள்ளையென்று அழைக்கிறீர்களே" என்று சொல்லிப் புலம்பத் தொடங்கினான்.

ஃ

அவர்கள் அதைக் கேட்டு, மகனைப் பலவிதமாய் சமாதானப்படுத்தினார்கள். பிறகு திருதராஷ்டன், "குழந்தாய் விசனப்படாதே; நீ ஒருவனாவது பிழைத்திருந்தால் போதும்; தெய்வம் நமக்குப் பிரதிகூலமாகிவிட்டது; இனிமேலாவது நீ இந்தப் போர்த் தொழிலை ஒழித்துவிடலாகாதா? தர்மபுத்திரனுடைய இஷ்டப்படி சந்தி செய்துகொண்டால் எல்லோர்க்கும் சுகமுண்டே" என்று சொல்ல, துரியோதனன், "அப்பா, நான் தம்பிமார்களுடனும், பீஷ்ம துரோணாதிகளுடனும், சுகமாயிருக்கையில் கிருஷ்ணன் நேரே சந்தி பேசியும் கேளாமல் மறுத்துவிட்டு, பீஷ்ம துரோணர்களும் தம்பிமார்களும் மடிந்தபின்பு சமாதானத்துக்குப் போனால், தன் பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே சந்தி செய்ய உடன்பட்டானென்று கேட்போர் சிறியார்களா? மேலும் இத்தருணத்தில் தருமபுத்திரன் ஜெயம்பெற்றிருப்பதால் அவன்தான் சந்தியாக ஒப்புவானா? இருவரும் சமமாயிருந்தாலல்லவோ சந்தியாகும். இப்போது நாம் தோல்வியடைந்திருக்கிறோமே" என்றான்.

ஃ

திருதராஷ்டிரன், "குழந்தாய், அப்படியல்ல, கேள்; தன் தம்பிகளில் ஒருவன் மரித்துவிட்டாலும், தான் பிராணனை வைத்திருப்பதில்லையென்று தர்மபுத்திரன் பிரதிக்கினை செய்திருக்கிறான்; யுத்தத்தில் வெற்றி தோல்விகள் நியதமல்லவாகையால் எப்போது எந்த அபாயம் நேருமோ என்று அவன் பயந்துகொண்டேயிருக்கிறான். ஆனதால், எப்போது அழைத்தாலும் சந்திக்கு வருவான்" என்று கூற, துரியோதனன், அவன் தன் தம்பிமார்களில் ஒருவன் உயிரிழந்தாலும் சகிக்கமாட்டேனென்கிறான்; நான் என் நூறு தம்பிமார்களையும் சாகக் கொடுத்துவிட்டுப் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமோ? சரி சரி, இது நன்றாயிருக்கிறது! இது ஒருபோதுமே சரிப்படாது" என்று மறுத்துவிட்டான்.

ஃ

இதற்குள் யுத்தபூமியில் ஒரு பெரிய கலகல சத்தம் கேட்டது. இதென்ன என்று எல்லோரும் மயங்கி நின்றார்கள். "தந்தாய், இப்போது நமக்கு நல்லகாலமில்லை; இன்னும் ஏதாவது துயரமான சமாசாரம் காதில் கேட்பதற்கு முன்னமே நான் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று நினைக்கி

"பர"—"ஸ்வ" அதாவது அன்னியம்—சொந்தம் என்பவை, முற்றிலும் ஒன்றுக்கொன்று விரோதமானவை. "சத்" "அசத்" அதாவது "ஸ்வ" "பர" என்ற இரண்டுக்கும் ஒழியாப் போராட்டமுண்டு.

றேன்; உத்தரவு கொடுக்கவேண்டும்'' என்று துரியோதனன் கேட்க, தகப்பனார், "குழந்தாய், சற்று நில், நீ நிச்சயமாய் யுத்தத்துக்குப் புறப்படுவதாயிருந்தாலும், பாண்டவர்களை மறைவாய்க் கொல்லும்படி ஏதாவது உபாயம் செய்கிறாயா?'' என்றான். அதைக் கேட்ட துரியோதனன் வெறுத்து, "ஐயோ! நமது பந்துக்களையெல்லாம் நமது கண் முன்னே அவர்கள் கொன்றிருக்க, அவர்களை நாம் மறைவாய்க் கொல்லப் பார்ப்பது அபகீர்த்திக்கு இடம்; அப்படிப்பட்டது அவர்கள் ஏதாவது செய்திருந்தாலும் நாமும் அந்த அதர்ம யுத்தம் செய்யவேண்டுமோ? தெய்வானுகூலத்தால் காரியம் ஆகவேண்டுமேயல்லது நம்முயற்சியில் என்ன இருக்கிறது?'' என்று உரைத்தான்.

ஃ

இதற்குள் பெருங் கூச்சலாய் ஓர் இரைச்சல் கேட்டது. சல்லியன் அர்ச்சுனனது பாணங்களினால் அடிபட்டுக் குதிரைகளின் கடிவாளக் கயிற்றை விட்டு வெறுந் தேருடன் கண்ணுங் கண்ணீருமாய்த் திரும்பி விட்டான்; குதிரைகள் தேரை இழுக்கச் சக்தியில்லாதிருந்தும் பழக்கத்தினால் இழுத்துக்கொண்டு ஓடுகின்றன. இந்தத் துயரமான செய்தியை நாம் எப்படி அரசனுக்கு அறிவிக்கிறதென்று பயந்து மௌனமாயிருக்கக் கூடிய சமயம் இதுவன்று; உடனே நடந்த செய்தியைத் தெரிவித்து மேல் நடக்கவேண்டியதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்'' என்று யாரோ சொல்லிய வார்த்தையைக் கேட்கவே, அரசன் அதன் உண்மையைத் தெரிந்துகொண்டு வரும்படி தன் சாரதியை அனுப்பினான். அவன் போய் விசாரித்து வந்து, கர்ணன் இறந்து போனதையும், அவனது சவத்தின்மேல் குந்திதேவி 'மகனே, மகனே'' என்று அலறி விழுந்து புலம்பியதையும், கர்ணன் குந்திதேவியின் முதல் குமாரன் என்று வெளியானதையும் அறிந்து வந்து தெரிவிக்க, அதுகேட்டுத் துரியோதனன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். ஸஞ்சயன் சீதோபசாரம் செய்தான்; காந்தாரி தேறுதல் சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

ஃ

யார் எவ்வளவு சமாதானப்படுத்தியும் கேளாமல் துரியோதனன் கர்ணனை நினைத்துக்கொண்டு பலவாறு புலம்பி மூர்ச்சையடைந்தான். மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடனே, அருகில் நின்றிருந்த சகுனியை நோக்கி, "கடைசியில் கர்ணன் குந்தியின் மகனாய்விட்டான்; நாடாண்டதும் பாண்டவர்கள் என்கிறார்கள், காடாண்டதும் பாண்டவர்கள் என்கிறார்கள்; சகுனிமாமா! நாம் என்னத்தை ஆண்டோம்?'' என்று ஏங்கிக் கூறினான். பிறகு கர்ணனைக் கொன்ற அர்ச்சுனனைக் கொன்றுதான் மறு காரியம் பார்ப்பதென்று கோபாவேசங்கொண்டு போர்க்களத்திற்குப் பிரயாணப்படச் சித்தமாயினான். அத்தருணத்தில் பீமனும் அர்ச்சுனனும் ஒரே ரதத்தில் ஏறிக்கொண்டு துரியோதனனைத் தேடிக்கொண்டு வருவதாய் அவனுடைய தேரோட்டி வந்து சொல்ல, ஆயின், அவர்களை அழைத்துவா என்றான். அவன் உடனே பீமார்ச்சுனர்களிடம் சென்று, துரியோதன மகாராஜா தம்

சில சமயங்களில் ஒருவருடைய கோபத்திற்கு எதிர் நின்று அவர்களைத் தாக்குவதைவிட, அதனின்றும் விலகி நிற்றலே நமக்கு ஸாதகமாருக்குமென்பதற்கு அநேக அத்தாட்சிகளுள்ளன.

தாய்தகப்பன்மாருடனே இந்த ஆல மரத்து நிழலில் இருக்கின்றார் என்று கூறினன்.

ஃ

அர்ச்சுனன் அதுகேட்டு, இழவர்கள் இவ்விடத்திலிருப்பதால் நம்மைப் பார்த்தவுடனே அவர்களுக்குத் துக்கம் மிகவும் அதிகமாகுமாதலின், இப்பொழுது நாம் அங்கே செல்லக்கூடாதென்று சொல்ல, பீமன், தம்பி, அப்படியன்று; சமீபத்தில் வந்த மட்டும் பெரியோர்களைத் தரிசியாது போவது நல்லதன்று; சமீபத்திற் சென்று நாம் செய்த காரியத்தையும் பெயரையும் சொல்லிக்கொண்டே நமஸ்காரம் செய்யவேண்டுமென்று உரைக்க. இருவரும் தேரை விட்டிறங்கிக் கிட்டப் போனார்கள். "தமது குமாரனுக்குப் பரம ஸகாவாகிய அங்கராஜனைக் கொன்ற அருச்சுனன் யான் வந்தனம் செய்கிறேன்" என்று சொல்லி அர்ச்சுனனும், "தம் குமாரர்கள் அனைவரையும் கொன்று துச்சாஸனன் உதிரத்தைக் குடித்து மதித்து இருக்கிற பீமன் யான் வந்தனம் செய்கிறேன்" என்று சொல்லிப் பீமனும் நமஸ்காரம் செய்தார்கள்.

ஃ

அதைக் கேட்டுத் திருதராஷ்டிரன், "அடா மூடா பீமா நீ என்னவோ வீணே பிதற்றுகின்றாயே, யுத்தத்தில் பகைவரைக் கொல்வதும் அவரால் மாள்வதும் ராஜகுலத்தில் பிறந்தவர்களுக்கு இயற்கையே; நீ புதிதாய் பெருமை சொல்லிக்கொள்ளும்படி இப்போது செய்ததொன்றும் காணேம்" என்று கடுத்துச் சொல்ல, பீமன், "மஹா பிரபுவே, தாம் வேறெண்ணங்கொண்டு அடியேங்களிடத்தில் கோபம் செய்யலாகாது; ஆதிமுதல் எல்லாக் காரியங்களுக்கும் தாம் ஸாக்ஷியாயிருந்தது பற்றித் தமக்கு இதையும் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னபடியேயல்லது கர்வமாய்ப் பெருமை பாராட்டிச் சொன்னபடியல்ல" என்றான்.

(இன்னும் வரும்.)

கேட்டதும் உதவுதல்.

எந்த சமயத்தில் எதைக் கேட்பினும் அந்த உதவியை விசுவாசத்துடன் செய்யக் காத்திருப்பவர் சிலர் உண்டு. பணம் கடன் கேட்பின், தங்கள் கையிலில்லாவிடினும் எங்கேனும் பெற்று வீட்டிற்குக் கொணர்ந்து தருவர். ஏதாவது சாமான் வேண்டுமெனில் தங்கள்பேரில் கணக்கு எழுதச் செய்துவிட்டுப் பெற்று வந்து கொடுப்பார்கள். இப்படியே எந்த அவசர சமயத்திலும் உபகரிப்பார்கள். மனம் பொருந்தி ஒன்றுபட்டுப் போன இடத்தில்தான் இவ்விதம் உதவச் சித்தம் துணிகிறதென்பதும் ஒரு ரகசியம்.

ஒரு பெண் தன் உறவினரின் வீட்டுக்கு வந்தபோது, அவ்வுறவினர் "பத்து வருஷங்களுக்கு முன்பு நான் உங்கள் ஊருக்கு வந்திருந்தபோது நீ ஒரு கண்ணாடி விளக்கைக் கைதவறி உடைத்ததற்காக உன் கணவன் உன்னை ஓங்கி ஓங்கி அடிக்கவும், நான் அதைக் கண்டு தாளாமல் மறுதினமே புறப்பட்டு வந்துவிட்டேனே, ஞாபகமிருக்கிறதா" என்று வினவ, அப்பெண்ணும் புன்னகையுடன் "ஆம், நினைவிருக்கிறது" என்றாள். வருத்தமான சம்பவமொன்றைப் பல வருடங்களானபோதிலும் மறந்துவிடுவதற்கில்லை.



ஜலஜாக்ஷியின் பிரேமை.

என் கதையை உங்களுக்குக் கொஞ்சம் சொல்லுகிறேன். நானொரு ஸ்திரீ. என் தந்தை சிறிய தேசத்துக்கு அரசன். வரப்பிரஸாதத்தால் என்னைப் பெற்றார். எங்கள் நாட்டில் ஸ்திரீ புருஷபேதமில்லை. இரண்டு பேரும் ஸமத்வமுள்ளவர்கள். ஸ்திரீ புருஷர்கள் வேலை செய்தாலொழிய ஆகாரம் கிடைக்காது. அரசனும் அவன் மனைவியும் தங்களுக்குத் தகுந்த தொழில் செய்தாலன்றி அவர்களுக்கு ராஜ்ய பதவி நிலைப்பதருமை. புருஷன் ஸ்திரீயைக் கண்டிக்கக்கூடாது. ஸ்திரீ அவனை அதிகாரம்செய்து ஆக்கினைக்குட்படுத்தலாம். சுருக்கிச் சொன்னால் அத்தேசத்தில் ஸ்திரீகளுக்கே அதிக ஸ்வதந்திரமெனலாம் என் தந்தையின் அரசாக்ஷியில் ஸ்திரீ ஸ்வாதந்திரியம் அதிகரித்தது. நாளுக்குநாள் பெண்கள் பதியென்னும் மரியாதையைக்கூட மறந்து புருஷர்களை ஹிம்ஸிக்கலாயினர். ஒவ்வொரு ஸ்திரீயாலும் அகால மரணமடைந்த புருஷர்களுக்கு அளவில்லை. ஸ்திரீ ஸமூகங்களே அதிகமாயின. எங்கே பார்த்தாலும் அவர்களின் கோலாகலம்.

ஃ

இதன் மத்தியில் எனக்கு யௌவனம் வந்தது. புது உருவில் தோன்றினேன். என் உடைகளும் மாறின. என் சிறிய கை காப்பும் கொலுசும் பெரியதாகச் செய்து போடப்பட்டன. சொக்காய்க்குப் பதிலாக தாவணியும் சேலையும் என் இடுப்பைச் சுற்றிக்கொண்டன. பெண்களாய்ப் பிறந்தவர்கள் ஒரு நிலத்தைப் பயிரிட்டு அதில் கிடைக்கும் வரும்படியைக்கொண்டு ஜீவிக்க வேண்டும். ஆண்மக்களும் பூமியில் பயிர்செய்து தங்கள் உதரத்தைப் போஷணை செய்யவேண்டும். அன்னிய தேசத்தார் எவரேனும் எங்கள் ஊருக்கு வந்தாலும், அவர்களுக்கும் ஒரு குறித்த நிலம் கொடுக்கப்படும். அந்த நிலத்தில் அவர்கள் உழைத்துப் பயிர்செய்ய வேண்டும். நிலத்தின் விளைவில் ஆறில் ஒரு பாகம் இராஜாங்கத்தைச் சேரும். நிலம் இல்லாதவர்களே எங்கள் நாட்டில் இல்லை.

ஃ

நான் இராஜ குமாரியாயிருந்தும், எனக்கும் பயிரிடும் தொழில் போகவில்லை. என் பங்குக்குக் கிடைத்த பூமியை நான் எற்று சரீர சிரமத்துடன் கொத்தி வெட்டிப் பயிர் செய்தேன். 'எனக்கு நீலவேணி என்றொரு தோழியுண்டு. அவளும் தனக்குக் கிடைத்த நிலத்தில் நன்றாக உழைத்து விர்த்தி செய்திருந்தாள். வருஷம் ஒருமுறை அரசர் பரீக்ஷிக்க வருவார். அக்

காலத்தில் எல்லோரும் கும்பலாய் நில்லாமல் தங்கள் நிலத்தில் இருந்து கொண்டு மன்னனைக் கண்டு மரியாதைசெய்து அழைத்துச்சென்று பயிர் பூமிகளைக் காட்டவேண்டும். அரசனும் பரீக்ஷகர்களும் வியவசாயத்தைப் பார்வையிட்டுக் குறித்துக் கொள்வார்கள். கடைசியில் ஒருநாளை நிச்சயிப்பார்கள்.



அந்நாளில் தீர்மானம் சொல்லப்படும். யாருடைய பூமி பயிராகவில்லையோ அவர்களைக் கையிலாகாதவர்களென்று நினைத்து சிக்ஷை செய்வார்கள். சிக்ஷையாவது ஒரு வாரமோ மாதமோ சிறையிலிட்டு உப்பு குறைந்த சாதத்தையிடுவார்கள். சிலருக்கு அடிகளும் கிடைக்கும்.

ஃ

நான் பயிரிட்ட வருஷத்தில் பரீக்ஷை நடந்தது. எல்லா நிலங்களையும் என் தந்தையும் மற்றவர்களும் பார்த்தார்கள். தீர்ப்பு சொல்லும் நாள் வந்தது. நானும் என் தோழி நீலவேணியுமாக ஆஸ்தானத்துக்குச் சென்றோம். ஒவ்வொருவரும் வயிற்றில் திகிலோடும் அரசனைப் பார்த்தார்கள். அநேகருக்கு விடுதலையாயிற்று. சிலருக்கு ஸாதாரண சிக்ஷை கிடைத்தது. பலருக்கும் பரிசளிக்கப்பட்டன. கடைசியில் ஒரு மனிதனும் நானும் விசாரிக்கப்பட்டோம். அம்மனிதன் பார்வைக்கு அதிஸுந்தரன். தேககாந்தியும் சரீர அமைப்பும் முகவிலாஸமும் வெகு இன்பத்தைத் தந்தன. சுகுணவானுயும் காணப்பட்டான். அவன் சரியானபடி உழைக்கவில்லையென்றும், சோம்பேரியென்றும், வியவசாயமே பிரதான லக்ஷியமாகக் கொண்ட நாட்டில் இவன் இருப்பது தேசத்துக்குக் கெடுதிசெய்யுமென்றும், ஆகையால் இரும்புக் கம்பிகளைக் காய்ச்சி சரீரத்தில் சூடுபோட வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

ஃ

தண்டனை யடைந்த மனிதனைப் பார்த்தேன். அவன் முகத்தில் வியஸனக்குறியில்லை. ஸந்தோஷ முகத்தோடு நின்றான். எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. நான் ஸுந்தர புருஷனுடைய செய்கையைக் கண்டு பிரமித்தேன். கடைசியில் என் விசாரணை வந்தது. நான் சிரத்தையோடு உழைத்திருப்பதாயும், நிலம் வெகு நன்றாகப் பயிர் செய்திருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டு, அவ்வருஷத்தில் வெகுமதி யடைந்தவர்களுக்கெல்லாம் முதன்மையாக என்னை எடுக்கப்பட்டு உயர்தரமான ஸன்மான மளித்தார்கள். எல்லோரும் என்னைக் கொண்டாடி மரியாதை செய்து சிற்றரசியென்று ஜயத்வனி புரிந்தனர். எனக்கு இதில் மனம் செல்லவில்லை; நான் ஆநந்தப்படவுமில்லை. என் மனமெல்லாம் ஸௌந்தர்ய புருஷனிடம் சென்றிருந்தது. அவன் கஷ்டத்தை நீக்க உபாயமில்லையா என்று யோசித்தேன். என் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் சொரிகின்றது. அங்குள்ளவர்கள் என் துக்கத்தைக் கண்டு காரணத்தைக் கேட்டனர். நான் பிரதி சொல்லவில்லை.

ஃ


என் தந்தையும் ராஜகார்ய நிர்வாஹகர்களும் ஸுந்தர புருஷனைப் பார்த்து, "நீ ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டியதுண்டா?" என்று வினவினர். ஸுந்தர புருஷன், தான் இத்தேசவாஸியல்லவென்றும், இந்நாட்டுக்குள் ஆறு மாதங்கட்குமுன் பிரவேசித்தவுடன் தனக்குப் பயிரிட நிலம் தரப்பட்டதென்றும், தான் வந்த காரியம் முடிந்ததால் மறு வாரத்தில் தன் சொந்த தேசத்துக்குச் செல்லும்படியாயிற்றென்றும், ஆறு மாதங்களுக்குப் பிறகு இப்போதே திரும்பி வந்திருப்பதாயும், இந்நாட்டைச் சேர்ந்த



ஸ்திரவாஸியாக இல்லாமல் தேச ஸஞ்சாரியாக இருக்கும் தன்னை ஹிம்ஸிப்பது தகுதியல்லவென்றும் புகன்றான். அரசன் உன் வார்த்தையை உண்மை என்று கூற இங்கு எவரேனும் கௌரவமான ஸாக்ஷிகள் உண்டா என்றார். ஸுந்தர புருஷன் இத்தேசத்துப் பட்டமகிஷியே எனக்கு சாக்ஷி என்றான். அரசர் வியப்புடன் என் மனைவியான ராணியையா ஸாக்ஷியாக வைக்கிறாய்; உனக்கு அவளை எப்படித் தெரியும் என்றார். இன்னும் தங்களின் அரண்மனையிலிருக்கும் நீலவேணியும் எனக்கு ஸாக்ஷி பகர்வாள். தங்களின் ராணியை நான் எத்தனையோதரம் என் பாலபருவத்தில் முத்தமிட்டிருப்பதால், அதன் மூலமாக எனக்கு சொந்தம் என்று ஸுந்தர புருஷன் நவின்றான். அரசர் இன்னும் அதிக ஆச்சரியத்துடன் என் ராணியை முத்தமிட்டிருக்கிறாயா? உன் பால பருவத்தின் வரலாற்றைத் தெரிவி என்றார்.

ஃ

ஸுந்தர புருஷன்:—"அரசே, நான் வஸந்தபுரத்து மன்னரான ராமவர்மரின் ஏக புத்திரன். என் பெயர் பிரகாச சந்திரன். எனக்கு ஒரு தங்கையுண்டு. அவளது எட்டாவது பருவத்தில் ஒரு ஸம்பவம் நிகழ்ந்தது. அந்யதேசவாஸியான ஒரு ஜோதிஷ பண்டிதர் இரண்டு ஸ்வர்ண வளையல்களை என் தந்தையிடம் கொடுத்து, அது எவருடைய கைக்குச் சேருகிறதோ அந்த ஸ்திரீ ரத்நம் உலகத்தில் சிரேஷ்டதரமான பதவியை வகிப்பாள், அவளை விவாகம் செய்துகொள்வோன் மகா பாக்கிய ஸம்பன்னனாக இருப்பான் என்று உரைத்துச் சென்றார். என் தந்தை அத்தகைய ரமணீமணியைத் தானே மனைவியாகக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார். வளையல்கள் மிகப் பெரிதா யிருந்தன. அரசருக்கு மனைவியாகவேண்டுமென்ற ஆசையால் எத்தனையோ ஸ்திரீகள் அவ்வளையல்களைத் தங்களின் கைகளிலிட்டுப் பார்த்தனர். எவருக்கும் அது பொருந்தாமல் கையிலிருந்தும் கீழே விழுந்துவிட்டன. அவர்களின் கைப்பெருமனைவிட வளையல்கள் மிகப் பெரியதா யிருந்தன. இவ்விதமிருக்கையில் என் தங்கை அங்கு வந்து அந்த வளையல்களைத் தான் அணிந்துகொண்டு பார்த்தாள். மிகப் பெரியதா யிருந்த அவ்வளையல்கள் எவ்விதமோ சிறுத்துப்போய், என் தங்கையின்



கைகளுக்குச் சரியாகப் பொருந்தி விட்டன. இதை என் தாயார் கண்டு அச்சத்துடன் அதைக் கழற்ற முயன்றார். முடியவில்லை. இதற்குள் என் தந்தை அங்கு வந்து இதைக் கண்டு ஆச்சரிய பரவசத்துடன் இவளையே நான் விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்றார். எங்கே யாவது இந்த அநியாயம் உண்டா என்று என் தாயார் அவரைக் கண்டித்தார். தந்தையோ வளையல்களின் சக்தி மஹா பெரியதென்று கண்டபடி உளறினார். அவருக்குப் புத்தி தடுமாறிப்போயிற்று. சில காலமாக அவருக்குக் கொஞ்சம் பைத்தியமுமிருந்துவந்தது. அதனால் அவருக்குத் தான் சொல்வது அக்கிரமமென்று தோன்றவில்லை. என் தாயார் மிக்க வியாகூலத்துடன் என் தங்கையை என் தந்தையின் உடன்பிறந்த ஸகோதரியான தங்கள் மனைவியிடம் விட்டு விட்டு வரும்படியும், தங்கள் குமாரன் ஜெயந்தசேனனுக்கு அவளை மணமுடித்துக்கொள்ளும்படியும் தெரிவித்து, அதிரகசியமாய் என்னையும் தங்கையையும் இந்த தேசத்துக்கு அனுப்பி வைத்தார். நான் தங்களின் அரண்மனைக்கு ரகசியமாக வந்து தங்களின் தேவியிடம் யாவற்றையும் கூறி, தங்கையை ஒப்புவித்து உடனே என் தந்தையிடம் சென்றுவிட்டேன்.

ஃ

என் தந்தைக்குப் பைத்தியம் முற்றிவிட்டது. இராஜ்ய காரியங்கள் பாழாயின. என் தங்கையை மணக்கவேண்டுமென்று பிடிவாதம் செய்தார். அவளை எங்கும் காணாதிருக்கவே, அவளைத் தேடிப்பிடிக்கும்படி பலரை ஏவினார். எல்லோரும் என் தாயாரின் பக்கத்திலிருந்தனர். என் அன்னையே ராஜ்ய காரியங்களை நிர்வகித்து அரசுசெலுத்தலானார். என் தந்தை மிக்க நோயில் கிடந்து பத்து வருஷங்களுக்குப்பின் சென்ற வருஷத்தில்தான் பைத்தியம் தீர்ந்து சுய ஞானம் திரும்பி தன் குமார்த்தியின் நினைவு உண்டாகி, தான் சித்தப்பிரமையால் அறியாமற் செய்த காரியத்திற்கு நாணமுற்று தன்னையே நொந்துகொள்ளலானார். என் தாயார் என்னை இங்கு அனுப்பி என் தங்கையின் க்ஷேமத்தை அறிந்து வருமாறு ஆக்ஞாபிக்க, அவ்விதமே ஆறுமாதத்திற்கு முன்பு இங்கு வந்து ரகசியமாய்த் தங்கள் தேவியாரான என் அத்தையைக் கண்டு என் தங்கை நீலவேணி சுகமாயிருப்பதையறிந்துகொண்டு மறுபடியும் என் நாட்டிற்குச் சென்றேன். என் மாதா என் தங்கையை அழைத்துவருமாறு கூறியதாலும், என் தந்தை தன் குமாரியைக் காண மிக்க விருப்பத்தோடிருந்தாலும் மறுபடியும் புறப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். இங்கேயே நான் ஸ்திரவாஸமாயில்லாததால் எனக்குக் கொடுத்த நிலத்தைப் பயிரிடக்கூடவில்லை. நான் வந்து சென்ற விஷயங்களை என் தங்கை அறியாள். இதுவே என் வரலாறு. தங்கள் பிரிய குமார்த்

நாமும் ஒரு "ஜாதி" (Nation)யாக இன்று விளங்காமற்போனாலும், நாளை அவ்வாறு கூடிவிடலாம் என்ற ஞானம் பிறந்து விட்டது.

தியை எனக்கு விவாகம் செய்து கொடுப்பதானால், எனக்கு எத்தனை சூடுகள் இட்டாலும் ஸகித்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்றார்.

ஃ

என் தந்தை இதைக் கேட்டுப் பிரமித்தார். என் தந்தைக்கும் ராம வர்மருக்கும் முன்பு குடும்ப சச்சரவில் ஏதோ விரோதமிருந்ததால் பரஸ்பரம் வார்த்தையற்றுப்போய், இதுவரையில் ஒருவரையொருவர் சந்திக்காமலே யிருந்துவிட்டனர். "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்றபடி இடையில் பல வருஷங்கள் சென்றுவிடவே, முந்திய மனஸ்தாபங்களும் மறைந்து போவதாயின. என் தந்தை ஸுந்தர புருஷரின்மீது குற்றமில்லையென்று கூறி, அவருக்கு விதித்த சரீர தண்டனையினின்றும் அவரை விடுவித்து, தமது ஸிம்ஹாஸனத்தின்பக்கம் உட்காரவைத்துக்கொண்டார். இதைப் பார்க்கவே என் கண்கள் குளிர்ந்தன. முகம் மலர்ந்தது. அகம் மிக களித்துப் பொங்கியது. என் தோழியின் தமயனே அந்த ஸுந்தர புருஷரென்று அறியவே என் ஆநந்தம் இருமடங்காயிற்று, என் தோழி நீலவேணி தன் தமயனைக் கண்டு ஒருபுஜம் இருபுஜமாய் பூரித்தாள். தந்தையின் பிரிவுக்கு ஆஸ்பதமாயிருந்த மந்திர வளையல்களை நீலவேணியின் கைகளிற் கண்டு வியந்தேன். அது உண்மையிலேயே வெகு விசித்திரமான வளையல்கள் தான். இது நிகழ்ந்த மறு வாரத்தில் ஸுந்தரரான பிரகாஸ சந்திரர் நீலவேணியோடும் தனது நகரத்திற்குப் புறப்பட்டார். நானும் என் தந்தையும் மாதாவும் தமயனும் உடன் பிரயாணமானோம். பல வருஷங்கட்கு முன்பு பிரிந்தவர்கள் இன்று ஒன்றுகூடினர். தந்தை தன் குமார்த்தியைக் கண்டு புளகித மனத்தினராகித் தனது அறிவீனச் செயலுக்கு மன்னிக்கும்படியும், தான் சொந்த புத்தியோடும் செய்த காரியமல்லவென்றும் கூறி நீலவேணியை வேண்டினார். பிறகு நடக்கவேண்டியதென்ன? என் தமயனுக்கு நீலவேணியையும், எனக்கு நான் மனதிலே கோரிக்கொண்ட பிரகாஸ சந்திரரையும் மணமுடிப்பதெனத் தீர்மானித்தனர். எங்களின் விவாகங்கள் வஸந்தபுரத்திலேயே மகா வைபவமாய் நடந்தேறின. நான் பிரகாஸ சந்திரரின் அமிர்தமயமான ஹஸ்தங்களைக் கைப்பற்றும் பாக்கியத்தை யடைந்தேன். ஏதோ என் தோழிப்பெண் என்று நினைத்து வந்த நீலவேணி இவ்வளவு சொந்தக்காரியானாளா வென்று அதிசயித்த என் தமயனும் நீலவேணியை மணந்து மகிழ்ந்தான். நீலவேணி என் தமயனிடம் கொண்டிருந்த அந்தரங்கக் காதலும் சித்திபெற்றது. திடீரென்று கண்டு நான் மயங்கிய ஸுந்தர



புருஷரே எனக்குப் பர்த்தாவாக அமைந்தது பகவத் கிருபையேயாகும். இதுகாறும் பொறுமையுடன் என் சரிதையைக் கேட்ட உங்களனைவருக்கும் என் நமஸ்காரங்களை ஸமர்ப்பிக்கின்றேன். நானும் என் பதியும் மனோல்லாஸமாக இல்வாழ்வில் இருந்து வருகின்றோம். மங்களம்.

ஒரு சக்கிலியனின் தேசாபிமானம்.



"ஓ! அவன் தாழ்ந்த ஜாதியான்: ஆகையால் அவனைத் தொடக்கூடாது" என்று நினைக்கிற இழிந்த புத்தி நம்மில் வெகு பேருக்கு இருக்கிறது. இப்படிப் பழிக்கிறவர்கள், தாழ்ந்த ஜாதியார்களென்பவர்களே மிகு செல்வமுள்ளவர்களாய் அவர்களே அதிகமாக நிறைந்திருக்கிற ஊரில் வசித்தால், அப்பொழுது தங்களின் வாயை மூடிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடன் நேசித்தும் பழகுகிறார்கள். தாங்கள் அதிகாரம் செய்யமுடியாத இடத்தில் மகா சாதுக்களாய் உட்பட்டுப் போகிறார்கள். இப்படி நடப்பது சாஸ்திர சம்மதமா? அல்லது சமயத்துக்குத் தகுந்த தந்திரமா? மனிதர்களை இப்படித் தாழ்ந்த ஜாதியென்று இகழ்ந்து விலக்குவதும், ஒத்தாசை செய்யாமலிருப்பதும் மகா பாவம். கடவுளுக்கு எல்லோரும சரிதான். ஆகையினாலே, ஜாதி பேதத்தைப் பாராட்டாமல் யாவருக்கும் இரங்கி உதவவேண்டும். தாழ்ந்த ஜாதியார்களானாலும், ஏழைகளானாலும் யோக்கியமும் நன்னடக்கையும் உள்ளவர்கள் மரியாதைபெறத் தகுந்தவர்களே. "இட்டார் பெரியார்; இடாதார் இழிகுலத்தோர்." இடுகிறவர், இடாதவர் என்ற இரண்டே ஜாதிதான் உண்டு என்றார் பெரியோர்.

ஃ

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பு இங்கிலாந்தில் ஏழைகளுக்கு விசேஷமாய்ப் பள்ளிக்கூடங்கள் இல்லை. ஆகையினால், பெரும்பாலும் அவர்கள் படியாமலே இருந்தார்கள். அப்பொழுது அத்தேசத்தில் ஒரு சககிலியன் இருந்தான். அவனுக்கு எழுதப்படிக்கத் தெரிந்திருந்ததும் தவிர, யோக்கியனும் ஜனங்களுக்கு உபசாரியுமாக இருந்தான். ஏழைகள் இப்படிப் படியாமல் இருந்தை அந்தச் சக்கிலியன் அறிந்து, "எனக்கும் கொஞ்சம் படிக்கத் தெரியுமே; அந்தக் கொஞ்சத்தை என் ஏழைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது? நான் உட்கார்ந்து செருப்புத் தைத்துக்கொண்டிருக்கையில், அண்டை அயல்களில் உள்ள ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடம் படிப்பிக்கவும், அவர்களைப் படிக்கச்சொல்லிக் கேட்கவும் கூடுமே" என்று நினைத்து அப்படியே ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி ஏழைப்பிள்ளைகளைப் படிப்பித்து வந்தான்.

ஃ

ஒரு பையன் பாடசாலைக்கு ஓடுகிறான். இடையே அவனுக்கு அதிக தாகம் எடுக்கிறது. ஒரு மனிதன் அங்கு எதிர்ப்பட்டு மரத்திலேறி இளநீர் பறித்துப் போடுவதாகச் சொல்லுகிறான். அதற்கு ஆசைப்பட்டு அப்பையன் நிற்பானாகில், அன்று நடக்கும் பரீக்ஷைக்குக் காலத்தில் போகாமல், பரீக்ஷையே தவறி விடுகிறான். எப்போதுமே சிறிய நன்மைகள், சிறிய அநுகூலங்கள்—பெரிய நன்மை, பெரிய அனுகூலங்களுக்குத் தடைகளாகும்.



இந்தச் செய்தி வெளியில் பரவின வுடனே. வேறு சிலரும் பள்ளிக்கூடங்கள் அமைத்து ஏழைப் பிள்ளைகளைப் படிப்பிக்கத் தொடங்கினார்கள். இப்படியே நாளாவர்த்தியில் இங்கிலாந்து முழுவதும் ஏழைகளுக்குப் பள்ளிக் கூடங்கள் ஏற்பட்டன. பிறகு பெரிய கலாசாலைகள் தோன்ற ஆரம்பித்தன. ஆகவே, இந்தத் தேசோபகாரமானது ஒரு சக்கிலியனிலிருந்து உண்டாயிற்று. சக்கிலியன் என்றால் தாழ்வா? அவன் தைக்கிற செருப்பு நமக்கு அவசியமாயில்லையா? அதுவும் ஒரு அருமையான கைத்தொழிலே. அவனும் கடவுளின் குழந்தையே. நமது ஸகோதரனே.

அழகுக்கு உதவும், ஆபத்துக்கு உதவுமா?

நமது நாட்டின் தங்கம் யாவும் வெளிநாடுகட்குச் சென்று, பவுனின் விலையும் $22\frac{1}{4}$-ரூபாய் போலாகிவிட, இப்பொழுது தங்கக்கிலிட்டு நகைகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. ஆனால், இது புதிதல்ல, பழய சங்கதியே தான். ஜெர்மன் சில்வர் என்ற போலி வெள்ளியும், நான்கு தினங்கட்குப் பொன்போன்று பளபளப்புடன் விளங்கிப் பின் பித்தளையாகி மங்கிவிடுகிற போலித் தங்க நகைகளும் வெகு நாளைக்கு முன்னரே கண்டதுதான். இப்போது இவைகள் புதிய இங்கிலீஷ் பெயருடனும், புது உருவுடனும், புது மயக்குடனும் வெளிவரத் தலைப்பட்டிருக்கின்றன. இவற்றை வாங்கி ஏமாறவேண்டாம். சீக்கிரம் மங்கிப் பழய பித்தளையாவது நிச்சயம். அழகுக்காக எட்டு ரூபாய் கொடுத்து ஒரு கடியார கொலுசு வாங்கினால், பிறகு ஆபத்துக் காலத்திலே அரையணுவுக்கு விலை போகுமா வென்பதை யோசித்துப் பார்த்து இதற்குப் போட நினைத்த ரூபாயை வீணாக்காதிருப்பதே சரி. அப்படியே வாங்கி அழகுக்கு இட்டுக்கொண்டாலும், அது கிலிட்டு நகை யென்றே எல்லோரும் சொல்லுகையில், தங்க நகையென்று கௌரவம் காண்பித்துக்கொள்ள முடியாது. ஆபத்துக்குத் தங்க நகை பணமாக உடனே மாறி உதவுவதுபோல் இந்தக் கிலிட்டு நகை உதவாது. எப்போதும் பத்தினிக்குள்ள பெருமை, பத்தினிபோல் மயக்குகிற விபசார நாரிக்கு இல்லை.

சென்றமாதம்

புது அரசியல் திருத்தங்கள்:—

"ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடு" என்ற கதையாக, இந்தியர்கள் லார்ட் இர்வினிடத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கேட்கப்போக, அதன் பயனாக இப்பொழுது வெளிவந்துள்ள புது இந்திய அரசியல் திருத்தங்கள் தற்போதுள்ளதிலும் மிகக் குறைவான நிலையிலாகிவிட்டிருக்கின்றது. இந்தியர்கள் பிற்காலத்தில் ஸ்வராஜ்யமடைதற்கான எந்த ஒரு சந்துவழியும் இந்தப் புது அரசியல் திருத்தங்களில் காணக்கூடவில்லை. ஆங்கிலேயர் உதவியின்றி இந்தியர் ஜீவிக்க முடியாதென்ற கருணையுடனே இந்த அரசியல் திருத்தங்கள் அமைக்கப்பெற்று, ஏராளமான பந்தோபஸ்துகளும், அதிகாரங்களும் அரசினருக்கு வைத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு விசேஷ பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலைத் திருத்தச் சட்டசபைக்குச் சுதந்தரம் கொடுபடவில்லை. குடியேற்ற நாட்டு அந்தஸ்து தரும் பிரஸ்தாபனையே மறைந்துபோயுள்ளது. எல்லா முக்கிய விஷயங்களிலும் அரசினரின் ஆதிக்கமே நிலைத்து நிற்கும். வாய் வீரர்களான ஜனப்பிரதிநிதிகளின் பேச்சுகள் எந்த விதத்திலும் மதிக்கப்படும்படியாக இந்தப் புது திருத்தத்தில் ஒன்றையுங் காணோம். இந்தியர்கள் இந்தப் புது அரசியல் திருத்தங்களை எதிர்பார்த்துக் காத்து நின்ற ஆவலெல்லாம் "இலவங்காத்த கிளிபோல்" ஆயின. சாமான்யமான மனித சுபாவத்தை யநுஸரித்து இந்த அரசியல் திருத்தங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. சிரேஷ்டதரமான தேவ சுபாவத்தைத் தழுவி தெய்வீகமான காருண்ய உள்ளத்தோடும் இந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால், இந்தியா வேண்டாத அரசியல் திருத்தங்களான வடிவில் இது இருந்திராது. பிறரது நலத்திற்காகத் தனது நன்மையை விட்டுக் கொடுப்பதென்பது மனித சுபாவத்திற்கு சாத்தியமல்ல என்பதற்கு இந்த அரசியல் திருத்த அறிக்கை ஒரு உதாரணமாகும்.

இராஜகுமாரர் விவாகம்:—

"பல்லாண்டு பல்லாண்டாக வாழ்க" என்று வாழ்த்துகின்றோம். நமது மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்களின் நான்காவது புத்திரரான கெண்டு பிரபுவுக்கும், கிரேக்க ராஜவம்சத்தைச் சேர்ந்த பிரின்ஸஸ் மெரினாவுக்கும் 29—12—34-ல் லண்டனிலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் ஆபே என்ற தேவாலயத்தில் விவாகம் மிக்க வைபவமாக நடைபெற்றது. மணப்பெண்ணின் தந்தை கன்னிகாதானம் செய்து தந்தார். "கீழ்ப்படிந்து நடக்கிறேன்" என்று மணமகள் உறுமொழிகூற, கெண்டு பிரபுவும் உறுதிமொழிகூற, மணமகன் மணமகளின் விரலில் விவாக மோதிரத்தை உறுதியாக அணிந்ததும், காண்டர்பரி பெரிய பாதிரியார் "இருவரும் தம்பதிகளாகிவிட்டார்கள்" என்று அறிவிக்க, பின் பிரார்த்தனை கீதங்கள் பாடப்பெற்று விவாகம் சம்பிரமமாய்ப் பூர்த்தியாயது. வாழி பல்லூழி நீடூழி.

சித்திர விநோதங்கள்.

தேர்தலில் வெற்றி கண்டவர்.



காங்கிரஸினிடத்தில் ஜனங்களுக்குள்ள பக்தி சிரத்தை இந்தத் தேர்தலில் வெளியாய் விட்டது. எனக்காக ஜனங்கள் ஓட்டு கொடுக்கவில்லை. காங்கிரஸைக் கௌரவிக்கவே என்னைத் தெரிந்தெடுத்து வெற்றி பெற்றுவிட்டார்கள். காங்கிரஸே தேச மகாசபை. காங்கிரஸ் வாழ்க. காங்கிரஸிலிருந்து இப்போது விலகியுள்ளவர்களுக்கு உண்டான பெருமையெல்லாம், ஆதியில் அவர்கள் காங்கிரஸில் சேர்ந்திருந்து அதனால் பெற்றவைகளேயாகும்.

தேர்தலில் தோல்வியுற்றவர்.



தேச ஜனங்கள் எனக்கும் என் கீர்த்திக்குமே அதிகம் கௌரவம் வைத்துப் போற்றுகிறார்களென்றும், என்னையேதான் தெரிந்தெடுப்பார்களென்றும் நான் நம்பியது சரியல்லவென்று இந்தத் தேர்தலில் நான் அடைந்த தோல்வி காட்டிவிட்டது. காங்கிரஸில் சேர்ந்து அதன் மூலமாகவே பெருமையடைந்து, பிறகு காங்கிரஸையே நான் உதைத்துத் தள்ளிய பாவத்தின் பலன் இதுவேயோ! பழப் புகழ் மங்கியதே! ஈசா! எவ்வளவு பணச்செலவு!!

ஃ

ஒரு பிரஸங்கத்தின் முடிவில் ஒருவர்—"நான் செய்யும் ராமோபதேசம்"—என்று கூறினால், அதற்குக் "கடைசியான புத்திமதி" என்று அர்த்தமாகும்.

ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய பலவிதப் பொருள்களிலும், ஒரே தாய் வயிற்றிலிருந்து தன்னுடைய இரத்தம் சரீரம் போலவே இன்னொரு சரீரமாகிய சகோதரம் என்னும் பொருள் கிடைப்பது மெத்த விசேஷம்.


ஒண்டிக் குடித்தனமாய்த் தூர யிருந்தவர்.

என் ஸம்பாத்திய காலத்திலே வெளியூரில் என் மனைவி மக்களோடு வஸித்தது நல்லதாயிற்று. முன்பு நான் ஏழையாயிருந்தபோது என்னை ஒதுக்கியவர்களெல்லாம் இப்போது என் ஐசுவரிய ராசிகளைக் கண்டு என்னைநெருங்கிக் கொண்டாடிச்சேர வருகிறார்கள். இதில் நான் மயங்க மாட்டேன். என் குமார்த்திக்கும் குமாரனுக்கும் செல்வப்பெருக்குள்ள தூரமான இடங்களில்தான் சம்பந்தங்கள் செய்து கொள்வேன். இந்தப் பழய பந்துக்கள் வேண்டாம்.



ஃ

பந்துக்களுடன் கூடிச் செலவிட்டு வாழ்ந்தவர்.



நான் எவ்வளவோ பணம் தேடியும் எல்லாம் செலவே ஆயிற்று. ஓயாத பந்துக்களின் கூட்டம் என் வீட்டில் சேர்ந்துகொண்டு நன்றாகப் புசித்து, இப்போது என்னை நடுத் தெருவிலாக்கிவிட்டார்கள். என்னை இப்பொழுது எவருமே எட்டிப் பார்ப்பதில்லை. என் ஸம்பாதனையும் குறைந்துபோயிற்று. என் மனைவியும் மக்களும் மிக இளைத்து எலும்புக் கூடாகி நிற்கின்றார்கள். எனக்குள்ள கடன்களை நான் எப்படித் தீர்ப்பேனோ தெரியவில்லை. கடவுள் இரக்கம் வைத்தால்தான் உண்டு.

ஃ

நாம் நமது எதிரியின் வழிகளையும், உபாயங்களையும் கவனித்துத்தான், நம்முடைய வழிகளையும் உபாயங்களையும் தீர்மானிக்க முடியும்.

உங்கள் ஸன்மார்க்கத்தின் வலிமை குன்றிப்போகும் பக்ஷத்தில், உங்கள் வைதிக வழிகளும் ஆண்மைத்தனமும் குன்றிப்போகும் பக்ஷத்தில், இந்த மானிட வாழ்க்கையினின்றும் எப்படிக் கடைத்தேற முடியும்?



வடகலை தென்கலைப் போர்!

சாதிவித்தி யாசமிகுத் தோற்றுமைவிட்
டிந்தியா தவிக்கும்போது,
சோதிவட கலையுந்தேன் கலையுமெதி
ராடிநிற்குஞ் சூட்சிகண்டால்,
ஆதியண்ண மலைப்பரனை ஆறுகோண்டு
போக, மற்றயமர்தேய்வங்கள்
ஓதியசக் கரைப்போங்கற் கோப்பாரி
வைத்தகதை வோவ்வுந்தானே!

வடகலை தென்கலைப் போர்!

முக்கியமாக இருக்கவேண்டிய ஒற்றுமையைக் கைவிட்டு, ஜாதி வித்தியாசச் சண்டைகளே எங்கும் மிகுந்து இந்தியா தவிக்கின்றது. இந்த சமயத்தில் வைணவ (U) யூ—மார்க்கும், (Y) ஒய்—மார்க்குமான வடகலையும் தென்கலையும் சண்டையிட்டுக்கொண்டு நிற்கும் காட்சியானது, கோயிலிலுள்ள ஸ்வாமி விக்கிரகத்தைப் பிரவாகத்தில் ஆறு கொண்டு போய்விட, அதைக் கவனியாமலும், ஒற்றுமைப்பட்டு விக்கிரகத்தை எடுக்க நினையாமலும், கைவிட்டு முக்கியத்தை மறந்து போய், பூஜைக்காக வைத்திருந்த சக்கரைப்பொங்கலை யுண்பதற்கு ஒருவருக்கொருவர் எனக்கு உனக்கென்று சண்டையிட்டுக் கொண்ட கதைக்கொப்பாக உளது.

நாகபுரி முனிசிபல் கமிட்டியில 36-தேர்தல் ஸ்தானங்களுக்கு 140-அபேக்ஷகர்கள் நின்றனராம். பணக்காரர்கள் இவ்விதம் வெளி கௌரவங்களுக்குப் பணத்தை வாரிக் கொட்டிப் பூர்வ சொத்தைப் பாழாக்குகிறார்கள். ஒருவருக்குப் பெண் விசாரிக்கையில். பெண் வீட்டார் அவருக்கு என்ன வேலையென்று கேட்க, மாப்பிள்ளை வீட்டார் அவர் முனிசிபல் கவுன்ஸிலர் என்றுகூற, அதற்குப் பெண் வீட்டார் முனிசிபல் கௌன்ஸிலர் என்பது சம்பளமற்ற வேலையல்லவா; இருக்கிற சொத்தைச் செலவிட்டுக் கெடுகிற சங்கதியல்லவா; அத்தகைய ஆடம்பரக்காரருக்குப் பெண் தர முடியாது, அவர் செல்வமும் ஒரு நிச்சயமுள்ளதல்ல என்று கூறிப் பெண் தர மறுத்துவிட்ட சங்கதியுமுண்டு.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(639-வது பக்கத் தொடர்ச்சி.)

(Mrs. Neelakanta Sastri Rajammal.)

இத்தகைய ஸமாதானம் ஏற்பட்டு அடங்கிவிடும் குலப்பெண் தன்னை யறிந்தடங்கிய ஞானிக்கொப்பாவாள். அப்பொறுமை சுலபத்தில் யாருக்கு வரும்? அப்பெருமை வாய்ந்தவர்கள் பெய் யென்றால் மழையும் பொழியுமன்றோ? பதி சிசுருஷையைத் தவிரப் பெண்களுக்கு மேலான பாக்கியம் ஒன்று உண்டா? அவ்விதமான பாக்கியம் தனக்கு நீடித்திருந்தால் போதும் என்றிருந்தாலும், மனிதர்க்குச் சாவு நிச்சயம்; அது எப்பொழுது வேணுமானாலும் நேரலாம். அதற்குத் தாக்ஷிண்ணியம், சிபார்சு என்பதே கிடையாது. ஆகையால் நாம் பிறர் மனம் நோக நடப்பது கூடாது. நான் இன்றே இறந்தவளுக் கொப்பானேன். இருப்பவளாகப் பாவித்தாலல்லவோ துக்கம் சுகம்? எப்பொழுது என் கணவனுடைய இருதய பூர்வமான அன்பு பாகிக்கப்பட்டு என்னின்றும் பிரிந்து வேறிடத்தில் பாய்ந்து விட்டதோ, இனி நான் இருந்தென்ன? இரண்டும் ஒன்றுதான். ஆனால் என் புருஷன் அவளைப் பூர்ணமாக நம்பியிருக்கிறார். அவரை அவள் மோசம் செய்யாமல் இருக்கவேண்டும். கடவுளின் திருவுளச் சித்தம் எப்படி யிருந்தாலும் ஸகிப்பு என்ற ஒரு நலத்தையே எனக்குக் கடவுள் கொடுக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இவ்விஷயங்களெல்லாம் என் தாய் தந்தையர் அறியாமலிருந்தால் அதுவே எனக்கொரு திருப்தி என்று பலவித எண்ணங்களால், தான், அமிர்தவல்லியின் சாமர்த்தியம் தந்திரம் முதலிய ஜாலங்களைக் கடக்க அவளால் முடியாமலிருந்தது. நீலாவின் அடக்கமும் குளிர்ந்த நடக்கையும் எல்லாமறிந்தும், ஒன்றுமறியாப் பேதை போலவளிருப்பதும் கண்ட பத்மநாபன் அவளிடம் சிறிது பயமும் ஸங்கோசமும் கொண்டான். அமிர்தவல்லியிடம் சகஜமாயிருப்பதுபோல் நீலாவிடம் பேசக்கூட, அவனால் முடியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக நீலாவினிடமிருந்து தன்னை விடுவித்துக்

கொண்டான். இவை எல்லாம் அமிர்தவல்லிக்கு அமிர்தமாகவே யிருந்தது. நீலாவின் குழந்தையை அமிர்தவல்லி வசியப்படுத்திக் கொண்டாள். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில் என்பதைப்போல் அக்குழந்தை யாரிடமிருந்தாலும் சிரிப்பு ஒன்று தவிர வேறொன்றும் அறியாததாய் விளையாடிக்கொண்டிருந்தது. அமிர்தவல்லியோ அவ்வீட்டையும், அவ்வீட்டின் சிறு குழந்தையையும், அவ்வீட்டின் எஜமானனையும், மற்றுமுள்ள வேலையாட்கள் முதலிய யாவரையும் தன் மாயைக்குள், தான் அவ்வீட்டுக்கு வந்த சில நாட்களில் உட்படுத்திய பிறகு, இறுமாப்பென்னும் குணம் பேராசை என்னும் நெய்யால் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. பேதையாகிய நீலாவை எப்படியாவது ஒழித்து விடவே அவன் நெஞ்சம் வஞ்சகங்கொண்டது. நீலாவை எப்படி ஒழித்து விடுவது; என்னுடைய வாழ்வுக்கு இவள் குறுக்காக இருக்கிறாள்; அவள் அழகாலும் அடக்கத்தாலும் அவள் பேரில் திரும்ப விசுவாசம் கொண்டு விடுவான்போலிருக்கிறது; நடக்கைகளைக் கவனித்தால் அவளிடம் மிகுந்த தாக்ஷண்ணியம் வைத்திருப்பதாகவே தெரிகிறது. எள் ஸாமர்த்தியத்தாலும் நாகரிகத்தாலும் அவனை வசியப் படுத்தினேன். என் எண்ணம் ஈடேறியது. நான் இந்த வீட்டிற் கோர் சீமாட்டி போலவேயிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் தடையிருக்கிறது. அதையும் மெள்ளத் தந்திரத்தால் களையவேண்டும். அவளைக் கிளம்ப ஒட்டாமல் அடித்து வைக்கவேண்டும் என்று பல விதமாக மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தாள். ஐயோ பாவம்! ஏழை ஜானகியைக் கண்ட நீலாவுக்குத் தன்னிலை அவளிலும் தாழ்ந்து விட்டதாகத் தெரிந்தது. ஜானகி பிறஜனங்களால் இம்லிக்கப் பட்டாலும் தன் கணவனின் மனப்பூர்வமான முழு அன்பிற்கும் பாத்திரமுள்ளவளாகவே யிருக்கிறாள். அவர்களின் பிரியத்தைக் கலைக்க ஒருவராலுமாகாது. மற்ற எதுதான் அவளுக்குச் சங்கடமாகத் தோன்றும்? என்று அவள் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அமிர்தவல்லி அங்குள்ள நிலைக்கண்ணாடியில் தன்னை யலங்கரித்துக் கொண்டும், தான் கொண்ட அலங்காரம் தனக்குப் பொருத்தமாக இருப்பதையும் திருப்பித் திருப்பிப்பார்த்து ஒழுங்கு செய்துகொண்டிருந்தாள். அவள் செய்கைகளைக் கண்ட நீலாவுக்கு அவள் எங்கோ வெளியே செல்லப்போவதாகத் தெரிந்தது. அவள் புருஷன் அன்று மிகுந்த தலைநோயால் அவஸ்தைப்பட்டதால் நீலா அவருக்கு உப

சரணை செய்து மிகுந்த கலக்கங்கொண்டிருந்தாள். எங்கே தன் புருஷனையும் அவள் அழைத்துப் போய்விடுவாளோ என்று அவள் மனது கவலைகொண்டது. அவள் கவலைக்குச் சரியாக அமிர்தவல்லி மிகுந்த குதூகலத்துடன் பத்மநாபனிடம் சென்று, தான் வெளியே மிக அவஸரமாகச் செல்லவேண்டியிருப்பதால் அவரையும் உடனே புறப்படும்படி அவஸரப்படுத்தினுள். அதைக்கேட்ட நீலா, அமிர்தம்! இன்று நீ அவரைத் தொந்தரவு செய்யாதே. நீ வேண்டுமானல் வெளியே உலாவிவிட்டு வா. அவருடைய தேக அசௌகரியம் உனக்குத் தெரியாதா என்றுள்.

அமிர்தவல்லி:—அவருக்கென்ன இப்பொழுது உடம்பு? சும்மா வீட்டி லடைபட்டுக்கிடந்தால் தலைவலி வராதா? அவரைப் பற்றிய கவலை உனக்குத்தானு? எனக்குமட்டு மில்லையா?

நீலா:—அதெல்லா மெதற்கு? இன்று நீ மட்டும் செல். அவருடைய நன்மைக்காகத்தான் நான் சொன்னேன். பிறகு உங்களிஷ்டம்.

பத்மநாபன்:—ஆம், அமிர்தவல்லி, நீ மட்டும் சென்றுவா, எனக்கு உடம்பு ஏதோ ஓர் மாதிரியாகவே யிருக்கிறது.

அமிர்தவல்லி:—அதென்ன நீங்கள்கூட இப்படிப் பேசுகிறீர்கள்? சும்மா எப்பொழுதும் படுத்திருப்பது தலைவலிதான். வெளியே காற்றில் உலாவிவிட்டு வந்தால் உடம்பு ஸரியாய்விடும்.

பத்மநாபன்:—இல்லை அமிர்தம், நான் வராததைப்பற்றிக் கோபங் கொள்ளாதே. கொஞ்சம் மன்னி.

என்று கெஞ்சிக் கேட்டதின்பேரில் அமிர்தவல்லி ஒப்புக்கொண்டு நீலாவை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தன் மோட்டாரில் ஏறிச் சென்றுவிட்டாள்.

நீலாவின் ஸஞ்சல ஜீவியமும், அமிர்தவல்லியின் கவலையற்ற வாழ்க்கையும் இரண்டும் பத்மநாபனுக்குச் சமமாகவே தோன்றியது. "பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்" என்னும் பழமொழியைப்போல நீலாவின் மனத்துயரம் அதிகரித்தே வந்தது. உலகத்தில் முதல் தெய்வமான தாயைப் பறிகொடுக்கும்படியான துர்ப்பாக்கியமும் நீலாவுக்கு ஏற்பட்டது. பரிதாபம்! நீலாவின் துயர் சொல்லவும் வேண்டுமோ?

அவள் மூர்ச்சித்து விழுந்தாள். பத்மநாபன் மிகவும் துயரடைந்தான். நீலாவுக்குத் தேறுதல் சொல்லியும் அவள் துயரம் ஆறவேயில்லை. ஆகா கஷ்டம்! மகாதேவையரின் மனைவியான பாகீரதியம்மாள் பகவானின் நிலையான அன்பிற்குப் பாத்திரமாய் உத்தமோத்தமியாய் மங்கள ஸ்வரூபியாய் பேரின்பத்தில் கரைந்தாள். மகாதேவையர் பித்தம் பிடித்தவரானார். மற்றுமுள்ளாரனைவரும் அவ்வம்மணியின் பிரிவிற்காக மிகவும் துயருற்றனர். குழந்தைபோன்ற நடராஜன் விம்மி மிக வாடினான். மருமகளாகிய ஸரஸ்வதி, மாமி தாயினும் இனியவளாயிருந்தாளாதலால் கொடுந்துயருக்காளானாள். அவர்கள் வீடு பிரகாச மென்பதில்லாமல் அந்தகாரங் குடிகொண்டாற்போலுமிருந்தது. உலகத்தில் ஈசுவர பக்தியும் நல்லொழுக்கமுமுள்ள பிதா மாதாக்கள் உடைமையே பெரும் பாக்கியமன்றோ? தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை.

நீலாவின் ஸகிக்க முடியாத் துயர் பெருகிக்கொண்டே வந்தது. அவள் அதுவே ஏக்கமாக வியாதியுடன் இருக்கும்படி நேர்ந்தது. அவள் தோழி ஸரஸ்வதியின் வாஞ்சையான தேறுதல்களால் அவள் கொஞ்சம் குணப்பட்டாள். மகாதேவையர் சம்சார வாழ்க்கையில் வெறுப்புற்றார். உலக மாயை என்ற பாசம் அவரைக் கொஞ்சங் கொஞ்சமாகவிட ஆரம்பித்தது. நடராஜனுடைய சிறு குழந்தைத் தன்மையான ஒரு வேண்டுகோளுக்காக அவர் முற்றும் துறக்க முடியாதவராயிருந்தார். இருந்தாலும் அவரது ஹிருதயம் விட்டதும் விடாததுமா யிருந்தது. தன்னுடையது பிறருடையது என்னும் ஒற்றுமை வேற்றுமைகள் அவரை விட்டு நீங்கின. அவர் அடிக்கடி நித்தியானந்தத்தை நாடிக்கொண்டு புஷ்பவன மடத்தில் புஷ்பித்த ஹிருதயத்தோடு ஞானமாகிய வாஸனையைப் பெற்றார். இச்சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயன்றோ?

எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

(தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஹுஸத்திய மார்கழி மாத பஞ்சாங்கம்.

கஜேசஷ் 5—20 — ஜனவரீ௴ 1935௵

யோகம்	இங்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
பி-ஸி	15	1	சனி	[விருத்தி யர்க்கம தனுர்மீ பூஜாரம்பம். தச 46-57, ரே 45-10, சாபரவி 23-31, ஷடசீதி.
ஸி-பி	16	2	ஞா	ஏகா 45-24, அசு 45-8, வைகுண்ட ஏகாதஸி.
ஸி-ம	17	3	திங்	துவா 44 51, பர 46-5, மத்விய-கண்ட துவாதஸி.
ஸி-அ	18	4	செவ்	திர 45-23, கிரு 48-4, பிரதோஷம், கிருத்திகா— ஹநுமத் விரதம்.
ஸி	19	5	புத	சஸி 47-1. ரோ 51-8, பாஷாண கௌரீவிரதம்.
ம	20	6	வியா	○ 49-52. மிரு 55-22, கரிநாள், சிதம்பர தீர்த்தம்.
ஸி	21	7	வெ	பிர 53-53, ஆரு 60-0, (ராத்திரி) ஆருத்திரா பிஷேகம், சடையர் ரகுநாதர்.
ஸி	22	8	சனி	துவி 59-0, ஆரு 0-41, உதயம் ஆருத்திராதரிசனம்.
ஸி	23	9	ஞா	திரி 60-0, புந 7-2, கரிநாள், மகராயனம் 29-32.
ஸி	24	10	திங்	திரி 5-2, பூச 14-13.
ஸி	25	11	செவ்	சது 11 40, ஆயி 21-57, கரிநாள்.
ஸி-அ	26	12	புத	பஞ் 18-32, மக 29-45, அதிதி.
ஸி-ம	27	13	வியா	ஷஷ் 25-0. பூர 37-4.
ஸி-அ	28	14	வெ	ஸப் 30-25, உத் 43-23.
ம	29	15	சனி	அஷ் 34-23, ஹஸ் 48-11.
ஸி	30	16	ஞா	நவ 36-30, சித் 51-11.
அ-ம	31	17	திங்	தச 36-36. ஸ்வா 52-12.
ம-ஸி	1	18	செவ்	ஏகா 34-40, விசா 51-15, ஸர்வைகாதஸி.
அ-ஸி	2	19	புத	துவா 30-49, அநு 48-32, பிரதோஷம்.
பி-ஸி	3	20	வியா	திர 25-17, கேட் 44-16, சிவராத்திரி, தொண்ட ரடிப் பொடியாழ்வார்.
அ-பி	4	21	வெ	சஸி 18-19, மூல 38-49, திதி துவயம்.
ஸி	5	22	சனி	● 10-28, பூரா 32-35, சாக்கியர்.
அ	6	23	ஞா	பிர 2-10, உப 51-34, உரா 25-59.
அ-ஸி	7	24	திங்	திரி 45-29, ஸ்ரவ 19-21, ஷவ்வால்மீ 1௳
ஸி-ம	8	25	செவ்	சது 37-47, அவி 13-13. தூர்வா கணபதிவிரதம்.
ஸி-அ	9	26	புத	பஞ் 30-58, சத 7-49, வியதீபாத புண்ணியகாலம்.
ஸி	10	27	வியா	ஷஷ் 25-15, பூட் 3-29, ஷஷ்டி விரதம், கூடார வல்லி.
ஸி-அ	11	28	வெ	ஸப் 21-5, உட் 0-22, உப 58-16, திதி துவயம்.
ஸி	12	29	சனி	அஷ் 18-18, அசு 58-24, தாத்ரீ கௌரீவிரதம்.
பி-ஸி	13	30	ஞா	நவ 17-2, பர 59-34, மகாரவி 49-47, சாபம்-மகரம் சுத்த தசமி திதி போகி பண்டகை, தனுர்மீ பூஜை முடிவு.

சனி ராகு	15௳ உதயத்திற்கு ராசி		கேது
சுக் புத	ரவி	குரு	குஜ

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.